# பேழை

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

### எருவில் அருள்மிகு ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்



வெளியீடு
கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை
எருவில்
22.04.2019

# பேழை

## மகா கும்பாபிஷேக
## சிறப்பு மலர்

### எருவில்
### அருள்மிகு ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்



வெளியீடு
கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை - எருவில்
22.04.2019

# உள்வாங்கப்பட்டவை


01. சுவாமி தக்ஷஜானந்தர் இராமகிருஷ்ண மிஷன் ஆசிச்செய்தி - i

02. கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார் ஆசிச்செய்தி - ii

03. சிவயோகச் செல்வர் சாம்பசிவ சிவாச்சாரியார் ஆசிச்செய்தி - vii

04. திரு கோபால் பத்தினியர் பூசகர் ஆசிச்செய்தி - xii

05. திரு.மா.சுந்தர்லிங்கம் ஆலய தலைவர் கருத்துரை - xiii

06. மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துரைச் செய்தி - xv

07. பிரதேச செயலாளரின் வாழ்த்துரைச் செய்தி - xvi

08. திரு.ச. ரகுராமமூர்த்தி வண்ணக்கரின் வாழ்த்துச்செய்தி - xviii

09. திரு.க. அமிர்தலிங்கம் செயலாளரின் வாழ்த்துச் செய்தி - xix

10. திரு.சோ. தினகரன்பிள்ளை மணியகாரரின் வாழ்த்துச் செய்தி - xxi

11. மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி - xxiii

12. கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி - xxv

13. இந்து கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி - xxvii

14. களுவாஞ்சிகுடி கிராம தலைவரின் வாழ்த்துச் செய்தி - xxviii

15. மகிழூர் கண்ணகியம்மன் ஆலயதலைவரின் வாழ்த்துச் செய்தி - xxx

16. திரு.ஐ. சுப்ரமணியம் வாழ்த்துச் செய்தி - xxxii

17. திரு.வீர இராசமாணிக்கம் வாழ்த்துச் செய்தி - xxxiii

18. ஆலய கட்டட ஸ்தபதியின் வாழ்த்துச் செய்தி - xxxv

19. எருவில் கண்ணகியம்மன் ஆலய நிருவாக கட்டமைப்பு - xxxvi

20. மலராக்கக் குழு விபரம் - xxxvii

21. ஆலய முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் - 1

22. உங்களோடு நான் - 3

23. காவிய நாயகி கண்ணகி - 5

24. எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள் - 14

25. உற்சவ காலத்தின் போது பின்பற்றப்படும் மரபுகள் - 24

26. இலங்கைப் பதியில் கண்ணகி வழிபாடு - 25

27. கண்ணகி கோவலன் முற்பிறப்புக் கதை - 37

28. கண்ணகி வரலாற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் - 40

29. கும்பாபிஷேக குருமார்களின் வாழ்த்துப்பா - 45

30. ஆலய நிருவாக சபையினருக்கான வாழ்த்துப்பா - 48

31. கட்டட ஸ்தபதிக்கான வாழ்த்துப்பா - 51

32. நவகுண்டபக்ஷ கும்பாபிஷேக வகையும் முகூர்த்த நிர்ணயவிதியும் - 53

33. எருவில் எனும் பதி - 61

34. எருவிலின் சாகித்தியங்களும் மரபுகளும் - 76

35. எருவில் கிராம மக்கள் ஏனைய அயற் கிராமங்களிலுள்ள....... - 82

36. இந்து சமயத்தில் சாக்த வழிபாடு - 84

37. அறநெறிக்கல்வியும் ஆலயங்களின் பங்களிப்பும் - 87

38. இந்துக்களின் பண்பாட்டு அம்சங்களில் சில - 89

39. சைவமும் மத மாற்றமும் - 93

40. சமயமும் விஞ்ஞானமும் ஒரு பார்வை - 96

41. கோயில்களும் அறப்பணிகளும் - 99

42. வாழ்க்கைக்கான கல்விகளில் அறநெறிக் கல்வியின்.... - 102

43. தமிழரின் மருவிய பாரம்பரிய விளையாட்டுக்களும்..... - 107

44. இந்து விரதமும் அனுட்டிக்கும் முறைகளும் - 110

45. ஆலய கட்டட வளர்ச்சிக்கு உதவி செய்த...... - 114

# இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரம சிறுவர் இல்ல பொது முகாமையாளர் அவர்களின் ஆசிச் செய்தி

கிழக்கிலங்கையின் புகழ் பெற்ற ஆலயங்களில் ஒன்றான எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக கிரியை எதிர்வரும் 22.04.2019 அன்று நடைபெற உள்ளதையும், கும்பாபிஷேக சிறப்பு மலரொன்றை வெளியிட உள்ளதையும் அறிந்து ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி.

"நம் நாடு இன்னும் வாழ்ந்து வருகிறது, ஏனெனில் அது கடவுள், மதம், மற்றும் ஆன்மீகக் கருவூலங்களைக் கைவிடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது" என்கிறார் சுவாமி விவேகானந்தர். இதற்கு ஏற்ப எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினரும் குடமுழுக்குப் பெருவிழாவினை மேற்கொண்டுள்ளனர். ஆலயமொன்றிலே திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மகா கும்பாபிஷேகம் எனும் பெருவிழாவாகும். பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாச்சாரியார் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்கினியிலும் கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலைபெற்றிருந்து ஆன்ம கோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மகா கும்பாபிஷேகத்தின் நோக்கமாகும்.

எனவே இக் கும்பாபிஷேக நிகழ்வை ஒட்டி வெளியிட இருக்கும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டுப் பணிகள் செவ்வனே நடைபெறவும், மலர் வெளியீட்டுடன் தொடர்பு பட்ட அனைவருக்கும் இறைவன் அருள்புரிய வேண்டுமெனவும், தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம். மேலும் கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் நமது இந்து மதத்தை மக்களிடையே பரவச் செய்யும் செயல் தலங்களாகவும் விளங்கச் செய்தல் வேண்டும். அத்துடன் இந்து மதப் பாடங்களை சிறார்கள் மற்றும் பெரியோருக்கு எடுத்துரைக்க ஆவன செய்ய கேட்டுக்கொள்கின்றோம்.

- நன்றி -

என்றும் இறைபணியில்

**(சுவாமி தக்ஷஜானந்தர்)**

பொது முகாமையாளர்

இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரம & சிறுவர் இல்லம்

கல்லடி, மட்டக்களப்பு.

உ
சிவ சக்தி மயம்
பத்தினிக் கண்ணகியே போற்றியோ போற்றி ஓம்சக்தி

பட்டிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர், புதுக்குடியிருப்பு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயங்களின் பிரதம குருவும்,

மட்டக்களப்பு எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பிரதம குருவும்

# வரலாற்று வாழ்த்துடன் ஆசியுரை

"மேன்மை கொள் வைச நீதி விளங்குக உலகமெல்லாம்"

உலகில் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி" சைவத்தமிழ் குடி நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஒழுக்க நெறியிலும் தலை சிறந்தவர்களாக சைவத் தமிழ் மக்கள் வாழ்ந்தனர். புராதன காலம் தொட்டு கடவுள் வழிபாடு சமய சடங்குகளும் அனுஷ்டான முறைகளும் மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது.

இறைவனும் இறைவியும் எங்கும் நிறைந்து இருப்பினும் இறைவன் இறைவிக்காக நாம் ஏற்படுத்தும் புனித இடங்களே ஆலயங்களாகும். எமது புலனுணர்வை ஒடுக்கி இறையருளைப் பெறும் தெய்வீகச் சூழல் ஆலயத்தில் கிடைக்கின்றது.

ஈழத்திரு நாட்டின் கிழக்கு மாகாணத்தில் கடலுடன் வாவி சூழ்ந்தோடும் மீன்கள் பாடும் தேன் நாட்டில் உதய சூரியன் உதித்தெழ செந்நிற வடிவாய் கிழக்கின் மலராய் மிளிரும் மட்டக்களப்பு மாவட்டம் காவிய நாயகி கண்ணகி தாயின் வழிபாட்டிற்கு உரிய மாவட்டமாக விளங்குகின்றது.

மகாபாரத, இராமாயணக் கதை மரபுகள் பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்டிருப்பது போல கண்ணகி கதையும் பல்வேறு கிளை மரபுகளைக் கொண்டுள்ளது. இதனாலேயே எம்மக்கள் மத்தியில் சிலப்பதிகாரம், கோவலன் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை எனப் பல கதைகள் கிளை மரபுக் கதைகளாக உள்ளன. மட்டக்களப்பில் புகுந்த கண்ணகி வழிபாடு தனக்கென வழிபாட்டு முறைகளையும், தனக்கென இலக்கிய மரபுகளையும் கொண்டதாக விளங்குகின்றன.

இலங்கையில் சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை என்பன கண்ணகி பற்றி வந்த பேரிலக்கியங்களாகும். தமிழ் நாட்டுக்கு "சிலப்பதிகாரம்" போல இலங்கையின் வன்னிப் பகுதிக்கு "சிலம்பு கூறல்" போல இலங்கையின் கிழக்குப் பகுதிக்குக் குறிப்பாக மட்டக்களப்புக்குரிய கண்ணகி இலக்கியமாக கண்ணகி வழக்குரை காணப்படுகின்றது.

சிலப்பதிகாரம் மானுடப் பெண்ணைத் தெய்வப் பெண்ணாகக் காட்டி நிற்க வழக்குரை காவியமோ தெய்வப் பெண்ணை மானுடப் பெண்ணாகக் காட்டுகின்றது.

மனிதன் தெய்வமாதலும், தெய்வம் மனிதராதலும் கிழக்கு நாட்டுச் சமயத்தின் உயிர் நாடி கண்ணகி வழக்குரையில் கண்ணகிக்கு ஒரு புராண வரலாறு கற்பிக்கப்படுகின்றது. மகா சக்தி கயிலைநாதன் பாகம் உறை கயிலை நாயகி பற்பல வடிவாய் அவதாரங்கள் எடுத்தது போன்று இக் கலியுகத்தில் மானாகர் மகள் கண்ணகியும்.

மனிதரும் தேவரும் மயா - முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடி கோமளமே - கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் - பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்திளந் - நாளும் பொருந்துகவே,

என்பதற்கு அமைய மானிடப் பெண்ணாக அவதரித்த கண்ணகி மானிடத் தெய்வமாகவும், காவிய நாயகியாகவும் கற்புக்கரசியாகவும் கண்ணகியை போற்றி வழிபடுகின்றனர்.

ஏற்றமுறு எருவில் பதியில் பத்தினிக் கண்ணகி அம்மன் ஆலயமானது இன்றைக்கு 12ம் நூற்றாண்டுக்கு முன் இவ்விடம் காடுகள் சோலையாகவும் ஆலோடு, அரசு, காஞ்சுரை, தேத்தா, கொன்றை, வேம்பு, குருந்தையுடன், வீரை, கூளா, மரமுந்திரிகை, ஆரியப் பூங்கொடி, பட்டிப்பூ, இன்னும் பற்பல செடி கொடிகள் துளசி, பேய் மிரட்டி, அறுகு, முக்கனியின் ஒன்றான பலா இருந்ததாகவும் முன்னவர்கள் வாழையடி வாழையென கூறிவரும் வழிமுறையின் படி இவ்விடமதனில் சிறிய குடில் அமைந்து வழிபட்டதாகவும், 13ம் நூற்றாண்டு முன் பின் பத்ததி முறையில் வழிபட்டதாகவும் விநாயகர் முதல் கொண்டு வெவ்வேறு தெய்வங்களை கிராமிய தெய்வமாகவும் இஷ்டகுல தெய்வம் போலவும் பூசைகள் செய்ததாகவும் கூறப்படுகின்றது. 15ம் நூற்றாண்டுக்கு முன் பின் மட்டாற்றில் பேழை மிதப்பது கண்டு, எருவில் கிராமத்தின்

வயல் நிலம் வேப்பையடிமேடு, நெரிஞ்சிமேடு, அம்மன் மேடு ஆகிய வயல் இடங்களில் செய்த வேளாண்மை மழை நீர் இன்றி வாடி அழிவது கண்டு அப்பேழையை எடுத்து வணங்கி தாயை நினைத்து நேர்த்தி செய்து பச்சை மண்பானை வைத்து மடைசாத்தி, பொங்கல் செய்து, படையல் செய்வோம் என வேண்டுதல் பண்ண உடன் மழை பெய்து, வேளாண்மை தழைத்ததாகவும், அதன் பின் அவ்வாறு பூசை செய்து வணங்கி அம்மனையும் பேழையையும் சுமந்து அரகரா கோசத்தோடு கோடரிவெடி குரவை கொட்டு மேளத்துடன் கொண்டு வைத்து வணங்கி வரும்போது பட்ட பலா மரத்தில் பலாப்பழம் மணப்பது கண்டு மரத்தின் போரைப் பார்த்தபோது பழங்கண்டு அதனை பிடிங்கி எடுத்து வெட்டி பூசை செய்ததாகவும் அதன் பின் பட்ட மரம் தழைத்ததாகவும் அதனால் பட்ட மரம் தழைக்க வைத்த கண்ணகி என்று பெயர் வந்ததாகவும் கூறுவர். ஏழு தலைமுறைக்கு மேல் இருக்கும் முன்னவரை மறப்பது பித்துரு குற்றமாகும். எனவே இன்னவர்கள் தங்களுடைய கடமைகளை செய்வதற்காகவும், சூரிய நமஸ்காரம் செய்வதற்கு கடற்கரைக்கு செல்வது வழக்கம். ஒரு நாள் செல்லும் போது கடலில் பெரிய மரம் ஒன்று கரையில் அடைந்து கிடப்பது கண்டு அதனை யானை மீது ஏற்றி வந்து அரிவை செய்து ஆலயம் அமைத்ததாகவும் வரலாறு உண்டு. அதன் பின் வகுத்த குல வழக்கம், குடியுரிமை, ஆலய நிர்வாக வழிமுறை, திருச்சடங்குமுறை எம் மக்களின் பாரம்பரிய உரிமையை பாதுகாக்கும் வகையில் வழிகாட்டி நிற்கின்றன.

எனவே இன்னவர்கள் இறைவன் இறைவி மேல் வைத்த பேரானந்தத்தின் முடிவின்படி திடசங்கற்பத்தின் அருளோடு பழமை பொருந்தி பெரும் பதியை (ஆலயத்தை) விலக்கி தற்காலத்துக்கு ஏற்றால் போல் புதிய கலை அழகுடன் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆலய பரிபாலன சபையினரும் குடிமக்களும் சேர்ந்து விளம்பி வருஷம் ஆனித்திங்கள் 27ம் நாள் (11.07.2018) புதன்கிழமை பாலஸ்த்தாபன கும்பாபிஷேகம் செய்து பழைய ஆலய கட்டிடங்களை விடுவித்து தூய்மை செய்து பூமியில் சல்லிபார்த்து ஆகம சிற்ப சாஸ்த்திர அளவு செய்து சற்பமாலிகா யோக மண்டலம் வரைந்து மஹா கணபதி, கண்ணகித்தாய், பூமிதேவி, சகல தெய்வங்களுக்கும், தச திக்கு பாலகர்களுக்கும் பூசை வழிபாடுகள் செய்து முன்னவர்களின் அருளாசியோடு குருமார்கள், ஸ்தபதி, ஆலய அறங்காவலர்கள் குடி மக்கள் கண்ணகித் தாயின் அடியார்கள் அனைவரும் சேர்ந்து விளம்பி வருஷம் ஆடித் திங்கள் 14ம் நாள் 30.07.2018 திங்கட்கிழமை புதிய ஆலயத்திற்கான அடிக்கல் வலம்புரி இடம்புரி சங்குஸ்தாபனத்துடன் அடிக்கல் நாட்டு விழா சிறப்பாக நடைபெற்று,

இவ் ஆலயம் புதுப்பொலிவுடன் பத்து மாதங்களுக்குள் நிறை காண்பதை இட்டு மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

“பொங்குறு கல்வி, செல்வம் வீரம் பொருவிலா
வாய்மை தூய்மை எங்குமே வளர வேண்டி
இயற்கையாய்த் தோன்றும் தேவா”

கணநாதன், கந்தன் தாய் கயிலை நாயகி மானுட தெய்வாய் வந்துதித்த பத்தினி கண்ணகித் தாய்க்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மலர்ந்துள்ள சர்வ மங்கலகரமான விகாரி வருஷம் சித்திரைத் திங்கள் 9ம் நாள் (22.04.2019) திங்கட்கிழமை நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெரும் சாந்தி திருக்குடமுழுக்கு பெருவிழா கண்டு மகிழ்வடைவதோடு, ஆலயத்தில் உறைந்திருக்கும் இறைவன் இறைவி பஞ்ச பூதங்களுக்கு தலைவன் தலைவி என மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் வெளிப்படுத்துகின்றார்.

“பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விரிந்தாய் போற்றி”

என ஐம்பூதங்களின் வாயிலாக இறைவன் இறைவி விரிந்திருப்பதைக் குறிப்பிட்டுள்ளார். ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்கள், யாக வழிபாடுகள், உற்சவங்கள், திருச்சடங்குகள் நித்திய பூசைகள் என்பன பஞ்சபூத வழிபாட்டைக் காட்டி நிற்கின்றன.

எமது ஆலயமானது கலைக் கோவிலாக அமைந்தது இறையுணர்விற்கு மாத்திரமின்றி கலையுணர்வின் பிறப்பிடமாகவும் விளங்க வேண்டும் அது மட்டுமல்லாமல் எம் மக்களின் அறநெறி, பண்பாடு, பாரம்பரிய ஒழுக்க நெறி முதலான உணர்வுகளை வளர்க்கும் களமாக மிளிரவேண்டும் நாங்கள் கண்ணகித் தாய்க்கு புதுப்பொலிவுடன் ஆலயம் அமைத்து இவ்வாண்டிற்கான திருச்சடங்கு விழா மூலம் மக்கள் மன நிறைவு காண வேண்டும் என்ற எண்ணத்துடன் அயராது செயற்பட்ட ஆலய பரிபாலன சபையினருக்கும், குடித் தலைவர்களுக்கும், குடி மக்களுக்கும், கண்ணகித் தாயின்

மெய் அடியார்களுக்கும் கும்பாபிஷேக மலரை வெளியிடுகின்ற மலர் குழுவினருக்கும் பரம்பொருளாம் கண்ணகி அம்மாவின் திருவடிகளை வணங்கி முன்னவர் ஆசியுடன் உளம் மகிழ்ந்து குன்றாத வாழ்வு, குறையாத செல்வம், மங்காப்புகழ், வச்சிர தேகம், மார்க்கண்டன் ஆயுள், உடன் திருவருளும் குருவருளும் இறைவி தாழ் பணிந்து நல்லாசிகள் நவில்வதோடு, நாட்டிலே சாந்தி, சமாதானம் சௌபாக்கியத்துடன் அனைத்து மக்களும் சகல ஜீவராசிகளும் நற்பிரஜைகளாக இவ் மண்ணில் நல்ல வண்ணமாக வாழ வாழ்த்துகின்றேன்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!
வாழ்க சைவநெறி
வளர்க மனித இனம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இவ்வண்ணம்
**கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார்**
**சிவாகம பிரதிஸ்டா பூஷணம், கிரியாஜோதி சிவகிரி**
**அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ இரா.கு. கோபாலசிங்கம் குருக்கள்**
**"அபிதாலயம்"**
எருவில் கிழக்கு,
எருவில்.

# சிவயோகச் செல்வர் சாம்பசிவாச்சாரியர் அவர்களின் ஆசிச்செய்தி

உபன்யாசமணி - கரிததாவாரி - சரஸ்வதிகடாட்சகர் முத்தமிழரசு திருக்கோணை
சிவயோக செல்வர் சாம்பசிவ சிவாச்சாரியார் மட்/காயத்ரி பீட பீடாதிபதி

எருவில் திருத்தல
நிருத்த நாயகிதன்
இரு பதமிறைஞ்ச

ஒரு துயரும் வாரா அம்மானாய்

அற்புதச் சக்தி அமலையை போற்ற தற்பரை கண்ணகை தேவியை போற்ற பொற் சிலம்பினால் நீதி பெற்றாளை போற்ற கொற்றவை வந்தமர் எருவிலை சேர்மின்

பண்டைத் தமிழர்தம் பண்பாட்டுத் தெய்வம் சோழ சேர பாண்டிய நாடுகள் போற்றி ஏத்திய தெய்வம் கஜபாகு மன்னனால் ஈழமணி திருநாட்டில் பணியும் பத்தினித் தெய்வம் வைகாசித் திங்களில் சடங்கேற்று குளிர்ந்தாடி அருளியும் தெய்வம் எருவில் வாழ் மக்களின் இதயத் தெய்வம் அன்னையாக

குருந்தை தரு நிழலில்
அமர்ந்தாண்டருளும்
திருமடந்தை ஸ்ரீ தேவி
கண்ணகை தருக்கன்
சூழாவாலரசு வீரை

தேத்தா வெண்மணவில்
சூழாங்கல் லாடிக் குரவை
கோதையாய் பிணி தீர்தாய்

உருவம் பெற்ற நான் முதலாயிம் உருசம் மிகுந்த பலவூர் ஆலயங்களை அருமை பெருமைசீர் வாவி சூழ் சிருறு வயல்களில் விரால்கள் நடமிட பெருமகிழ்வோடு நீர்வாழ் ஜீவர்கள் கீதம் பாட திருநிறை மட்டூர் களுவாஞ்சிக்குடிசேர் எருவிற் பகுதியில் சிவ நெறி ஓச்சுமேர் பெருங்குரவைப் பெண்டீர் ஆடவர்கள் ஒருங்குடன் கூடி வைகாசித் திங்களில் சக்திச் சடங்கினை சாருப்யமாகத்தம் அருளொனிக்கண்ணகை குளிர்த்தியை நிருதம், வசந்தன், குரவை, நிரவலொடு குருநோய்கள் வாராமற் கார்தாயே என்று

ஒருமை காண்ப தற் ஒரு பிறப்பாளராய் திருக்கோயில் எழுப்பினர் ஒன்பது மாதத்துள் அருட்துணையாய் அவள் தண்ணருள் பெற்றதால் கருக் கொண்ட கோயிலை குட முழுக்காட்டி உருத்திகழ் கண்ணகைத்தாய் பேரருள் பெற்றனர்.

ஆத்ம சுத்தி மிக்க ஆக்கப்பணி செய்தோரை பத்திரத்தால் ஏத்திய பூசகரை கொதியெண்ணை மத்துபடு வெண்ணெய்யாய் குளிரச் செய்து காத்தவளே. ஆத்தாளே ஆரபியே ஆச்சியர் தாயாரே நித்த நித்தம் காத்தாண்டுறிறை வாழ் வருளுமம்மா பக்தினியே கற்பரசி பரைநீலி கண்பாராய் சுத்த சக்தி நின்னுடைய சேவடிக்கீழ்வைத் தாள்க.

ஆராலும் அளவிடற்கரிய திருப்பொலிவு ஆரோகணிக்க அருமை செறிமாநாகர் மகளாகி அதி அற்புத சக்தியாக மிளிந்தவளை காராளர் குலமகளாய் வந்துதித்த பொறுமைத்திருமகளை மாசாத்தார் மருமகளாகி சீராளன் கோவலர்க்கு தர்ம பத்தினியானாளை துர்க்கையோ வீரச்சுரிகுழலாள் பத்திரையோ தர்க்கவுரை மிக்கபல சாற்றிய வித்தக பெண்ணாள் கொற்றவனைக் கோடி விட்ட நிதிபுரி கூடலுடன் சாடி விட வந்தவளை ஆராதனைக்குரிய அற்புத சக்தியாக மிளிர்ந்தவளை ஈழத்திரு நாட்டின் குண திசை மண் அறுபதுக்கு மேலான ஆலயங்களை கட்டிப் பூசித்து வருகின்றது

இவற்றுள் மூர்த்தி தலம் தரு தீர்த்தம் முறையாய் அமைந்த ஆலயங்களுள் எருவில் பதியில் அமர்ந்தருள் கண்ணகா தேவி அற்புதச் சிறப்பு மிக்கவள். ஆக்ரோச பத்தினியாக மதுரை வீதியில் உலவியவள் எருவிலிலும் பேழையில் அமர்ந்து வந்து மாங்கனியே மாதா என் தாயேயெனப் பணிவோர்க்கு மங்களப் பேரொளியாக அமர்ந்தருள் செய்கிறாள்

வந்துற்றாள் கண்ணகையான்
வாழ் மதுரை வீதியிலே
தொந்தனரே கண்டவர்கள்
நுண்ணிடையை - எந்தாயே
கொற்றவையோ வீர
குல மகளோ கோதுபடா
கற்பனலோ பத்திரையோ
காண் குரவை நாச்சியரே

எனும் பழம் செய்யுளை எருவில் வாழ் மக்கள் சிந்தை மலரை தூவித்தூவி சேவிக்கும்

பாங்கே ஓர் தனி அழகாகும் ஆதி பரைதன் அற்புத திருக்கோயிலில் 1964ம் ஆண்டு சிறுவனாக வந்து கதாப்பிரசங்கம் செய்த நாளையும் 2019ல் வந்து அகோர சிவாச்சாரியார் சிவப் பிரம்ம ஸ்ரீ கோபாலசிங்கம் ஐயா சிவப்பிரம்ம ஸ்ரீ கட்டுப்பிள்ளையார் துரந்தரர் குணகேந்திரர் சிவஸ்ரீ கோபால கிரிதர குருமார்களோடு இணைந்து ஒன்றி குடமுழுக்காட்டிய புனித சுபமுகூர்த்த நாளையும் தாயாரின் தெய்வீக மூச்சை அனுபவித்து காதலாகி கசித்து கண்ணீர் மல்கிய நேரத்தை மறக்கமுடியா.

கண்ணாரக் கண்டு ஆராதித்த 1964ல் அடியேனை ஈழத்திரு நாட்டின் இயற் தமிழ் கவிஞர் எருவில் மூர்த்தி அண்ணனே அழைத்து வந்தார். அவரது தமிழன்பு நாயேனை நல்ல தமிழ் பேச வைத்தது ஆன்றோர் கூடிய பல அரங்குகளில் உரை செய வைத்தது. எருவில் மூர்த்தி அண்ணாவின் குழந்தை மனத்தில் தமியேன் குழந்தையாக தவழ்ந்தவன் எருவில் என்றால் முதலில் நினைவுக்கு வருபவர் கவிஞரே சிவயோகச் செல்வா எருவில் கண்ணகை கருனை வடிவினள் நீடுநிலை கீர்த்தி மிக்க காருண்ய சக்தியென அவர் கூறிய வார்த்தை வானவர் வார்த்தை ஏன் தெரியமா?

முதற் குட முழுக்கு காலத்தில் வைத்த இடத்தில் அம்பாள் விக்ரகம் இல்லை பக்தர்களிடையே எங்கே எங்கே என்ற ஏக்க பெருமூச்சு அங்கலாய்ப்போடு தேடும் அடியாரின் அங்கம் வியர்த்தது சங்கம சல சலப்பு நீக்கமற நிறைந்தவளை எங்கே தேடுவது என்ற ஆர்ப்பரிப்பு; இந்த வேளை ஆலய கட்டாடியார் ஆவேசம் கொண்டாடத் தொடங்கினார் நாவேற பாவேற உருவேற கண்ணேறநெல் மணிக் குவியலை தாவிப் பற்றினார் மணியின் ஒளியே ஒளி புனைத்த அணியே அணிக்கழகே எனும் அபிராமி பட்டர்தம் அந்தாதி ஆதியந்த மில்லாளை ஓதற்கரிய ஒளிவு மறைவற்றவளை ஒப்பிலா சிறு உருவை மெய்ப்பித்த போது கண்ணகை மாதா நெல் மணிக்குவியலுள் ஜோதி மயமாகி காட்சி தந்த அந்த அற்புத நாளை மறக்க முடியுமா?

தேவி மஹாத்மியத்தில் தெளிவாய் கூறப்படும்
ஏதத்தே வதனம் சௌமியம்
லோசனத்ரய பூஷிதம்
பாது ந: ஸர்வ பீதிப்ய காத்யாயினி
நமோஸ்துதே

ஜ்வாலா - கரால - மத்யுக்ர மஷே ஸா
சுர - ஸூதனம்
த்ரிசூலம் சிலம்ப பாதுநோ
பீதோ பத்ர களிலி நமோஸ்துதே
ஹிநஸ்தி தைத்ய தேஜாம் ஸி
ஸ்வனே னா பூர்யயா ஜகத்!
ஸா கண்டாபாது நோ தேவி
பாபேப்யோ ந ஸூதானிவ

ஆகிய இ்.து போன்ற ஸ்துதிகள் கண்ணகாம்பிகா போன்ற சக்திகளின் பிரத்யட்ச ரூப தர்சன லீலைகளை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

கருவறையில் விசிறி அம்பிகையோடுறை ஒருகையடங்கு கற்பக கற்பரசியை கண்ட ஆனந்தத்தை விட எருவில் மூர்த்தி அன்றொருகால் மொழிந்த அற்புத மொழிகள் என்னுள்ளத்தில் எழுந்தது அன்று அப்பாளைப் பார்க்கத் துடித்த எனக்கு நாற்பத்து நான்கு ஆண்டின் பின் அம்பாளை என் தாயை நன்விழிச்சியை ஏந்தி தூக்கி தாலாட்டி சிந்தைகாவி மணிமங்கலப் பீடத்தில் உடுக்கிசையார் அமரவைத்த நேரத்தை தாயார் சேயென்மீது வைத்து கருணையை எவ்வண்ணம் எடுத்துரைப்பேன் ஆட்டு விக்கின்றான் யாம் ஆடுகின்றோம் இப் பிறவியில் யாம் பெற்ற பேறென மெய்தாணரும்பி விதிர் விதிர்த்து உடையாள். உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவில் நீயிருத்தி எனத்திருவாசகத் தேனால் அபிடேகித்தாராதித்தேன்

தென்னன் சோலை வளர் எருவில்
ஊர் வாழ் செல்ல திருமகளை
மின்னல் இடைமேற் பரந்தாடு
விரிகற்றை குழலாளை
மன்னுய் கரங்கள் தலை குவித்து
வணங்கி வாழ்த்தி மெய்குழற
என்தாய் நீயே என்றவள்பதத்தை
எண்ண மறவேன் அம்மாளே

எனப்பாடி பணிவதல்லால்
இம்மண்ணில் எமக்கென்ன வேலை
பழமை மாறா பக்தியினால்

பத்தினி பதத்தை பொழுதெல்லாம்
தொழுது அழுமின் தொண்டவர்காள்
தாயாள தாபரித்தாள்வாள் காண்

அழுதவள் அடியைபற்ற
அல்லல்களைவாள் அருள்பொழிவாள்
எழுமின் விழிமின் இளையோரே
எம்தாய் கண்ணகை புகழ் பாட

மெய்அன்பர்களே சில இடங்களுக்கு போகும் போது மிகவுயர்ந்த ஆன்மீக உணர்வுகள் கிடைக்கும் காரணம் திருத்தல விசேடம் அவ்வண்ணமே எண் திசையும் பச்சை பசேலென விரிந்து அமைதிழலை நல்கும் பெரு மரங்கள் ஆடி ஆடி வெக்கை தணிக்கும் தென்றலை வீசும் எழில் எருவில் ஸ்ரீ கண்ணகை அன்னையின் மகத்துவம் வல்வினை அறுத்து விக்கினம் அகற்றும் தீராப் பிணிமாற்று தொழுதழுதால் விழவிடாதேந்தும் தாய் பேரருட் சக்தியை போற்றி வணங்குவோம். அவள் திருவடியில் திருக்காவியமாக வாழ்வோம் அகவல்லமை பெற்று இன்புறுவோம்.

எருவில் பதியில் இணங்கியிருந்தருளும் தருவேயனைய கொடை தையலே - பெருநரகில் போயே விழுந்திரங்காப் புந்தி பல தந்தருளித் தாயே எமைக் காத்தருள்

ஓம் சக்தி ஓம் பராசக்தி

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பூசகர் அவர்களின் செய்தி

எமது கண்ணகியம்மன் ஆலயம் சுமார் 300 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயமாகும். இவ்வாலயத்தின் திருச்சடங்கு விதிமுறைகள் எமது முன்னோர் நிகழ்த்திய அதே முறையில் ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்ட பத்தாசி முறையில் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

எமது கண்ணகியம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் திங்கட்கிழமை அதிகாலை கதவு திறத்தலுடன் திருச்சடங்கு ஆரம்பமாகி வைகாசி மாத பூரணையை சார்ந்து வருகின்ற திங்கட்கிழமை அதிகாலை திருக்குளித்தியுடன் நிறைவு பெறுகின்ற ஏழு நாட்கள் திருச்சடங்கு நடைபெறுகின்றன.

ஊர் காவல் பண்ணுதல், கதவு திறத்தல், பூரண கும்பம் வைத்தல், கல்யாணக் கால் வெட்டுதல், திருக் கல்யாணச் சடங்கு, வட்டுக்குத்துதல், கண்ணகி வழக்குரை படித்தல், விநாயகர் பானை எழுத்தருளல், திருக்குளிர்த்திப் பாடுதல், திருக்கதவு அடைத்தல், எட்டாம் சடங்கு போன்ற சடங்கு முறைகள் இடம்பெறுகின்றன.

இச்சடங்கு முறைகளை ஆற்றுப்படுத்தும் பூசகர்கள் எனது பரம்பரை எனக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன்.

அண்ணாவி பத்தினியன் மூத்தாங்குட்டி கட்டாடியார், கந்தவனம் கட்டாடியார், கறுவல்தம்பி கட்டாடியார், கணபதிப்பிள்ளை கட்டாடியார் இவர்களுக்குப் பின் பூசகராக தொண்டு புரிகின்றேன்.

எமது கண்ணகியம்மன் ஆலயம் பல தடவை புனருத்தாரனம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றாலும், இப்பொழுது ஆலயம் சேதமுற்று முழுதாக புதிதாக அமைக்கப்பட்டு நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்புனித பணியில் ஈடுபட்ட, ஈடுபடுகின்ற அனைவருக்கும் கண்ணகித் தாயின் அருளாசி கிடைக்க வேண்டுமென பிராத்திக்கின்றேன்.

எல்லோருக்கும் எனது ஆசிகள்

**திரு. கோபால் பத்தினியன்**

ஆலய பூசகர்

# முகவுரை

"கண்ணுற்றேன் கருணை தந்தாய் கண்மணியே
எண்ணுற்றேன் எண்ணையிட்டாய் கண்ணகியே......" என கண்ணகித் தாயை வேண்டியவனாக ஆலய தர்மகத்தாக்களின் தலைவராக இருந்து கும்பாவிஷேக சிறப்பு மலரான பேழைக்கு முன்னுரை பகர்வதில் பெருமிதமடைகின்றேன். அம்மனின் அருள் ஆசியுடன் புதிய ஆலயம் அமைக்கப்பட்டு மஹாகும்பாவிஷேகம் நடைபெற சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைத்து உள்ளங்களையும் முதலில் நினைவு கூர்ந்தவனாக முன்னுரையைத் தொடர்கின்றேன்.

ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயமாகும் பசுவிலிருந்து பாலைப் பெறுவதற்கு உரிய இடத்திலிருந்தே பாலைப்பெறமுடியும். அது போல இறைவன் எங்கும் எதிலும் நிறைந்திருந்தாலும் ஆலய வழிபாட்டின் மூலமே இறையருளை பெறமுடியும்

"ஆலயத்தை வணங்கு ஆனந்தமாய் வாழ்வாய்" என்பதற்கேற்ப ஆலயத்தை வணங்க வேண்டும் அதன் மூலமே எமது இறுதி இலட்சியம் ஈடேறும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனது முன்னோரான சின்னத்தம்பி பாலிப்போடி வட்டவிதானை வழித்தோன்றலில் $2007^{ம்}$ ஆண்டில் இருந்து ஆலயத் தலைவர் பதவியை வசித்து வருகின்றேன் என்னுடன் இணைந்ததாக ஆலயச் செயலாளர் வண்ணக்கர், மணியகாரர், குடித் தலைவர்கள் ஆகியோர் நிருவாகத்தினராக எமது நிருவாக சபையினரின் ஆலோசனைப்படியும் கிராம மக்களின் பங்களிப்புக்களுடனும் வருடா வருடம் ஆலயத் திருச்சடங்குகள் நடைபெற்றுவந்தன எமது ஆலயம் மகிமையும் சிறப்பும் பொருந்தியதாக விளங்கியது. எனது தலைமையிலான நிருவாகத்தின் கீழ் பொதுச் சபையினரின் அங்கிகாரத்துடன் ஆலய வெளி வீதியின் நுழைவாயிற்கான கோபுரம் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டது. மேலும் காரியாலய திருத்த வேலைகள் முதலான வையும் இடம் பெற்றது.

இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அம்மனின் திருக்கல்யாண மண்டபத்தூண்கள் வெடிப்புற்றுக் காணப்பட்டது இதனை இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அம்மனின் திருக்கல்யான மண்டபத்தூண்கள் வெடிப்புற்றுக் காணப்பட்டது. இதனை அவதானித்த நாங்கள் ஆலய புனரமைப்பு தொடர்பாக கவனத்தைச் செலுத்தினோம் அந்த வேளையில்தான் எனக்கு அம்மனின் அருள் வாக்குக்

கிடைத்தது புதிய ஆலயம் அமைக்காவிட்டால் ஆபத்து நேரிடும் என்பதே அவ் அருள்வாக்கும் எனது பிரார்த்தனையையும் அருள் வாக்கையும் எனது உத்வேகத்தையும் ஆலய நிருவாக சபையினருக்கு தெளிவுபடுத்தினேன் அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர் இதற்கு ஏற்ப பொதுச்சபை அங்கிகாரமும் பெறப்பட்டது.

தற்காலிக ஆலயம் அமைத்து அம்மனை அதனுள் வைப்பதாக முடிவெடுத்து 11.07.2018ல் அன்னையின் அருளினால் அடிக்கல் நாட்டப்பட்டு ஒன்பது மாதங்களில் பிரமாண்டமாகக் காட்சி தரும் இவ்வாலயம் அமைக்கப்பட்டது இரவு பகல் பாராது எடுத்த முயற்சியினாலும் கிடைத்த பூரண ஒத்துழைப்புக்களினாலும் இன்று ஆலயம் அழகுகுறித் தோற்றமளிக்கிறது. இவ்வாலயம் கும்பாவிஷேக நிகழ்வுகள் நடைபெறுவதற்கு என்னோடு தோழோடு தோள் நின்று உழைத்த செயலாளர் வண்ணக்கர் மணியகாரர் குடித்தலைவர்கள் கட்டுமானக் குழுவினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இவ்வேளையில் பேழையில் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன் அத்துடன் புதிய ஆலயத்தை வடிவமைத்த ஸ்தபதி பொ.விஜயகுமார் குழுவினரின் கடின உழைப்பினை மெச்சிப் பாராட்டுவதோடு உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. மா. சுந்தரலிங்கம்** (தலைவர்)
ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய
பரிபாலன சபை எருவில்

# அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு தென்பால் களுவாஞ்சிக்குடி பிரதேசத்திற்குட்பட்ட எருவிலம்பதியில் கோயில் கொண்டு இறையருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கோயில்களில் வழிபாடுகள், பூசைகள், உற்சவங்கள் போன்றவற்றிற்கு அப்பால் ஆலயத்துடன் இணைந்த சமயம் சார்ந்த சமூகப்பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கமைய மானிட வாழ்வை நெறிப்படுத்துவதாகவும் நற்பண்புகளை வளர்ப்பதாகவும் ஆலயங்களும் அதன் பணிகளும் அமையும் போதுதான் அதன் உள்ளார்ந்த தத்துவத்தை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்ள முடியும். அன்பு, கருணை, இரக்கம், பொறுமை, தியாக சிந்தனை போன்ற பண்புகளை வளர்ப்பதே சமயத்தின் நோக்கமாகும். சமயச் சடங்குகளும் சமய விழாக்களும் இப்பண்புகளை வளர்க்க துணை புரிவதோடு இவ்வாலயம் சமய உணர்வையும் ஆன்மீகத் தேவையையும் மேம்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. வெளிவரும் கும்பாபிஷேக சிறப்பு மலர் ஆலயத்தின் சிறப்பையும் கிராமத்தின் பெருமையையும் அனைவரும் அறிய உதவுவதாக அமையும் என்பது தெளிவு.

எனவே இம்மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை தலைவர், செயலாளர் மற்றும் மலர் வெளியீட்டுக் குழுவினர் யாவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**மா. உதயகுமார்**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்

# பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு நகரின் தெற்கே தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களை பேணிக் காத்து வரும் பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றாக எருவில் கிராமம் அமைந்துள்ளது. இயற்கை எழில் நிறைந்த இக் கிராமமானது சமய நெறிமுறைகளைக் கட்டிக் காத்து வருகின்ற ஓர் இடமாகவும் இவற்றுக்கெல்லாம் அடிநாதமாக எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயமே காணப்படுவதனையும் இம்மக்களது வாழ்வியலின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

சோழநாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து சேர நாட்டிலே தெய்வீகமான கண்ணகியம்மன் கதை அனைவருக்கும் ஒரு வாழ்க்கைப் பாடம்.

தமிழிலக்கிய வரலாற்றிலே ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மை இலக்கியமானதும், இளங்கோவடிகளால் இயற்றப்பட்டதுமான சிலப்பதிகாரத்தின் காவிய நாயகி கண்ணகி. கற்பிற் சிறந்தவளான கண்ணகி எவ்வித ஆராய்வுமின்றி பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு கொலைத்தண்டனைக்கு ஆளான தன் கணவனின் குற்றமற்ற தன்மையை பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வாதிட்டு நிரூபித்ததாகவும் தம் பிழை கண்டு அரசனும் அரசியும் அவ்விடத்திலேயே உயிர் துறந்ததாகவும் கோபமடங்காத கண்ணகி மதுரை நகரை தன் கற்பின் வலிமையால் எரித்ததாகவும் சிலப்பதிகாரம் வர்ணிக்கின்றது.

தன் கணவன் கோவலனை திருடன் என பொய்க்குற்றம் சுமத்தி, கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்டு கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் வடிவமான மன்னன் முன் நின்ற கண்ணகியிடம் "யாரம்மா நீ" என்று அரசன் கேட்க "ஆராய்ந்து பார்க்கும் அறிவில்லாத அரசனே உன்னால் எவ்வித குற்றமும் செய்யாமல் தண்டிக்கப்பட்ட கோவலனின் மனைவி கண்ணகி நான்" என கண்ணகி பதிலுரைத்ததாகவும், "கள்வனை கொல்வது தானே அரச நீதி?" என்று மன்னன் கேட்க கொதித்தெழுந்த கண்ணகி "அற வழி தவறி கொலை வழி போன மதுரையின் மன்னனே" என விளித்து தன் காற்சிலம்மை உடைத்து மன்னனின் தவறை சுட்டிக்காட்டி நீதியை நிரூபிக்கின்றாள்.

கண்ணகி பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஓர் தனித்துவமான அடையாளம். சாதாரண குடிமகளான கண்ணகி தனக்கும் தன் கணவனுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை கண்டோ, தாம் வஞ்சிக்கப்பட்ட போதோ ஒடுங்கி

போய்விடவில்லை. குட்ட குட்ட குனிபவளாகவும் அவள் சித்தரிக்கப்படவில்லை. பெண்ணியம் பேசுபவளாகவும் அவள் படைக்கப்படவில்லை. தனக்கும் தன் கணவனுக்கும் ஏற்பட்ட அநீதிக்காக நீதி கேட்டு தைரியமாக துணிச்சலுடன் போராடி அரசனிடம் நீதியை நிலைநிறுத்தியவள்.

அரசனேயானாலும் அதிகாரத்தில் இருப்போர் தவறிழைக்கும் போது அவர் தம் தவறை உணர்த்த வைக்கும் வரை நீதிக்காக போராட தயங்க கூடாது என்பதை அழகாக உணர வைத்த அற்புதமான காவிய படைப்பு கண்ணகி பாத்திரம்.

இன்றைய பெண்கள் நியாயத்துக்காகவும் நேர்மையான விடயங்களுக்காகவும் போராட தயங்கவோ பின் நிற்கவோ கூடாது. தாம் வஞ்சிக்கப்படும் போது துவண்டு விடவும் கூடாது. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்கின்ற பகவத் கீதையின் வரிகள் எதிர்காலத்துக்கும் பொருந்தும். அதன் படி வெற்றியும் வந்து சேரும் என்பதை பறை சாற்றி சொல்லும் அற்புத தெய்வமான “கண்ணகி அம்மன்” கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றாள். மக்கள் தெய்வமான கண்ணகி அம்மனின் கதையானது சிலப்பதிகாரம், கண்ணகி காவியம், கண்ணகி வழங்குரை, சிலம்பு கூறல், குளித்திப்பாடல், கண்ணகி வசந்தன், கொம்பு முறி, கண்ணகியம்மன் கும்மி என தமிழில் கலை இலக்கியங்களாக விரிந்து காணப்படுகின்றது. இவையனைத்திலும் நாம் அறியும் பொருளாக உள்ளது கண்ணகியம்மனின் தீரமும், திண்மையும், அநீதியையும், பாவங்களையும் அழித்து நீதியை நிலைநாட்டும் என்பதே ஆகும்.

பெருமைமிகு கண்ணகியம்மனை நாம் எல்லோரும் வைகாசி மாதத்தில் நினைவுகூரவும் உலகெங்கும் அவள் புகழினைப் பரப்பும் வகையிலும் எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபையினர் கிராம மக்களது பங்கேற்புடன் மேற்கொள்ளவுள்ள ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் கண்ணகியம்மனின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் எனவும் பிரார்த்திப்பதுடன் இவ் நிகழ்வின்போது வெளியிடப்படும் இந்த சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதை பேறாக கருதுகின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
பிரதேச செயலாளர்,
மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி

# ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வண்ணக்கர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் போது யுகங்கள் தோறும் இறைவன் அவதரிப்பது இந்து தர்மமாகும். அவ்வேளையில் பாண்டிய மன்னனின் செருக்கை அடைப்பதற்காக உமை சாதாரண பெண்ணாக அவதரித்தாள். தன் அவதார நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பாண்டிய மன்னனையும் மதுரையையும் எரித்தவள். தன் அவதார நோக்கம் நிறைவேறியதும் தெய்வப் பெண்ணாக மாறினாள்.

கண்ணகித்தாயின் அற்புத செயலை சீத்தலை சாத்தனார் மூலம் அறிந்து கொண்ட சேர செங்குட்டுவன் இமயத்திலே பத்தினிக்கு கல்லெடுத்து அக் கல்லிலே படிவம் அமைத்து கண்ணகியை தெய்வமாக்கினான். அவ்விழாவுக்கு சென்ற இலங்கை மன்னன் கஜபாகு இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டை ஆரம்பித்து வைத்தான். அக் காலத்திலே எமது கிராமத்தில் வீரமரத்தடியில் சிறு குடிசையில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கண்ணகி பக்தர்களின் பங்களிப்புடன் மடாலயமாக ஆரம்பிக்கப்பட்டது. இன்று கண்ணகித்தாயின் திருச்சடங்கு செய்யும் பதினைந்து குடி மக்களும் ஏனைய கண்ணகி பக்தர்களும் சேர்ந்து ஒன்பது மாதங்களுக்குள் மிக பிரமாண்டமான ஆலயத்தை உருவாக்கியுள்ளனர்.

கண்ணகித்தாயின் அருள் ஆசியினால் இந் நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறின. இக் கிராமத்தில் கண்ணகித்தாயின் வருகையையும் மடாலயமாக அமைப்பதற்கும் காரணமாக இருந்தவர்கள் எமது முன்னோர்கள். சின்னவப்போடி உடையார் முதல் வண்ணக்கராக சேவை செய்தவர் நான் சின்னவப்போடி உடையார் வம்சத்தை சேர்ந்தது எனக்கு கிடைத்த பாக்கியமாகும். நான் இவ்வாலயத்தில் வண்ணக்கராக இருக்கின்ற காலப்பகுதியில் இவ்வாலயம் பொலிவுற்று விளங்குவதை பெருமையாக கருதுகின்றேன். ஆலய கட்டட பணிக்கும் கும்பாபிஷேக பணிக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, விசேடமாக தலைவர், செயலாளர், மணியகாரர் மற்றும் நிருவாக சபையினர் அனைவருக்கும் எனது மனப் பூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன், அத்தோடு ஆலய கட்டட வடிவமைப்பு குழுவினர், சிற்ப ஓவிய குழுவினர், வர்ணம் தீட்டிய குழுவினர், ஒளி, ஒலி அமைப்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"கண்ணகித் தாயே கருணை மழை பொழிக"

**திரு. ச. ரகுராமமூர்த்தி** (வண்ணக்கர்)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# ஆலய செயலாளர் அவர்களது வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தில் மீன்பாடும் தேனாடு என்று வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்புறத்தே அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் நில வளமும், நீர் வளமும் நெல் வளமும் நிறைந்த தென்னஞ் சோலைகளும் பூத்துக்குலுங்குகின்ற பயிர் வகைகளும் நிறையப் பெற்ற எழில்மிகு எருவிலூரில் கோயில் கொண்டருளி வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை கண்ணகித் தாயின் ஆலய பரிபாலன சபையில் தோம்புதோர் மாணிக்கப்போடி அவர்களின் மனைவியின் வழித்தோன்றலின் மண்முனைப் பெத்தான்குடிப் பரம்பரைகளான அமரர் தோ.மா.சத்துருக்கப்போடி, அமரர் தோ.மா.பரிகாரப்போடி, அமரர்.தோ.வ.சிவசுப்பிரமணியம், அமரர். க.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் ஆலயச் செயலாளர்களாக பணியாற்றினர். அதன் பின்னர் தற்காலச் செயலாளராக *35* வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கும் திரு. கதிரமலை அமிர்தலிங்கம் ஆகிய எனது சேவைக்காலத்தில் ஆலயத்தை இந்துக் கலாசார அமைச்சில் பதிவு செய்வதற்காக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டேன். அக்கால கட்டத்தில் வங்கியில் சேமிப்புக் கணக்கு திறக்கப்பட்டது தலைவராக அமரர். நா.மயில்வாகனம் அவர்களும், மணியகாரராக அமரர். திரு. மா. கோபாலசிங்கம் அவர்களும் அமரர். க. தம்பிராசா அவர்கள் வண்ணக்கராகவும் ஆலய பரிபாலன சபையினரும் இருந்து பூரண ஒத்துழைப்புக்களை வழங்கினர். அக்காலப் பகுதியில் கண்ணகி அம்மன் ஆலய வெளிமண்டபம், ஆலய பரிபாலனசபை அலுவலகம், ஆலய பிரதான நுழைவாயில் முன்கோபுரம், ஆலய சுற்றுமதில் என்பன அமைக்கப்பட்டு ஆலயம் புதுப்பொலிவைத் தந்தது. எனது *35* வருட சேவையில் இவ்வேலைகள் யாவும் இடம்பெற்றன. இவ்வேளையில் ஆலயத்தின் உள் மண்டபத் தூண்கள் பழுதடைந்திருந்த காரணத்தால் கிராம மக்களை அழைத்து பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஒவ்வொரு குடிமக்களும் ஐந்து இலட்சம் ரூபா வீதம் எடுப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு *11.07.2018*ம் திகதி பாலஸ்தானம் செய்து ஆலயம் உடைக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டதுடன் 30.07.2018ம் திகதி புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இவ் வேலையானது கிராமத்தில் உள்ள

குடிமக்களாலும் கண்ணகி பக்தர்களது அன்பளிப்பாலும் குறுகிய காலத்தில் வேலைகள் நிறைவு பெற்றது. தற்போது அகோர சிவாச்சாரியார் திரு. இரா. கோபாலசிங்கம் அவர்களின் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

மரணித்த செயலாளர்கள், மணியகாரர்கள், தலைவர்கள், வண்ணக்குமார்கள் ஆகியோரை நான் அறிந்த அளவில் அவர்களது செயற்பாடுகளை வாழ்த்துவதுடன் தற்போதைய தலைவர், வண்ணக்கர், மணியகாரர், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் ஆகியோரையும் மேலும் வாழ்த்துவதுடன் நிதியுதவி வழங்கிய குடிமக்கள், கண்ணகி பக்தர்கள், கும்பாபிஷேகப் பிரதம குரு, கட்டிடக் கலைஞர் விஜயகுமார் குழுவினர், திருவுருவம் படைத்த அசோக்குமார், வர்ணக்குழு ரூபமேனன் மோகன்ராஜ் குழுவினர், மலர்வெளியீட்டு, ஆசியுரை, வாழ்த்துரைகள், கட்டுரைகள் வழங்கியவர்களுக்கும் மேலும் ஆலயத்தை விரைவாக முடிப்பதற்கு நிதியுதவிகளை வழங்கியவர்கள், கல், மண், சீமெந்து, மாபிள் மற்றும் திருவுருவம் அமைப்பதற்குகு நிதியுதவிகள் வழங்கியவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு ஆலயத்தை துப்பரவு செய்த கிராம மக்களுக்கும் கிராம வீதிகள் தோறும் சோடனைகள் செய்த கழகங்கள், சங்கங்கள் போன்றவற்றிற்கும், பல வழிகளிலும் ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. க. அமிர்தலிங்கம்**
(ஓய்வு நிலைக் கிராம அலுவலர்
செயலாளர்
ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை
எருவில்

## அமுதம் பருகிட

ஏழைகள் வயிற்றை நல்ல அன்னத்தால் நிரப்பினவன் வயிறு வானுலகில் அமுதத்தால் நிரம்பும், ஏழைகளுக்கு நீர், மோர் கொடுத்தவன் காமதேனுவின் தீம்பால் பருகி இன்புறுவான்.

# எருவில் கண்ணகி அம்மன் ஆலய மணியகாரர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எருவிலம்பதியில் பழம் பெரும் பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்டு அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை கண்ணகியின் ஆலயம் பழமையில் இருந்து புனரமைப்பு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் அழகுறக் காட்சி தருவதைக் கண்ணூறும் போது என் உள்ளம் மகிழ்கிறது. எமது முன்னோரால் அமைக்கப்பட்ட ஆலயத்தின் கலியாணக் கால் அலங்கரிக்கப்படும் மண்டபத் தூண்கள் சிதைவடைவதைக் கண்ணுற்ற எமது ஆலய பரிபாலன சபையினர் ஒன்று கூடி ஆலயத்தினை முழுமையாக அகற்றி புதிய ஆலயத்தை ஒரு வருடகாலத்துள் அமைத்து முடிக்க வேண்டும் என முடிவெடுத்து அன்னையின் அருளினால் மிக விரைவாக புதிய ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம் பெறுவதை நினைக்கையில் அன்னை அவளின் மகிமை மக்களது மனதில் தடம் பதித்து விட்டது.

எனது முன்னோரான தோம்புதோர், அமரர் மாணிக்கப்போடி, அமரர், கா.அ.கந்தப்போடி, அமரர்.மா.கோபாலசிங்கம் ஆகியோர் எனக்கு முன்பு இருந்த மணியகாரர்கள் ஆவார்கள். இவர்களின் பின்பு இந்தப்பணியில் மணியகாரராக இருந்து செயல்படும் பாக்கியம் எனக்கு கிடைத்ததை இட்டு நான் அன்னை அருளினால் பெருமிதமடைகின்றேன். இவ்வாலயம் அமைப்பதற்கு தன்னாலான பிரயத்தனத்தை முழுமனதுடன் நிறைவேற்றுவதற்கு எம் முன்னோர் செய்த பெரும்பேறே மணியகாரர் பதவியாகும். இவ்வாலயம் புனரமைக்கப்படுவதற்காக எமது கிராமக் குடிமக்களும் கண்ணகி பக்தர்களும் வழங்கிய நிதி மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆலயம் புது பொலிவு பெற காரணமாயிற்று, இந்தவகையில் இவ்விடத்தல் அவர்களை நன்றியுணர்வுடன் பாராட்டுவதில் என் உள்ளம் மகிழ்கின்றது.

குறிப்பிட்ட காலத்தில் இவ்வாலய கட்டுமான பணிகளை மிக துரிதமாக இரவு, பகல் மழை பாராது துல்லியமாக செய்து முடித்த வந்தாறுமூலையைச் சேர்ந்த சிற்ப கலை வேந்தன், சிற்ப செம்மல் ஸ்தபதி பொ. விஜயகுமார் குழுவினருக்கு எனது உளமார்ந்த நன்றியை கூறுகின்றேன்.

அதுபோன்று ஆலய ஓவிய வடிவமைப்பு செய்த ப. அசோக்குமார் இந்தியா நாகப்பட்டினம், அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

அடுத்து வர்ணம் பூசி அழகுறச் செய்த S. ரூபமேனன், Y. மோகனராஜ் குழுவினருக்கும் உளம் மகிழ்ந்த நன்றிகளை கூறிக் கொள்வதில் பெருமை பெறுகின்றேன்.

அது போன்று ஆலயத்தில் மகாகும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்திக் கொண்டிருக்கும் மதிப்புக்குரிய அகோரசிவாச்சாரியார் குழுவினருக்கும் இவ்விடத்தில் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்வதில் பெருமிதமடைகின்றேன். இவ்வாறு அழகுபெறும் ஆலயத்திற்கு கும்பாபிஷேக மலர் வெளியிட வேண்டும் என முன் வந்த ஆலய பரிபாலன சபையினருக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எருவிலம்பதியில் கண்ணகியின் சிறப்புக்கள் தேசமெல்லாம் பரவட்டும், சித்திரை பூசை சித்திரை பௌர்ணமி, கண்ணகி திருச்சடங்கு ஆகிய சிறப்பு விழாக்களில் அன்னையின் அருள் பெற வாருங்கள் என கூறி அன்னையின் பாத மலரை வேண்டி வாழ்த்துரை கூறி விடைபெறுகின்றேன்.

**திரு. சோ. தினகரன்பிள்ளை**
மணியகாரர்
ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்
எருவில்

## ஆசாரக்கோவை

விருந்தினர், மூத்தோர், பசு, சிறை, பிள்ளை இவர்க்கு ஊண் கொடுத்து
அல்லால் உண்ணாரே என்னும் ஒழுக்கம் பிழையாதவர்

**கருத்து**

நல்லொழுக்கத்தினின்று தவறாத பெரியவர்கள், விருந்தினர்க்கும், மூத்தோர்களுக்கும், பசுக்களுக்கும், பறவைகளுக்கும், பிள்ளைகளுக்கும் உணவு அளிக்காமல் தான் உண்ணமாட்டார்.

# மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கற்பதிலும் உலக புகழ் கலைகள் வளர்ப்பதிலும் கற்றுணர்ந்த தமிழ் இனமாம் நமதினம் கிழங்கிலங்கை மட்டுமா நகரின் கண் தென்பால் சகல வளங்களாலும் நிறையப்பெற்ற பூமியாம் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் எருவில் பதியில் கோயில் கொண்டருள்பாலிக்கும் ஸ்ரீ கண்ணகி அம்மன்ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவர இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

21ம் நூற்றாண்டிலே சாதி, சமயம், மொழி கலாசாரங்களின் அடிப்படையில் மனித குலத்தில் காணப்படும் ஏற்ற தாழ்வு மனப்பான்மையும் அதன் விளைவாக எழுந்துள்ள போட்டி, பொறாமை, பகைமை பூசல்களையும் எந்த விஞ்ஞான யுகத்தாலும் மாற்றமுடியாதுள்ள நிலையில் ஆன்மீகமே கைகொடுப்பது என நம்மிடையே பலர் அறிந்துள்ளனர். இந்நிலையினை ஒவ்வொருவரும் உணரும் பக்குவ நிலையினை அடைகின்றோமோ அப்போதுதான் எமது இந்து மக்கள் உள்ளத்தில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

அன்பு, தியாகம், நேர்மை போன்ற நற்பண்புகளை வளர்ப்பதே சமயத்தின் நோக்கம் சமயச் சடங்குகளும் சமய விழாக்களும் இப்பண்புகளை வளர்க்க உதவவில்லையெனில் அவை வீணே பாரம்பரியத்தையும் தொன்மையையும் கொண்ட எமது சமயம் பல இன்னல்கள் சோதனைகள் ஏற்பட்ட போதிலும் தமது தனித்துவத்தை இழக்காது தனக்கென சிறப்பான ஓர் இடத்தை பெற்று மேலோங்கி நிற்பது எமது சமயத்தின் வரலாற்றை மேலும் வலுவடையச் செய்கிறது எனலாம்.

மக்களது வாழ்வியலோடு இரண்டறக்கலந்த எமது வழிபாட்டு முறையானது மேன்மையான வாழ்விற்குரிய அம்சங்கள் பலவற்றை “இறை” என்னும் சக்தியூடாக மக்களுக்கு புகட்டி அதனை பின்பற்ற வழிவகுத்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே எமது முன்னோர்கள் மக்களை வழிநடத்துகின்ற முதன்மையான

இடமாகஆலயங்களை கருதி சமுதாய வழிகாட்டலுக்குரிய மையப் பொருளாக கருதினார்கள்.

இன்றைய நிலையில் ஆலயங்களை முறையாகப் பேணுவதும் அறநெறி வளர்ப்பதும் மிக மிக அவசிய தேவையாக உள்ளது இறை நம்பிக்கையும் அதன் அடிப்படையில் செய்யப்படும் இறை வழிபாடும் காலங் காலமாக மனித குலத்தை நல்வழிப்படுத்தி வந்திருப்பதை சரித்திரம் விளக்கமாக கூறுகின்றது.

இம்மகத்தான ஒப்பற்ற கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்னின்று உதவிய பெருமக்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் இப்புண்ணிய நன்நாளில் வெளிவரும் இம்மலர் மக்கள் பயனுறும் வகையில் சிறப்பாய் மலர கண்ணகி அம்மனின் திருவருளை நினைத்து உளமார வாழ்த்துகின்றேன்.

கும்பாபிஷேகம் இனிதே நிறைவுபெறுவதாக
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**கி. குணநாயகம்**
மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு மாவட்டம்

# கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி அவர்களின் வாழ்த்துச் செய்தி

எருவிலூரில் அமர்ந்து இருந்து மக்களின் இன்னல்களைப் போக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணகை அம்பாளுக்கு இவ்வாலய நிருவாக சபையினர் மேற்கொள்கின்ற புனராவர்த்தன கும்பாபிஷேக முயற்சியினையும், அதனை முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதையும் இட்டு பேருவகை அடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்களில் 67% ஆனோர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள். இம்மாவட்டத்தில் அமைந்துள்ள எருவில் எனும் கிராமம் இந்துக்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு, விழுமியங்களைப் பேணி வாழுகின்ற பெருந்தொகையான இந்துக்களைக் கொண்ட கிராமம், இக்கிராமத்தின் மத்தியிலே கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்மையான சிறப்பு வாய்ந்தது. ஆண்டு தோறும் வைகாசி மாதத்திலே வருகின்ற வைகாசித் திங்களை திருக்குளிர்த்தி நாளாகக் கொண்டு உற்சவம் நடைபெறுகின்ற சிறப்பு வாய்ந்த ஆலயமாகும். சடங்கு முறைகளை முழுமையாகப் பேணி வருகின்ற இவ்வாலயத்திலே இன்னொரு பரிணாம வளர்ச்சியாக ஆலயத்தை ஆகம முறைப்படி திருத்தி அமைத்து புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வதானது பாராட்டத்தக்கதாகும்.

கண்ணகை வழிபாட்டுக்குப் பெயர்போன கிழக்கு மாகாணத்திலே எருவிலூரும் அவ்வழிபாட்டுப் பாரம்பரியங்களை பேணி வருகின்றது. அங்கு அமைந்துள்ள கண்ணகை அம்பாள் ஆலயத்தின் புனிதத்துவத்தை மேலும் புனிதமாக்குவதற்காக எதிர்வரும் 22.04.2019 திங்கள் அன்று இடம்பெற இருக்கும் திருக்குட முழுக்குக்கான இப்புனிதமான பணி மிகவும் சிறப்புற அமையட்டும் அதற்கு எல்லாம் வல்ல கற்புடைச் செல்வியாம் கண்ணகை அம்பாள் உறுதுணையாக அமையட்டும்.

இம்முயற்சிக்காக எந்தச் சிரமங்களையும் சிரசில் அமர்த்தாமல் முழு மூச்சாக நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆலய பரிபாலன சபையினரை பாராட்டி வாழ்த்துகின்றேன். அவர்கள் மேற்கொள்ளும் திருக்குட முழுக்கு சிறக்கட்டும், அதனைச் சிறப்பிக்க மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒன்றான "கும்பாபிஷேக சிறப்பு மலர்" வெளியீட்டு முயற்சியும் சிறக்கட்டும் என பேருவகையுடன் என் நல்வாழ்த்துக்களை, கும்பாபிஷேக விழாக்குழுவுக்கும், மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் மீண்டும் மீண்டும் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளின் அருள்கடாட்சமும் அவர்களுக்கு கிடைக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

"வாழ்க எருவிலூர், ஓங்குக கண்ணகை அருள்"

**திருமதி. எழில்வாணி பத்மகுமார்**
அபிவிருத்தி உத்தியோகஸ்தர் (இந்து கலாசாரம்)
கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம்,
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
நாவற்குடா

# இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஈழத்திருநாட்டின் கிழக்கு மாகாணத்திலே கலை கலாசாரங்களில் சிறந்து விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்திலே சைவநெறி தழைத்தோங்கி காணப்படும் எருவில் கிராமத்திலே அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா கும்பாபிஷேக நிகழ்வின் போது வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எருவில் கண்ணகியம்மன் ஆலயமானது கிழக்கின் கண்ணகி வழிபாட்டில் மிகப் பழமையான ஆலயங்களுள் ஒன்று என்பதனை அதன் வரலாற்றுப் பின்னணியினை நோக்குவதனூடாக அறிந்து கொள்ள முடியும். மாறாக மரபு வழியினைக் கொண்ட வழிபாட்டு முறைகளையும் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் இவ்வாலயமானது தொடர்ந்து பேணி வருகின்றது என்பது மிகச் சிறப்பான விடயமாகும். கிழக்கின் கண்ணகி வழிபாடானது பெண் தெய்வ வழிபாட்டின் உயர்ந்த நிலையினை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. இதனூடாக ஆண், பெண் சமத்துவம் சமூகநீதி, கலை இலக்கிய மரபுகள் என பல்வேறு விடயங்கள் மக்களிடையே பேணப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக மிக நீண்ட வரலாறு கொண்ட எருவில் கண்ணகியம்மன் ஆலயமானது தற்போது கிராம மக்கள் பங்களிப்புடன் ஆலய பரிபாலன சபையினரின் அயராத முயற்சியுடனும் கும்பாபிஷேக நிகழ்வினைக் காணவுள்ளது. இதனூடாக கிராம மக்கள் அனைவருக்கும் நன்மைகள் கிடைப்பதுடன் கும்பாபிஷேக நிகழ்வும் சிறப்பாக நடந்தேறி இவ்வாலயத்தின் சிறப்புக்கள் உலகெங்கும் கூர்விட்டு பிரகாசிக்கவும் வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல கண்ணகித்தாயாரின் திருவருள் ஆலய பரிபாலன சபையினருக்கு கிடைக்க வேண்டும் என வேண்டி நல்லாசியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. குமுதினி பரமசிவம்**
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
மண்முனை தென் எருவில் பற்று
களுவாஞ்சிகுடி

# களுவாஞ்சிகுடி கிராம தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

பார் போற்றும் பத்தினி தெய்வமாம் கண்ணகை அம்மன் எருவில் பதியிலே கோவில் கொண்டு அருளாட்சி செலுத்துகின்ற எருவில் கண்ணகியம்மன் ஆலயமானது குடமுழுக்கும் சங்காபிஷேகமும் காணுகின்ற இந்த நன்னாளிலே கிராம மக்களாலும் ஆலய பரிபாலன சபையாலும் வெளியீடு செய்து வைக்கப்பட இருக்கின்ற மலருக்கு ஆசியும் வாழ்த்துச் செய்தியும் வழங்க கிடைத்தமைக்காக இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றேன்.

கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்திருக்கின்ற கிராமங்கள் அனைத்துமே வருடமொருக்கால் வைகாசி மாதம் வளர்பிறை நாளில் வருகின்ற எட்டு நாட்களும் மதுமாமிசமற்ற நாட்களாக புனிதம் காப்பது வழமையும் சம்பிரதாயமுமாக அமைந்திருக்கின்றது. எருவில் கண்ணகை அம்மன் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. பத்ததி முறையில் வழிபாடு நடைபெறுகின்ற ஆலயமாகும். களுவாஞ்சிகுடி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கும் எருவில் அம்மன் ஆலயத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக வாய்வழி மூலம் அறியக்கிடக்கின்றது.

களுவாஞ்சிகுடி கண்ணகை அம்மன் ஆலயத் திருக்குளிர்த்தி ஆடிவிட்டு வெள்ளைசேலை அணிந்து மொக்காடிட்ட ஏழு (7) கன்னியர்கள் புடை சூழ அம்மானைக்காய் சிலம்பு கலகலவென்று குளக்கட்டு வழியாக எருவில் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு செல்வதாகவும் பூரணையும் திங்களும் ஒருமித்து வருமிடத்து இங்கும் அங்குமாக கால் மாறுவதாக ஐதீகம். இந்த அமானுஸ்சியமான நிகழ்வு சடங்கு காலங்களில் நிகழ்வதாக பலரும் சொல்ல கேள்விபட்டிருக்கின்றோம். தெய்வ சானித்தியம் நிறைவாக இருக்கின்ற இரு ஆலயங்களிலும் இவ்வாறான கைங்கரியம் நடைபெறுவதை எவரும் மறுப்பதற்கில்லை.

எருவில் கிராம மக்களும் புலம்பெயர்ந்து வாழுகின்ற அவர்தம் உறவுகளும் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து அயராது உழைப்பினால் மிக விரைவாக ஆலயத்தை புதுப்பொழிவுடன் அமைத்திருக்கின்றார்கள்.

ஆலயத்தை புனராவர்த்தனம் செய்வதும் குடமுழுக்கு காண்பதும் பெரும் புண்ணியம் என்று சொல்ல வைத்திருக்கின்றார்கள். எனவே இந்த இறை புனித கைங்கரியத்துக்கு வாரி வழங்கியவர்கள் முன் நின்றுழைத்தவர்கள் அனைவருக்கும் அம்மன் அருள் நிறைவாக கிடைக்க வேண்டும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ அனைவருக்கும் அம்பாளின் அருளாசியை வேண்டி களுவாஞ்சிகுடி மக்கள் சார்பாகவும் கண்ணகை அம்மன் முகாமை ஆலய பரிபாலன சபையின் சார்பாகவும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. கந்தவேள்** (தலைவர்)
ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்
முகாமை ஆலய பாரிபாலன சபை
களுவாஞ்சிகுடி

# மகிழூர் கண்ணகியம்மன் ஆலய தலைவரின் வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் காவியப் புகழ் பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்களில் எருவில் கண்ணகி அம்மன் ஆலயமுமொன்றாகும். பகிர்ந்தளிக்கப்பட்டு அக்கிராமத்தின் ஒற்றுமையினையும் ஒருமைப்பாட்டினையும் பேணி வருகின்ற ஒரு புராதன தலமாக விளங்கி வருகின்றது.

ஆரம்பத்தில் கடல் ஆழ் வேந்தன் கஜபாகு மன்னனால் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கண்ணகி ஆலங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் முக வெற்றிலையாக இவ்வாலயம் விளங்குகின்றது. இதனை பத்தினியம்மன் எனவும் மக்கள் பூசிக்கின்றனர். அதே சக காலத்தில் மகிழூர் கண்ணகி அம்மன் ஆலயமும் ஸ்தாபிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இருப்பினும் இங்கு காணப்படும் பூசைகள், சடங்குகள் குடிமுறையினை பின்பற்றியே மகிழூர் கண்ணகி அம்மன் ஆலய சடங்குகளும் காணப்படுகின்றது. இருப்பினும் வைகாசி மாதத்தில் பௌர்ணமியினை அடுத்து வரும் திங்கட்கிழமை வருடாந்த திருக்குளிர்த்தி நடைபெறும். இதனையொற்றியே காரைதீவு, செட்டிப்பாளையம், தம்பிலிவில், வற்றாப்பளை போன்ற ஆலயங்களில் திருக்குளிர்த்தி நடைபெறும்.

பன்னெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்ட மடாலயமாக விளங்கிய எருவில் கண்ணகி அம்மன் ஆலயம் சுற்றி வர பல புதுப்படைப்புக்களை அக்கிராம மக்கள் அழகுபடுத்தினாலும் மூலஸ்தானம் மகா மண்டபங்களை பாரம்பரியத்தினை பேணி வந்தனர். இருப்பினும் கால ஓட்டத்தில் ஆலயத்தினை புதுப்பொலிவுடன் அமைக்க வேண்டுமென எண்ணிய பொதுமக்கள் கடந்த 2018ம் ஆண்டு ஆலய புனரமைப்பு வேலையினை துரிதமாக முன்னெடுத்து ஆலய நிர்மாண பணியினை துரிதமாக மேற்கொண்டு கலையம்சத்தோடு ஆகம முறையில் ஆலயத்தினை அமைத்து தற்பொழுது கும்பாபிஷேகம் செய்வதற்கு எல்லாம் கண்ணகி அம்பாளின் திருவருள் கிட்டியுள்ளது. பழமையும் சிறப்பும் வாய்ந்த இவ்வாலயம் குடமுழுக்கு செய்யப்படுவதினையிட்டு

நான் மிகுந்த பெருமிதம் அடைகின்றேன். திருப்பணிக்கு பங்களிபபு செய்த ஆலய பரிபாலன சபையின் குடி தலைவர்கள், வண்ணக்கர், மற்றும் திருப்பணி சபையினர் என் இதலுடன் தொடர்புடையவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் அந்த வகையில் எதிர்வரும் சித்திரை மாதம் புனர்தான பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் காணும் எருவில் நகர் வாழ்கின்ற செந்திருவ சேவடிகளின் அருளாசி இப்பிரதேசத்தில் வாழ்கின்ற அனைத்து கண்ணகி பக்தர்களுக்கும் கிடைக்க வேண்டுமென இறையன்புடன் பிரார்த்திக்கின்றேன்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அரன் கூற்றாகும்
உரைசார் பத்தினியை உயர்தோர் போற்றுவர்"

இந்துசமயம் வழிபாட்டில் சிறு தெய்வ வழிபாடாக கண்ணகி வடிவமைக்கப்பட்டாலும் கிழக்கிலங்கையில் ஆகம முறை சார்ந்த சடங்கு முறை வழிபாட்டில் தனிச்சிறப்பு அம்சமாக கண்ணகி அம்மன் வழிபடப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

**இ. விவேகானந்தராசா (J.P)**
தலைவர்
மகிழூர் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்

உ

ஓம் சக்தி

கிழக்கிழலங்கை மட்டுமாநகர் எருவிலம்பதியில் அமைந்த பழம்பெருங் கோயிலான கண்ணகை அம்மன் கோவிலைப் புனரமைப்புச் செய்து புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக (குடமுழுக்கு) விழாவுக்கு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கான

# வாழ்த்துச் செய்தி

சீரிளமைத் திறம் குன்றா செம் மொழியாம் தமிழ்மொழி போல் கண்ணகி வழிபாட்டு முறையும் நீண்ட காலமாக நிலைபெற்று வளர்ந்து வருகின்றது. காலத்தால் அழியாத - அழிக்க முடியாத கண்ணகி வழிபாட்டு முறைமை ஈழத்தின் மட்டுமாநகரின் தென்பால் பழம்பெரும் பதியாம் எருவிலம் பதியில், எம் முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ கண்ணகி அம்மன் மடாலயத்தை புனரமைத்துப் புதுப்பொலிவுடன் கருவறைக்கோபுரம் அமைத்துப் பார்ப்போர் விழிகள் வியக்கத்தக்க முறையில் வேதாகம முறைப்படி மண்டபங்கள் அமைத்து எழிலுறு ஆலயமாகச் சிற்ப வேலைப்பாட்டுடன் கோவில் நிர்மாணம் முற்றுப் பெற்றுள்ளது. இச் சீரிய தெய்வத்திருப்பணியைச் செய்ய நிதியினை வாரி வழங்கிய குடிமக்கள் தனி நபர்கள் அனைவருக்கும், ஆலயப் புனரமைப்புப் பணியை குறுகிய காலத்துள் முடிக்க இரவு பகலாக ஆர்வமோடுழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கு எமது கண்ணகைத் தாயாரின் திருவருட் கடாட்சம் கிடைத்து நீடூழி வாழ வேண்டுமென பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"வாழ்க தமிழ் வளர்க கண்ணகி வழிபாடு"

தேசபந்து, தேச கீர்த்தி, சமூக ஜோதி
**ஐ. சுப்பிரமணியம்**
ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்
அகில இலங்கை சமாதான நீதிவான்

# வாழ்த்துப்பா

மீனினங்கள் கவிபாட
மானினங்கள் துள்ளியோட
தேனென செந்தமிழ் சுவைததும்ப
தேடி வந்து தென்றல் தழுவிப் போக
தெவிட்டா முக்கனிச் சோலைகளும்
அற்புதங்கள் என்றும் நிகழ்ந்தேறும்
ஆலயங்கள் பலவும் கொண்ட
புண்ணிய பூமியென்றால்....
மறவர் புகழ் மட்டக்களப்பு.

மறவர்கள் வீரமுடன் வீற்றிருந்து
செங்கோல் புரிந்த மண்முனைக்கு தெற்கே
நெல்மணிகள் இசையோடு அசைந்தாடும்
தாமரை மலர்கள் குளங்களில் பூத்துக் குலுங்க
தோகை விரித்தாடும் மயிலென வனப்புடன்
பாவை முகம் போலென்றும் புன்னகை சிந்தும்
முற்குகர் மரபினை முடியாக அணிந்து
பொற்பத நாயகியை நடுவினில் அமர்த்தி
அற்புதம் காணும் நற்பதியென்றால்....
எழில் மிகு ஏருரெனும் எருவில் நகர்.

வீர சைவம் விளங்கச் செய்த கலிங்கமாகோன்,
தீரமுடன் ஆட்சி புரிந்த சிறப்புமிகு ஆடக சௌந்தரி,
போருக்கு அஞ்சாத பெண்ணரசி உலகநாச்சி,
நேருக்கு நேர் போர் புரிந்த வன்னியர்கள்,
கருவாக மிளிர்கின்ற வரலாறு எருவில் நகர்,
டச்சுக்காரர் மெச்சிய முற்குகர் கட்டளைச்சட்டம்
எச்சமாக வீற்றிருக்கும் ஊர்களில் ஒன்றாக
கலைகளுக்கு உயிரூட்டி கூத்து, கும்மி, கரகமென
கவிஞர்களும், கலைஞர்களும் விளைகின்ற கலைக்கூடம்

குடிவழி சடங்குகள் உயிரெனக் கருதி
கூடிக் குதூகலித்து ஒருதாய் மக்களாய்
உலா வந்த புராதன ஆலயம் இன்று
பார்போற்ற புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்க
மகாகும்பாபிஷேகம் புகழுடன் காண்கின்றது.
கற்புக்கரசியின் கமலபாதங்கள் போற்றி
அயராது பணிபுரிந்த அன்பர்களை வாழ்த்தி
உயர்வான மலரிற்கு உருக்கொடுத்து
ஊரின் பெருமை ஓங்க வைத்தோர்க்கு
என் இனிய நன்றிகள்! நன்றிகள்! நன்றிகள்!

**கலாபூசணம் வீர. இராசமாணிக்கம்**
(J.P)

## சித்தானைக்குட்டி சுவாமியின் அருளுரைகள்

* அதிகாலை நித்திரை விட்டெழு
* எழும்பும் போதே ஆண்டவனை நினை
* தேநீர் காப்பியைத் தூரத்தள்ளு
* மரக்கறி உணவு மனத்திற்கு மகிழ்ச்சி
* பசித்து வந்தோர் முகம்பார்
* உண்ணும் முன்பு ஒரு கணம் இறைவனை நினை
* கடமையிற் தவறினால் கடவுளைக் காணமாட்டாய்
* நெற்றிக்கழகு விபூதி பூசுதல்
* படுக்க முன் இறைவனைப் பிரார்த்தி

அராலியூர் அருட்கலைத்திலகம் S.S. மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்களது அருளாசியுடன் விக்னேஸ்வரா சிற்ப வர்ண கலையகம் பொ.விஜயகுமார் அவர்களது

# வாழ்த்துச் செய்தி

எனது கலைத்துறைக்கு வழிகாட்டியும் என்னை பல பட்டங்கள் பெறவும் மென்மேலும் கட்டிட கலையில் உயர்வுபெற செய்து அமரத்துவம் அடைந்த அருட்கலைத் திலகம் S.S. மகேஸ்வரன் ஐயா அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியை தெரிவித்து கடந்த 2018ம் ஆண்டு 7ம் மாதம் எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயத்திற்கு புதிய ஆலயம் அமைப்பதற்கு அழைப்பு கிட்டியது அதன் அடிப்படையில் நான் இங்குவந்து பாலஸ்தாபனம் செய்து 30.07.2018ம் திகதி அடிக்கல் அம்மாள் அருளால் வைக்கப்பட்டது. அதன் பின்னர் நிர்வாக சபை உறுப்பினர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோரின் விடா முயற்சியாலும் கண்ணகி தாயாரின் அருட்கடாட்சத்தாலும் குறுகிய காலத்துக்குள் பூரணமாகவும் பொலிவு நிறைந்த ஆலயமாகவும் கட்டப்பட்டது. இவ் வேலைகள் நடைபெறும் காலங்களில் எருவில் கிராம மக்கள் என்னையும் எனது வேலையாட்களையும் மிகவும் மரியாதையாகவும் அன்பாகவும் நடத்தியமைக்கு எனது பாராட்டு மிக முக்கியம். அந்த வகையிலே பல பொது மக்கள் பல தினங்களில் அன்னக் கொடையினையும் வழங்கி தாகத் தவிப்பையும் தணித்தார்கள். அவர்களுக்கு எல்லாம் வல்ல அந்த கண்ணகி தாயின் அருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

அடுத்து ஆலய பரிபாலன சபையினரின் விடா முயற்சிக்கும் எனது பாராட்டுக்கள். அதனைப் போன்று என்னுடன் எனது தொழிலை செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து இவ்வாலயம் நிறைவு பெறும் வரை என்னுடன் தோள் கொடுத்த எனது சகாக்களுக்கு அந்த கண்ணகி தாயின் அருள் முழுமையாக கிடைக்க வேண்டி எருவிலில் வாழும் எல்லா பொதுமக்களுக்கும் எனது நல்லாசியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வண்ணம்<br>
விக்கினேஸ்வரா சிற்பவர்ண கலையக ஆச்சாரி<br>
**பொ. விஜயகுமார்**<br>
வந்தாறுமூலை

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை

1. தலைவர் :- திரு. மா. சுந்தரலிங்கம்
2. செயலாளர் :- திரு. க. அமிர்தலிங்கம் (ஓய்வுநிலை கிராமசேவை உத்தியோகத்தர்)
3. வண்ணக்கர் :- திரு. ச. ரகுராமமூர்த்தி (மருந்தகவியலாளர்)
4. மணியகாரர் :- திரு. சோ. தினகரன்பிள்ளை

## குடித் தலைவர்கள் (பூசை ஒழுங்கு முறைப்படி)

5. எருவில் பணிக்கனாக்குடி - திரு. சோ. பவளசிங்கம்
6. எருவில் பெத்தான்குடி - திரு. ச. பேரின்பநாயகம் J.P (முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி)
7. கரவாகு பணிக்கனாக்குடி - திரு. சீ. யோகராசா
8. களுதாவளைப் பெத்தான்குடி - திரு. சா. தாமோதரம்பிள்ளை குருக்கள்
9. கச்சிலா குடி - திரு. இ. கணேசமூர்த்தி
10. வேளாளர் குடி - திரு. தி. சத்தியசீலன் (வெளிக்கள உத்தியோகத்தர் S.W.O)
11. பத்தினாச்சிக் குடி - திரு. க. சங்கரப்பிள்ளை
12. மருத்துவிச்சிக்குடி - திரு. மா. இராஜேந்திரன்
13. சஸ்டிகுடி - திரு. வே. கீர்த்திவர்மன் (சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்)
14. குண்டன் குடி - திரு. இ. ஏரம்பமூர்த்தி
15. கோப்பிகுடி - திரு. சி. சத்தியநாதன் (அதிபர்)
16. படையாண்டகுடி - திரு. மா. துரைச்சாமி
17. உலகிப்போடிகுடி - திரு. சா. பரமானந்தம் (அதிபர்)
18. மண்முனைப் பெத்தான் குடி - திரு. வ.திருச்செல்வம்
19. காலிங்கா குடி - திரு. இ. சின்னத்துரை (ஓய்வுநிலை சிற்றூழியர்)

# மலர்க்குழு

**ஆலோசகர்கள்**

திரு. சா. பரமானந்தம் J.P (ஓய்வுநிலை அதிபர்)

திரு. சா. பரமானந்தம் (அதிபர்)

**மலராசிரியர்**

திரு. ச. ரகுபதி (C.G.A.O)

**உறுப்பினர்கள்**

திரு. ந. கனகரெத்தினம் J.P (அதிபர், அறநெறிப் பாடசாலை)

திரு. கி. குமாரசிங்கம் (ஆசிரியர்)

திரு. க. சின்னராசா (ஓய்வுநிலை கிராமசேவை உத்தியோகத்தர்)

திரு. ம. ஜனோஜன் (B.A)

## சிலப்பதிகாரத்தில் "மூன்றுகள்"

**02. மூன்று நாடு :** சோழ நாட்டில் கண்ணகி பிறப்பு, பாண்டிய நாட்டில் வழக்குரைப்பு, சேர நாட்டில் தெய்வமானவள்.

**02. மூவேந்தர்கள் :** சோழன், பாண்டியன், சேரன்

**03. மூன்று காண்டங்கள் :** சோழ நாட்டின் தலைநகர் புகார் (புகார் காண்டம்)
பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரை (மதுரைக் காண்டம்)
சேர நாட்டின் தலைநகர் வஞ்சி (வஞ்சிக் காண்டம்)

**04. முத்தமிழ் :** இயல், இசை, நாடகம்

**05. முக்கோணக்காதல் :** கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோருக்கு இடையிலான காதலை வெளிப்படுத்துகின்றது.

**06. மூன்று தத்துவங்கள் :**

அ. அரசியல் பிழைத்தோர்க்கறங் கூற்றாவதுவும்
ஆ. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
இ. ஊழ்வினையுறுத்து வந்தூட்டலும்

## நிழல் படங்களிலிருந்து . . . . .

### பழைய ஆலய தோற்றம்






### புதிய ஆலயத்தின் அடிக்கல் நாட்டுவிழாவின் போது
### 30.07.2018





# மகா கும்பாபிஷேக நிகழ்வின் போது











## ஆலய பரிபாலன சபை



**இடமிருந்து முன்வரிசை :** திரு.க.சங்கரப்பிள்ளை (தலைவர்-பத்தினாச்சிகுடி), திரு.வே.கீரத்திவர்மன் (தலைவர்-சஷ்டிகுடி), திரு.இ.சின்னத்துரை (தலைவர்-காலிங்காகுடி), திரு.க.அமிர்தலிங்கம் (செயலாளர்), திரு.மா.சுந்தரலிங்கம் (தலைவர்), திரு.ச.ரகுராமமூர்த்தி (வண்ணக்கர்), திரு.சோ.தினகரன்பிள்ளை (மணியகாரர்), திரு.மா.துரைச்சாமி (தலைவர்- படையாண்டகுடி), திரு.தி.சத்தியசீலன் (தலைவர்-வேளாளர்குடி).

**இடமிருந்து பின்வரிசை :** திரு.சி.சத்தியநாதன் (தலைவர்-கோப்பிகுடி), திரு.மா.இராஜேந்திரன் (தலைவர்-மருத்துவிச்சிக்குடி), திரு.இ.ஏரம்பமூர்த்தி (தலைவர்-குண்டன்குடி), திரு.வ.திருச்செல்வம் (தலைவர்-மண்முனை பெத்தான்குடி), திரு.சோ.பவளசிங்கம் (எருவில் பணிக்கனார் குடி), திரு.ச.பேரின்பநாயகம் (தலைவர்-எருவில் பெத்தான்குடி), திரு.சா.பரமானந்தம் (தலைவர்-உலகிப்போடிகுடி), திரு.சீ.யோகராஜா (தலைவர்-கரவாகுப்பணிக்கனார் குடி), திரு.இ.கணேசமூர்த்தி (தலைவர்-கச்சிலாகுடி), திரு.சா.தாமோதரம்பிள்ளை (தலைவர்-களுதாவளைப் பெத்தான்குடி)

## மலராக்கக் குழு



**இடமிருந்து :** திரு.க.சின்னராஜா (ஓய்வுநிலை கிராமசேவை உத்தியோகத்தர்), திரு.கி.குமாரசிங்கம் (ஆசிரியர்), திரு.சா.பரமானந்தம் (அதிபர்), திரு.சா.பரமானந்தம் J.P (ஓய்வு நிலை அதிபர்), திரு.ச.ரகுபதி (தொழில் வழிகாட்டல் ஆலோசனை உத்தியோகத்தர்), திரு.ந.கனகரெத்தினம் J.P (அதிபர், அறநெறிப் பாடசாலை), திரு.ம.ஜனோஜன் (B.A)

## மகா கும்பாபிஷேக நிகழ்வில் கௌரவிப்பின் போது


மகா கும்பாபிஷேக குருமார்களை
கௌரவித்த போது . . .



ஆலய கட்டட ஸ்தபதி திரு பொ.விஜயகுமார்
குழுவினரை கௌரவித்த போது . . .



பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார்



சிவாகம பிரதிஸ்டா பூஷணம், கிரியா ஜோதி
சிவகிரி அகோரசிவாச்சாரியார்
சிவஸ்ரீ .இரா.கு.கோபாலசிங்கம் குருக்கள்

கண்ணகியம்மன் ஆலய பூசகர்



திரு.கோபால் பத்தினியன்



இடமிருந்து : திரு.க.அமிர்தலிங்கம் - (செயலாளர்)
திரு.மா.சுந்தரலிங்கம் - (தலைவர்)
திரு.ச.ரகுராமமூர்த்தி - (வண்ணக்கர்)
திரு.சோ.தினகரன்பிள்ளை - (மனியகாரர்)

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபையின் முக்கிய பொறுப்பினை அலங்கரித்தவர்கள் (அன்று தொடக்கம் இன்று வரை)

**தலைவர்கள் (மரபு வழியானவர்கள் காலிங்காகுடி)**

1) அமரர். ஞா. பொலியர்
2) அமரர். சி. பாலிப்போடி (வட்டவிதானை)
3) அமரர். சி. அழகிப்போடி (விதானையார்)
4) அமரர். சி. மாணிக்கப்போடி (விதானையார்)
5) அமரர். ஞா. சாமித்தம்பி (வட்ட விதானையார்)
6) அமரர். த.வ.வி.வை. சீனித்தம்பி
7) அமரர். சோ. எதிர்மன்னசிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்)
8) அமரர். சோ. தம்பிராஜா (பாராளுமன்ற உறுப்பினர்)
9) அமரர். சா. ஆறுமுகம்
10) அமரர். நா. மயில்வாகனம்
11) திரு. மா. சுந்தரலிங்கம்

**வண்ணக்குமார்கள் (மரபு வழியானவர்கள் கோப்பிகுடி)**

1) அமரர். சின்னவப்போடி உடையார்
2) அமரர். மாணிக்கப்போடி
3) அமரர். ஆறுமுகம்
4) அமரர். தம்பிப்பிள்ளை
5) அமரர். கந்தப்போடி
6) அமரர். தம்பிராசா
7) அமரர். இராமலிங்கம்
8) திரு. க. அற்புதராசா (ஓய்வுநிலை தெளிகருவி இயக்குனர் மலேரியா)
9) திரு. ச. ரகுராமமூர்த்தி (மருந்தகவியலாளர்)

**செயலாளர்கள் (மரபு வழியானவர்கள் மண்முனை பெத்தான்குடி)**

1) அமரர். சத்துருக்கப்போடி
2) அமரர். சிவசுப்பிரமணியம்
3) அமரர். கோபாலகிருஷ்ணன்
4) திரு. க. அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்)

**மணியகாரர்கள் (மரபு வழியானவர்கள் பணிக்கனாக்குடி)**

1) அமரர். மாணிக்கப்போடி (தோம்புதோர்)
2) அமரர். கா.அ. கந்தப்போடி (கிராமசபை உறுப்பினர்)
3) அமரர். மா. கோபாலசிங்கம்
4) திரு. சோ. தினகரன்பிள்ளை

**கண்ணகியம்மன் ஆலய பூசையினை ஆற்றுப்படுத்திய பூசகர்கள் (மரபுவழியானவர்கள் பத்தினாச்சிக்குடி)**

1) அமரர். பத்தினியன் மூத்தாங்குட்டி கட்டாடியார் (அண்ணாவியார்)
2) அமரர். கந்தவனம் கட்டாடியார்
3) அமரர். கறுவல்தம்பி கட்டாடியார்
4) அமரர். மான்குட்டி கட்டாடியார்
5) அமரர். கணபதிப்பிள்ளை கட்டாடியார்
6) அமரர். விஸ்வலிங்கம் கட்டாடியார் (ஒரு வருடம்)
7) அமரர். கிருஸ்ணபிள்ளை கட்டாடியார் (மூன்று வருடம்)
8) திரு. கோபால் பத்தினியன் கட்டாடியார்

### பட்டினத்தார் பாடல்

இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை எண்ணாதே பருத்த தொந்தி
நம்மது என்று நாம் இருப்ப நாய் நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம் இருக்கும் தான்.

# உங்களோடு நான்

எமது கண்ணகியம்மன் ஆலயம் ஒன்பது மாதத்திற்குள் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளது. பத்தினித் தெய்வத்தின் அருள் ஆசியே மூல காரணமாக அமைந்துள்ளது. பதினைந்து குடி மக்களும் கண்ணகிப்பக்தர்களின் பரோபகார சிந்தனையினால் வழங்கப்பட்ட அன்பளிப்பு மூலம் ஆலயம் துரித வளர்ச்சியடைந்தது இதற்குத் துணை நின்றவர்கள் ஆலய தலைவர், செயலாளர், வண்ணக்கர், மணியகாரர் மற்றும் நிருவாக சபை உறுப்பினர்கள் ஸ்தபதிகள், சிற்பிகள், ஓவியர்கள், கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குரு மற்றும் அடியவர்களின் சரீர உதவி மூலம் குறுகிய காலத்தில் நிறைவான ஆலயம் அமைத்து வரலாற்றில் சாதனை படைத்துள்ளனர். சாதனையாளர்களாக திகழ்கின்றார்கள் இவர்கள் சரித்திரம் படைத்துள்ளனர். வரலாற்றில் இவ்வாறு குறுகிய காலத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாக இதுவரை அறியப்படவில்லை

இவ்வாறு சிறப்புமிக்க ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பிக்க சிறப்புமலர் வெளியிட வேண்டுமென பொதுச் சபையின் அங்கிகாரம் பெறப்பட்டது. மலராக்கக்குழு தெரிவு செய்யப்பட்டது. நிருவாக சபையுடன் இணைந்து பல ஆலோசனைக் கூட்டங்கள் கூட்டப்பட்டன கூட்ட முடிவின்படி ஆசிச்செய்தியும், வாழ்த்துச் செய்தியும் பெறப்பட்டன. பொது அறிவித்தலின் பிரகாரம் உள்ளூர் எழுத்தாளர்களை அழைத்தோம். தலைப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன கூட்டத்திற்கு சமுகம் கொடுக்க முடியாதவர்களின் ஆக்கங்களையும் பெறுமாறு நிருவாக சபை பணித்தது அதன் பிரகாரம் ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டன அனைத்தும் பிரதியாக்கப்பட்டு நிருவாக சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்களின் அங்கீகாரத்துடன் அச்சேற்றப்பட்டன

எமது கண்ணகியம்மன் பேழையிலிருந்து வருகை தந்தவர் உற்சவ காலத்தில் மட்டும் கருவறையின் பீடத்திலிருந்து அருள் புரிபவர் ஏனைய காலங்களில் பேழையில் உறைபவள் பேழையே அவளின் இருப்பிடம் அதுவே அவளின் காப்பகம். இதனால் சிறப்பு மலருக்கு பேழை எனும் நாமம் சூட்டியலங்கரித்து அழகு பார்க்கின்றோம்.

பேழையினுள் ஆசிச்செய்தி வாழ்த்துச் செய்தி கண்ணகியம்மன் தொடர்பான தகவல்கள் ஆலயம் தொடர்பான விடயங்கள் மற்றும் எருவில் எனும் பதி தலைப்பில் எருவில் தொடர்பான தேடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன எதிர்காலத்தில் திருத்தங்கள்

உள்வாங்கப்பட்டு திருத்திய பதிப்பாக முழுமையாக இடம்பெறும் என்பதைக் கூறிக்கொள்கின்றோம்.

மலர்கள் மலர்வது எம் காதுகளுக்குக் கூட கேட்பதில்லை அதன் நறுமணத்தைக் கொண்டும் மலரைக் கொண்டும் அறிகின்றோம். ஆனால் இந்த மலர் மலரும் போது ஒரு பிள்ளை பிரசவிக்கும் போது ஒரு தாய் படும் வலியையும், வேதனையையும் நாம் அனுபவித்தோம் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கும்பாபிஷேக சிறப்புமலர் பேழை மலர்வதற்கு உரம் இட்டு நன்னீர் ஊற்றி வளர்த்த இவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள் பலகோடி**

மலர் உற்பத்திக்கு ஆசிச் செய்திகள் வழங்கிய ஆன்றோர்கள், வாழ்த்துச் செய்தி வழங்கிய அரச மற்றும் சமய சமூகப் பணியாளர்கள், வாழ்த்துக் கவிதைகளை வடித்த கவிஞர்கள், ஆக்கங்களை தந்துதவிய படைப்பாளர்கள், தேவையான நிழற்படங்களை தந்துதவிய திரு.தனேஸ், இச்செயற்பாட்டை வினைத்திறனுடையதாக மாற்றிய மலராக்கக்குழுவினர், இப்புனித பணிக்கு சகல வழிகளிலும் தோள் கொடுத்த தோழர்கள், மலரை மலரச் செய்த "எவகிறீன்" அச்சகத்தினர், பேழை உற்பத்திற்கு தகவல்களையும், தரவுகளையும் ஊக்கத்தையும் வழங்கிய ஆலய பரிபாலன சபையினர், சரவை பார்த்த கவிஞர் ஆழிவேந்தன் ஆசிரியர்.

இப்பனுவல் நறுமணம் வீசும் மலராக உங்கள் உள்ளங்களில் இருக்கும் எனக் கூறி விடைபெறுகின்றேன்.

**திரு. ச. ரகுபதி**
மலராசிரியர்,
மலராக்கக் குழு
எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்

# காவிய நாயகி கண்ணகி

சா. பரமானந்தம் அதிபர்

தமிழகத்தில் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூற்று எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை வேளையில் மதுரை நகரின் ஓர் பகுதியில் பெண் ஒருத்தியின் அழுகுரல் கேட்டது. இவ்வூரில் கற்புடைப் பெண்கள் இல்லையா? அவர்களது சான்றோர்கள் இல்லையா? என்று அழுது அரற்றுவது கேட்டது கணவனோடு மதுரைக்கு வந்தவள் அவள். அன்று மாலை கணவன் உடல் வெட்டப்பட்டு நிலத்தில் கிடப்பதைக் கண்டு கதறி அழுதாள். சிறிது நேரத்தில் அந்த நகரம் தீப்பற்றி எரிந்தது. அவள் அந்த நகரத்தை விட்டு நாட்டையும் கடந்து சென்றாள். நெடுந்தூரம் சென்று ஒரு குறின்மேல் ஏறி, வேங்கை மரத்தடியில் நின்று, தன் கணவனை நினைத்து ஏங்கினாள். அது கேட்ட வேந்தன் கற்புத் தெய்வம் எனப் போற்றினான். கோயில் எழுப்பி வழிபட்டான். இவ்வாறு வழிபடப்பட்டவளே கண்ணகி.

சோழ நாட்டுத் தலைநகரான காவிரிப்பூம் பட்டணத்தில் மானாய்கன் குடும்பத்தில் அவதரித்தாள். புகுந்த குடும்பமும் அதே நகரத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த மாசாத்துவான் குடும்பம். அழகும் பண்பும் சிறந்து விளங்கிய அவள் அழகும் புகழும் மிக்க கோவலனுக்கு வாழ்க்கைத் துணைவியானாள் என இளங்கோவடிகள் தன் காவியத்தில் அறிமுகம் செய்துள்ளார். கண்ணகியின் தந்தையும் கோவலனின் தந்தையும் பெருஞ் செல்வந்தர்களாக இருந்தமையால் மக்களின் திருமணத்தை பார்போற்ற நடத்தினர். மகளிர் கூடி காதலனைப் பிரியாமல் தழுவும் கை நெகிழாமல் தீது அற்ற வாழ்க்கை வாழ வேண்டும் என மலர்தூவிக் கண்ணகியை வாழ்த்தினர்.

அவ்வாறு கண்ணகியும் கோவலனும் காதலராய் ஒருமித்து உளம் மகிழ வாழ்ந்தனர். ஞாயிறும் திங்களும் ஒருங்கே விளங்கியது போல் இருவரும் விளங்கினர். கோவலன் கண்ணகி மேல் அளவற்ற அன்பும் தீராக் காதலும் கொண்டிருந்தான். இதனைச் சிலப்பதிகார மனையறப்பகுதி விளக்கி நிற்கிறது.

"மாசறு பொன்னே வலம் புரிமுத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே" என்று கண்ணகியைப் பலவாறு

பாராட்டி மகிழ்ந்தார். விருந்து கொடுத்தல், சுற்றம் காத்தல் முதலான கடமைகளைத் தாமே செய்து சிறப்புறுமாறு கண்ணகியையும் கோவலனையும் முறைப்படி தனிக்குடும்பமாக்கி வைத்தனர் பெற்றோர்.

இவ்வாறு சில ஆண்டுகள் வாழ்ந்தவேளை, கோவலனுடைய திராக்கால் ஒரு நாள் மாறியது. காவிரிப்பூம் பட்டினத்தில் கணிகையர் குடும்பத்தில் பிறந்து ஆடல், பாடல்களோடு அழகும் ஒரு கலையாகப் பயிற்று கலைச் செல்வியாக விளங்கிய மாதவியின் உறவு கோவலனுக்கு ஏற்பட்ட நாள் கண்ணகி வாழ்வின் இருள் சூழ்ந்த நாளாகும். கண்ணகி மேல் வைத்திருந்த தீராக் காதல் மாதவியில் மாறியது. அன்பான அவனது உள்ளம் கண்ணகியை மறந்து வீட்டையும் மறந்தது. இதனை இளங்கோவடிகள்

"விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தென்"

என நெஞ்சம் உருகுமாறு பாடியுள்ளார். இதனால் கண்ணகியின் இல்லறம் வாடியது. அறவேர்க்கு அளித்தல், அந்தணரை ஒப்புதல் முதலான நல்லறப் பேறுகளை இழந்தான். அவளது அழகிய சிற்றடிகள் மகிமை பொருந்திய சிலம்பைத் துறந்தன. இடை மேகலையைத் துறந்தது. காதுகள் குழையைத் துறந்தன. கண்கள் மையை துறந்தன. நெற்றி திலகத்தைத் துறந்தது. கூந்தல் எண்ணெய்யைத் துறந்தது. மங்கல அணி தவிர வேறு அணிகலன் அற்றவளானாள். சில ஆண்டுகள் கணவனோடு சேர்ந்து இல்லறக் கடமைகளை செய்து வந்தவள் துயருற்று சோர்ந்து கிடக்கலானார்.

இவ்விடயம் கோலவனின் தாய் தந்தையருக்கு பெரும் கவலையை விளைவித்தது. இருவரும் கண்ணகி நிலை கண்டு கலங்கினர். ஆனால் கண்ணகியோ அவர்கள் முன் துன்புறாதவள் போல் நடித்தாள். அன்பு நிறைந்த உள்ளத்தோடு அருள் மொழிகளால் அவளைத் தேற்றும்போது கண்ணகி மகிழ்வோடு தோன்ற முயன்றாள். ஆயினும் அவள் உள்ளத்தில் இருந்த துயரம் அவள் புன்முறுவலில் வெளிப்பட்டது. இதனைக் கண்ணுற்ற மாமனும் மாமியும் உள்ளம் வருந்தினர். தன் கணவனது குற்றத்தை மறைத்து தன் கவலையையும் குறைக்க முயன்ற கண்ணகி தனிமையில் கண்ணீர் விட்டு கலங்கி அழுதாள். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன.

கண்ணகியின் துயரை அறிந்த அவளது தோழி ஒருத்தி கண்ணகிக்காக சாத்தன் கோயிலில் வழிபாடு செய்து விட்டு கண்ணகி வீட்டுக்குச் சென்றாள். உன் துயர்

திருமாறு நீ உன் கணவனைப் பெறுவாயாக எனக் கூறினாள். அது கேட்ட கண்ணகி அவளை நோக்கி தோழியே என் நெஞ்சம் ஐயுறுகிறது. நான் கண்ட கனவு என்னை மேலும் துயரத்தில் ஆழ்த்துகிறது. என் கணவர் என் கையைப் பற்றிச் செல்ல நாங்கள் இருவரும் எங்கோ ஒரு பெரிய நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். அந்நகரில் சுடாத பழி ஒன்றை எங்கள் மேல் சுமத்தினார்கள். அதனால், என் கணவனுக்கு தீங்கு உற்றது அது கேட்டு நான் அரசனிடம் சென்று முறையிட்டேன். அதன்பின் அரசனுக்கும் அவ் ஊருக்கும் கேடு நேர்ந்தது. அதை நான் உன்னிடம் சொல்ல மாட்டேன். சொல்வதும் குற்றம் என நினைக்கிறேன் எனக் கூறினாள். உடனே தேவந்தி கண்ணியை நோக்கி தோழி! நீ கணவரால் வெறுக்கப்பட்ட மனைவி அல்லள். ஏதோ காரணத்தால் சில ஆண்டுகளாக அவர் உன்னை மறந்து வாழ்கிறார். அவர் உன்னை வெறுத்துப் பிரியவில்லை. முன் பிறப்பில் கணவனுக்காக நோற்க வேண்டிய நோன்பு ஒன்றை தவற விட்டிருப்பாய். அதனால் தான் கணவனைப் பிரிந்து வாழ வேண்டி நேர்ந்தது. அக்குற்றம் இனித் தீரட்டும் காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் நெய்தலங்கானலில் சோம குண்டம், சூரிய குண்டம் என்றும் துறைகள் உள்ளன. அவற்றில் நீ முழுகி காமன் கோயிலை தொழ வேண்டும். அவ்வாறு தொழும் பெண்கள் இம்மையில் கணவரைப் பிரியாமல் இனிது வாழ்வார்கள். மறுமையிலும் போக பூமியில் போய் பிறந்து பிரியா வாழ்க்கை பெறுவார்கள். ஆகையால் நாம் ஒரு நாள் அங்கு போய் அத்துறைகளில் முழுகி வருவோம் என்றாள். அது கேட்ட கண்ணகி அது தக்கது அன்று என்று சொல்லி வாளா இருந்தாள். கற்புடைய மகளிருக்கே கணவரைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழுதல் ஆகாது எனக் கூறி மறுத்து விட்டாள்.

அவ்வாறு இருக்கையில் வேலைக்காரி ஒருத்தி கண்ணகியை நோக்கி வந்து நம் தலைவர் வருகிறார். வாயிலில் இருக்கிறார் என்றாள். கோவலன் வந்து பள்ளியறையுள் சென்று தன் துணைவியின் வாடி வதங்கிய மேனி கண்டு வருத்தத்தை உணர்ந்து வருந்தினான். “வஞ்சனையும் பொய்யும் வாழ்வாக்க கொண்டவளோடு இவ்வளவு காலமும் கழிந்தமையால் முன்னோர் தேடிக் கொடுத்த பெருஞ் செல்வத்தை அழித்து விட்டேன். வறுமையுற்றேன் என் வறுமையை எண்ணி நாணுகின்றேன்” என வருந்தினான். இதனை இளங்கோவடிகள்

“சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடித்
குலம்தரு வான்பொருட் குற்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு” என்று சிலப்பதிகாரத்தில் பாடியுள்ளார்.

இவ்வாறு கோவலன் கூறியதை கேட்ட கண்ணகி சிறிதும் வருந்தாது புன்முறுவல் காட்டி மலர்ந்த முகத்தோடு "சிலம்புகள் உள்ளன அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள். கோலவனும் ஏற்று இவற்றையே முதலாக வைத்து வாணிபம் செய்வேன் இழந்த அணிகலங்களையும் அழிந்த செல்வத்தையும் இதை வைத்துச் சேர்க்கப் போகின்றேன். என் வறுமை எனக்கு வெட்கம் தருவதால் இந்த நகரத்தை விட்டு மதுரை நகருக்கு சென்று வாணிபம் செய்வேன். நீயும் என்னுடன் புறப்படு என்றான்.

கோலவன் தன் நிலை குறித்து வருந்தி வெளியூர் செல்லத் துணிந்த வைகறையிலேயே துணைவியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டான். கதிவரன் ஒளியும் தோன்றவில்லை. நிலவும் மறைந்து விட்டது. அந்த இருள் நிறைந்த இருண்ட வைகறையில் செல்வச் சிறப்பு விளங்கிய தமது அழகிய வீட்டின் வாயிலைக் கடந்து இருவரும் வெளியேறினர். கோயில்களை எல்லாம் கடந்து சென்று சோலையின் வழியாக காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தையும் கடந்து சென்றனர். காவிரிக் கரையில் உள்ள மலர் பொய்கையையும் கடந்து கவுந்தியடிகளின் தவப்பள்ளியமைந்த சோலையை அடைந்தனர். அப்போது கண்ணகி கால் நொந்து வருந்தி இளைத்துப் பெருமூச்சு விட்டவாறே "மதுரை நகர் எங்கே" புன்முறுவலோடு கேட்டாள். கோவலன் "இன்னும் முப்பது காதம்தான் அண்மையில் தான் உள்ளது" என்று நகைத்தான். இருவரும் தவப்பள்ளியில் நுழைந்து கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினர். கவுந்தியடிகள் இருவரை நோக்கி நீங்கள் உயர்குடியில் பிறந்தவர்கள் துன்புற்று இங்கு வரக் காரணம் என்ன என்று வினவினார். "மதுரை நகர் சென்று வாணிபம் செய்து பொருள் தேடுவதே எமது நோக்கம் எனக் கோவலன் கூறினான்" அப்போது கவுந்தி அடிகள் கண்ணகி நிலை கண்டு அவளுடைய மெல்லிய பாதங்கள் கற்கள் நிரம்பிய பாதை வழியே எப்படி நடக்க முடியும் தடுத்தாலும் நிற்கமாட்டீர்கள் ஆதலால் நானும் கூடவே வருகிறேன் எனக் கூற கோவலன் அடிகளாரைக் கை கூப்பித் தொழுது எமது துயரம் நீங்கி விட்டதாகக் கூறி மகிழ்ந்தான்.

பின்னர் மூவரும் சேர்ந்த பயணித்தனர். களைப்பினால் கொற்றவைக் கோயிலில் தங்கி இளைப்பாறினர். பகலில் நடத்தல் கடும் வெப்பம் எனக் கருதி இரவில் பயணத்தை ஆரம்பித்தனர். பால் நிலவொளியில் கோவலன் கண்ணகியின் கையைத் தன் தோள் மேல் வைத்துக் கொண்டு எதற்கும் அஞ்சாமல் வா எனக் கூட்டிச் சென்றான். வழியெல்லாம் கவுந்தி அடிகளின் அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டு காடுகளையும்

பாலையையும் கடந்து மதுரை நோக்கிச் சென்றனர். வைகை ஆற்றின் கரையை அடைந்தனர். ஆற்றைக் கடந்து மதுரை நகரை அண்மித்ததும் அங்குள்ள மலர்கள், செடிகள், வண்டுகள் முதலான யாவையும் துயரத்தால் வாடின. மதுரை மதிலில் மேல் உள்ள கொடிகளும் இந்த நகருக்குள் வராதீர்கள் வராதீர்கள் என தடுப்பது போல் அசைந்தாடின.

காலையில் மதுரைக் கோவிலிலும் பாண்டியன் அரண்மனையிலும் ஒலித்த முரசொலியைக் கேட்டு கோவலன் கவுந்தியடிகளிடம் பலவாறு கூறினான். பின் கண்ணகியை கவுந்தியடிகளிடம் விட்டு விட்டு மதுரை நகரில் தங்க இடம் தேடிச் சென்றான். பின் வந்து மதுரை நகரில் பெருமைகளைக் கூறினான். அதன் பின் மடவன் என்பவனது சந்திப்பும் ஏற்பட்டது. அப்போது கோவலன் தான் கண்ட கனவு பற்றி கூறினான். பாண்டிய நகரில் ஒரு குறுமகனால் துன்பத்திற்கு உள்ளானேன். கண்ணகி வருந்தும்படியாக நேர்ந்தது. ஆடை பறிக்கப்பட்டு எருமை மேல் ஊர்ந்திடலாயிற்று. துணைவியோடு துறவறம் பூண்டதாகவும் மணிமேகலையைப் புத்தபெருமான் முன்னிலைக்கு மாதவி அளித்ததாகவும் நள்ளிரவில் கனவு கண்டேன் என்றான். உடனே நீங்கள் இங்கிருந்து செல்லுங்கள் எனக் கூறினான்.

அப்போது ஆயர் மகள் மாதிரி கவுந்தியடிகளைக் கண்டு வணங்க அடிகளும் கண்ணகியைக் காக்க இவளே சிறந்தவள் என எண்ணி மகிழ்ந்தார். அவளிடம் கண்ணகிக்கு செய்ய வேண்டிய பணிவிடை பற்றி கூறி கண்ணகியை அவளுடன் அனுப்பினார். மாதிரி கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக் கொண்டு தனது வீடு சேர்ந்தாள். பின் விருந்து சமைத்து உண்டு மகிழ்ந்தனர். அதனைக் கண்ட மாதிரி

“ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப்புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி” என வியந்து பாராட்டினார். கோவலன் தன் செயலையும் கண்ணகிக்கு நடந்தவற்றையும் எண்ணி எண்ணி வேதனைப் பட்டான். இருவரும் ஒருவருக்கொருவர் அன்பைப் பறிமாறி மகிழ்ந்திருந்தனர்.

பின் கோலவன் வீட்டை விட்டு வெளியேற மனம் இன்றி கண்ணகியை ஆயர் வீட்டில் விட்டு அடைக்கலம் கொடுத்து விட்டு சிலம்பு விற்கச் சென்றான். தீயசகுனங்கள் நடந்தன. அவற்றை அறியாமல் சென்றான். பொற்கொல்லன் ஒருவனை எதிரே கண்டான்

அவன் பாண்டியனின் அரண்மனைக் கொல்லனாக இருக்கக்கூடும் என்று எண்ணி அவனை அணுகி "பாண்டியன் தேவிக்குப் பொருத்தமான காற்சிலம்பு உள்ளது நீ மதிப்பிடுவாயோ" எனக் கேட்டான். "எனக்கு மதிப்பிடத் தெரியாது என்றாலும் வேந்தருடைய முடி முதலான அணிகலங்கள் செய்யத் தெரியும் என கை தொழுது கூறினான்" உடனே கோவலன் சிலம்பு முடிச்சை அவிழ்த்துக் காட்டினான். அப்போது பொற்கொல்லன் "இந்தச் சிலம்பு கோப்பெருந்தேவிக்க அல்லாமல் மற்றவருக்குப் பயனில்லை" என்றான். கோவலனை சிறு குடிசையருகே நிற்கச் சொல்லி விட்டு நான் வேந்தனுக்கு அறிவித்து விட்டு வருகிறேன் எனக் கூறிச் சென்றான். தான் தப்புவதற்காகச் சிறந்த சந்தர்ப்பம் எனக் கருதி பொற்கொல்லன் அரசனிடம் சென்றான்.

அரசனும் அரசியும் ஏவல் பெண்களோடு இருக்கும் நேரம் பொற்கொல்லன் சென்று அரசனை வணங்கி அரண்மனைச் சிலம்பைத் திருடிச் சென்ற கள்வன் அகப்பட்டுக் கொண்டான்" எனவும் என் குடிசையருகில் இருக்கிறான் எனவும் கூறினான். இது கேட்ட பாண்டியன் சிறிதும் சிந்திக்காமல் காவலரை அழைத்து "அரசின் காற் சிலம்பு அந்தக் கள்வன் கையில் இருந்தால் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக" என்று ஏவினான். அரசனின் ஆணையை அறிந்ததும் பொற் கொல்லன் மகிழ்ந்தான். காவலரை அழைத்துச் சென்று கோவலனைக் காட்டினான். அவர்கள் கோவலனைக் கண்டு இவன் இருக்கும் நிலையை பார்த்தால் அவன் கள்வன் போல் தெரியவில்லை குற்றமும் புரியவில்லை எனக் கூற பொற்கொல்லன் பலவாறு எல்லாம் கள்வர் பற்றிக் கூறினான். காவலரும் இசைந்து கோவலனைக் கொலை செய்தனர்.

இந்நிலையில் ஆயர் சேரியில் சில தீய அறிகுறிகள் காணப்பட்டன. இவை பற்றி அஞ்சிய ஆய்ச்சியர் கூடிக் கண்ணகியை வழிபட்டுப் குரவைக் கூத்தாடினர். மாதிரி வைகையாற்றில் நீராடச் சென்றிருந்தாள். ஊர்ச் செய்தி கேட்டு விரைந்து திரும்பி வந்தாள். திகைத்து நின்றாள் பெரு மூச்சு விட்டுக் கலங்கினாள். கண்ணகியும் கோவலன் இல்லாதது கண்டு கலங்கினான். ஏதோ வஞ்சகம் நடந்து விட்டது என்று எண்ணிக் கலங்கினார். அலறினாள். "அரண்மனைச் சிலம்பைத் திருடிச் சென்ற கள்வன் என்று கொன்று விட்டார்களாம்" என ஊரார் சொன்ன செய்தியை மாதிரி சொன்னாள். கண்ணகி கதறியழுதாள். இக் கொடுஞ்சொல்லைக் கேட்டதும் கண்ணகி

"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழி கதிர்த்
திங்கள் முகிலோடும் சேணிலம் கொண்டெனச்

செங்கண் சிலம்ப அழுதாள் தன் கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்" என உருகக் கூறியுள்ளார் இளங்கோவடிகள். சூரியனை விளித்து "காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்" என அலறினாள். அப்போ மறுமொழி கூறுவதுபோல் "உன் கணவன் கள்வன் அல்லன் கள்வன் என்று கொன்ற இந்த ஊர் தீப்பற்றி அழிந்துவிடும்" என்ற ஒரு குரல் கேட்டது. கேட்டதும் கண்ணகி இருந்த மறு சிலம்பை கையில் ஏந்தியவாறு நடந்தாள். "நீதிமுறை இல்லாத அரசனுடைய ஊரில் வாழும் பத்தினிப் பெண்களே யான் படாத துயரம் பட்டேன் இதுவரையில் யாரும் உறாத துன்பம் உற்றேன். என் கணவன் கள்வன் அல்லன் காற்சிலம்பை கவர்ந்து கொள்வதற்காக என் கணவனைக் கொன்று விட்டார்கள். இத்தனை மகளிரின் கண்முன்னே என் காதல் கணவனைக் காண்பேனா? காதல் கணவனைக் கண்டு அவன் வாயால் நல்ல சொல் கேட்பேனா? அவ்வாறு கேட்கத் தவறிவிட்டால் வருந்தத்தக்கவை செய்து விட்டாள் என்று என்னை எண்ணுங்கள் என்ற ஆற்றாது அழுதாள்.

இது கண்ட மதுரையர்கள் வருந்திக் கலங்கினர். அவருட்சிலர் கோவலன் வெட்டுண்டு வீழ்ந்த இடத்தைக் கண்ணகிக்கு காட்டினர். குருதியிடைக் கிடந்த கோவலனை கண்ட அவள் பலவாறு வேண்டி அழுது புலம்பினாள். "கொண்ட கள்வர் உற்ற குறையைத் தாங்கிக் காப்பாற்றும் கற்புடைய மகளிரும் இவ்வூரில் உள்ளனரோ? ஈன்ற குழந்தையை எடுத்து வளர்க்கும் அருளுடைய சான்றோரும் இந்த ஊரில் உள்ளனரோ? வாளால் கொன்று தவறு இழைத்த பாண்டியனுடைய மதுரையில் தெய்வமும் உள்ளதோ? என்று சொல்லி அழுதாள். இவ்வாறு அழுது கணவனுடைய மார்பைத் தழுவிக் கொள்ள கோவலன் எழுந்து நின்றான். "உன் ஒளிமுகம் அழுது அழுது குன்றி விட்டதோ" என்று கண்ணகியின் கண்ணீரைக் கையால் மாற்றினான். அவள் அழுது ஏங்கி நிலத்தில் விழுந்தாள். கணவனின் திருவடிகளைக் கைகளால் பற்றினாள் கோவலனோ "நீ இரு" என்ற சொல்லிப் பிரிந்தான். கண்ணகி திகைத்தாள் என்னை இவ்வாறு செய்வித்தது தெய்வமோ எங்கு போய் தேடுவேன் கணவன் மீது சுமத்தியது வீண் பழி இது பொய்யுரை என் உள்ளம் கொதிக்கிறது கொடிய வேந்தனைக் கண்டு காரணம் கேட்கப் போகிறேன் என்று சூழ் உரைத்து அவ்விடத்தை விட்டு நீங்கி பாண்டியன் வாயில் முன் சென்றாள். வாயில் முன் சென்று வாயில் காவலனை விழித்து ஏ வாயில் காவலனே அறிவற்ற, உணர்வற்ற நெஞ்சத்தோடு நீதி முறை தவறி தீங்கு செய்த வேந்தனுடைய வாயில் காவலனே சிலம்பைக் கையில் ஏந்திய

ஒருத்தி கணவனை இழந்தவள் ஒருத்தி வாயிலில் நிற்பதாக அறிவிப்பாய் என்றாள். இதனை இளங்கோவடிகள்

"வாயி லோயே வாயிலோயே
அறிவினை போகிய பொறிஅறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தேன் வாயிலோயே
இறை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையாள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே" என நெஞ்சை அள்ளுமாறு கூறியுள்ளார்.

வாயில் காவலன் சென்று அரசனிடம் தெரிவித்தான். அரசன் "அவள் இங்கே வரட்டும் இங்கே அழைத்து வா என்றான். கண்ணகியும் சென்றாள். அவளைக் கண்ட வேந்தன் நீ யார்? என்றான். கண்ணகி நீதி செலுத்தாத மன்னவா நான் காவிரிப்பூம் பட்டண வேந்தன் மானாக்கன் மகள் எனவும் உன்னால் வெட்டிக் கொல்லப்பட்ட கோவலன் மனைவி என எடுத்துரைத்தாள். இவை கேட்ட வேந்தன் கலங்கினான். பொன் அணங்கே கள்வனை கொல்வது கொடுங்கோல் ஆகாது அரச நீதி அது என்றான். உடனே கண்ணகி உண்மையை ஆராயாத வேந்தே என் கணவர் கள்வன் அல்லன் எனக் காட்டுவேன். இதே என் சிலம்பில் உள்ளது மாணிக்கம் என்றாள். வேந்தன் எம் சிலம்பில் உள்ளது முத்து என்ற கூறி கொண்டுவரச் சொல்லி அவள் முன் வைத்தான். கண்ணகி உடனே அதை எடுத்து உடைத்தாள் மாணிக்கம் தெறித்தது. இது கண்ட வேந்தன் குடை தாழ்ந்தவனாய் செங்கோலை தளர்ந்தவனாய் "பொற்கொல்லன் சொன்ன சொல்லைக் கேட்டு நீதி தவற விடச் செய்த யானே கள்வன் தென்னாட்டு ஆட்சி முறை என்காலம் தொடங்கி கெட்டுவிட்டதே என் ஆயுள் அழிக" என மயங்கி வீழ்ந்தான். சீற்றம் தணியாத கண்ணகி கோப்பெருந்தேவியை நோக்கி வேந்தன்தேவி யான் பாவி என்றும் அறிவேன் ஆயினும் ஒன்று சொல்வேன் 'பத்தினிப் பெண்கள் பிறந்து வாழ்ந்த ஊர் எனது ஊர். யானும் ஒரு பத்தினிப் பெண்ணாக இருந்தால் அரசோடு மதுரையும் எரியூட்டி அழிப்பேன் என் சூழுரைத்தாள். அவ்விடத்தை விட்டு அகன்று மதுரை நகர மாதர்களே, மைந்தர்களே, கடவுளரே, தவத்தோரே கேளுங்கள் என் கணவனுக்கு தீங்கு இழைத்த வேந்தனுடைய இவ்வூரின் மேல் சீற்றம் கொண்டேன். யானோ ஒரு குற்றமும் அறியேன் எனக் கொதித்தாள். உள்ளத்து கொதிப்பு தீயாக மாறி மதுரையை எரித்தது. அது முதல் மதுரை மாநகரின் சிறப்பெல்லாம் போயின மாநகரம் பாழடைந்தது. அவ்வீதிவழியே கண்ணகி

கவலையுற்றுத் திரிந்தாள். அப்போது மதுரைத் தெய்வம் அவளை அணுகி அவளுடைய முற் பிறப்பில் நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்து கோவலனுடைய கொடு வினையை விளக்கி "நீ உன் கணவனை பதினான்கு நாள் கழித்துத் தெய்வ யாக்கையுடன் காண்பாய்" எனக் கூறிய பின் கண்ணகியின் சீற்றம் தணிந்தது. எனினும் கணவனை காணாமல் எங்கும் உட்கார மாட்டேன் எனக் கூறியவாறு அலைந்து திரிந்தாள். கிழக்கு வாயிலில் நுழைந்தபோது கணவனை இழந்தவளாய் செல்கின்றேன் எனத் துயருற்றாள். திருச்செங்குன்று என்னும் குன்றத்தை அடைந்து அதன் மேல் ஏறி அதன் மேல் இருந்த வேங்கை மர நிழலில் "யான் ஒரு பாவி" என ஏங்கி நிற்க பதினான்கு நாள் கழித்த பின் தேவர்கள் அவள் பெயரை வாழ்த்திப் புகழ்ந்து மலர்மாரி பொழிய கோவலனோடு வானவூர்தி ஏறிச் சென்றாள் கண்ணகி.

சோழ நாட்டில் கண்ணகி பிறந்து வாழ்ந்து வருந்தினாள். பாண்டிய நாட்டில் பெருந்துயருற்றுப் புலம்பிப் போராடினாள். சேர நாட்டில் சேர்ந்து அமைதியுற்றுப் புகழுருப் பெற்றாள். இவ்வாறு கற்புடையாரின் புகழை சோழ நாட்டிலும், நீதி முறை தவறியதை பாண்டிய நாட்டிலும், வஞ்சின வேட்கையை சேர நாட்டிலும் நிலை பெறச் செய்த கண்ணகியை நாமும் போற்றி நற்பேறு பெறுவோமாக.

"மாற்ற மிகுந்ததோர் மன்னவன் தன்னை
வழக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்"

**உசாத்துணை நூல்கள் :**
சிலப்பதிகாரம்
கண்ணகி வழக்குரை

## நெற்றியில் திருநீறு அணிதல்

நாடாண்ட மன்னனும், மாசறக் கற்றவரும் கடைசியில் சாம்பலாகத் தான் போகப் போகிறோம். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகிறது. மனித உடலில் நெற்றி என்பது மிக முக்கிய பாகம் அதன் வழியாக மிக அதிகமாக சக்தி வெளிப்படும். உள்ளிழுக்கவும் செய்யும். இது ஒரு வர்ம ஸ்தானம் கூட. சூரிய கதிர்களின் சக்திகளை இழுத்து நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீர் செவ்வனே செய்யும். அதனால்தான் நெற்றியில் திருநீறு பூசுகின்றார்கள்.

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள்

திரு. ச. ரகுபதி மலராசிரியர்

வருடாந்த திருச்சடங்கானது வைகாசிமாதப் பூரணையைச் சார்ந்து வருகின்ற திங்கட்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தியாகக் கொண்டு அதன் முன்னுள்ள ஏழு நாட்கள் சடங்கு இடம்பெறும்.

கண்ணகியின் திருச்சடங்கு விதிமுறைகளை தமது மூதாதையர்களிடமிருந்து முன்னோர் நிகழ்த்திய அதே முறையில் பாரம்பரிய மரபுகளுக்கேற்ப சடங்கினை ஆற்றுப்படுத்துபவர் கட்டாடியார் என அழைக்கப்படுகின்றார். இவர் சடங்கு முறைகள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்ட பத்ததி (பத்தாசி) முறையில் சடங்கினை நடத்துவார். பத்ததிகள் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருவதால் திருச்சடங்கு கோயில் பூசாரியாக குறித்த பரம்பரையினரே செய்து வருகின்றனர். கோயிலுக்கு அருகில் வசிக்கும் பத்தினாச்சி குடியினரே கட்டாடியாராகவும் (பூசகராகவும்) உதவியாளர்களாகவும், தொண்டூழியம் புரிபவர்களாகவும் செயற்படுவது ஆலய பாரம்பரிய மரபை பின்பற்றுவது சிறப்பம்சமாகும்.

## 01. பூசை முறைகள்

ஆலய திருக்கதவு திறக்கும் நிகழ்வு திங்கள் பின்னிரவு, (செவ்வாய்கிழமை அதிகாலை) இடம்பெறும். இச்சடங்கினை பணிக்கனார் குடியினர் சிறப்பாக நடத்துகின்றனர். அன்றிரவுச் சடங்கினை பெத்தான்குடியினர் அம்மனுக்கு எடுக்கின்றனர். புதன்கிழமை பகல் பூசையினை கரவாகு பணிக்கனார் குடியினர் செய்கின்றனர். அன்றைய இரவுப் பூசையினை களுதாவளை பெத்தான்குடியினர் எடுக்கின்றனர். வியாழக்கிழமை பகல் சடங்கினை கச்சிலாகுடி மக்களுக்கும் இரவுப் பூசையினை வேளாளர் குடியினரும் நடத்துகின்றனர். வெள்ளிக்கிழமை இடம்பெறும் பகல் பூசையினை பத்தினாச்சி குடியினரும் இரவுப் பூசையினை மருத்துவிச்சி குடியினரும் நடத்துகின்றனர். சனிக்கிழமை பகல் பூசையினை சஸ்டி குடியினரும் மாலைப் பூசை கன்னிக்கால் வெட்டும் நிகழ்வினை குண்டன் குடியினரும் சிறப்பாக நடத்துகின்றனர். ஞாயிற்றுக்கிழமை பகல் பூசையாக திருக்கல்யாணச் சடங்கினை கோப்பிகுல மக்கள் செய்கின்றனர். அன்றைய இரவுப் பூசையினை படையாண்டகுல மக்கள் நடத்துகின்றனர். திங்கட்கிழமை பகல் பூசையினை உலகிப்போடிகுடி மக்கள் அம்மனுக்கு விழா எடுக்கின்றனர்.

திங்கட்கிழமை மாலை வட்டுக்குத்துப் பூசையினையும் அதிகாலையில் இடம்பெறும் திருக்குளிர்த்தில் சடங்கினையும் காலிங்காகுல மக்களும், மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சியடிப்படையில் வருடாவருடம் மாறிமாறிச் செய்கின்றனர்.

**02. முக்கிய சடங்குகள் செய்யப்படும் முறைகள் :**

**(அ) ஊர்காவல் பண்ணல்**

திங்கட்கிழமை மாலை வேளையில் ஊர்காவல் பண்ணல் நிகழ்வு இடம்பெறும் கட்டாடியார் ஊர்காவல் அம்மனையும் பாளையையும் வேப்பிலையும் தன் மார்பில் இரு கைகளாலும் அணைத்தவாறு செல்வார் அவருக்கு அருகில் உதவியாளர்களும், காவியம் பாடுபவர்களும் உடுக்கை சிந்த நிருவாகிகளும், அடியவர்களும், தீச்சுடர் ஏந்தியவாறு பிரதான எல்லைகளின் ஊடாக செல்வார்கள் வழக்குரைக்காவியம் பாடிக்கொண்டு செல்ல பாதைகளில் அடியவர்கள் நிறைகுடம் வைத்து அம்மனை வழிபடுவார்கள். முக்கியமான சந்திகளிலும் கெட்ட பிசாசுகளுள்ள இடங்களிலும் தேங்காய் வெட்டப்படும் கெட்ட ஆவிகள், பிசாசுகள், கெட்ட தெய்வங்கள் ஊரில் நுழையாமல் தடுப்பதே இதன்நோக்கமாகும். ஊரிலுள்ள கெட்ட தெய்வங்கள், ஆவிகள், பிசாசுகளை விரட்டியடித்து தூய்மைப்படுத்துவதாகும். இதனூடாக ஆலயமும் தூய்மைப்படுவதுடன் இறைசக்தி கிடைக்கும் என நம்பப்படுகின்றது. ஆலய திருச்சடங்கு காலத்தில் மக்கள் பய பீதியின்றி இரவு வேளைகளிலும் எந்த நேரங்களிலும் வீதிகளில் நடமாடித் திரிவார்கள். அத்தோடு அக்காலத்தில் கிராமத்தில் மச்சம், மாமிஷம் பூரணமாக தவிர்க்கப்படும் இதனால் கிராமம் தூய்மையடைகின்றது. இறை சக்தி பெருகின்றது.

**(ஆ) கதவு திறத்தல்**

திங்கள் பின்னிரவு (செவ்வாய்க்கிழமை அதிகாலை) நான்கு மணிக்கு கதவு திறத்தல் பூசை இடம்பெறும் ஆலயத்தின் கருவறையின் கதவின் படிக்கட்டில் மடை வைக்கப்படும் ஆலய வண்ணக்கரிடமுள்ள திறப்பு மடையில் வைக்கப்படும் பூசை ஆரம்பமாகும். உடுக்கு, பறை ஒலியுடன் காவியம் பாடப்படும் தேங்காய் உடைக்கப்படும் ஆலய வண்ணக்கரால் கதவில் திறப்பு போடப்படும். பின்னர் கட்டாடியார் கோயிலை திறப்பார். கட்டாடியார் மாத்திரம் உட்செல்வார். அங்குள்ள பேழையை எடுத்து வெளியிலுள்ளவர்களிடம் காண்பிப்பார். பின்னர் கருவறை சுத்தப்படுத்தப்படும். கண்ணகியின் சிலையை பீடத்தில் உரிய இடத்தில் வைப்பர். இவ்வருட பூசை எந்தவித இடையூறுமின்றி இடம்பெற வேண்டுமென கண்ணகித் தாயை மன்றாடும் நிகழ்வும்

இடம்பெறும். திருக்கதவு திறக்கும் பூசையினை பணிக்கனாக்குடியினர் சிறப்பாக நடத்துகின்றனர். ஆலய நிருவாகிகளும் நிகழ்வில் பங்கேற்பர். பூசை முடிவுற்ற பின்னர் பணிக்கனாக்குடியினரால் கண்ணகி வழக்குரை ஏடுதனை ஆரம்பித்து பாடுவது சிறப்பம்சமாகும். அத்தோடு திருச்சடங்கு முடிவுற்றதும் அவ் ஏட்டினை கட்டி பத்திரப்படுத்தி வைப்பதும் அக்குடியினரின் மரபாகும். உற்சவகாலத்தின் போது கண்ணகி வழக்குரை படிப்பது மரபாகும். இத்திருச்சடங்கு காலத்தில் பூசை தவிர்ந்த ஏனைய நேரங்களில் இருவரால் மாறி மாறிப் பாடப்படுகின்றது இது ஒரு சிறப்பம்சமாகும்.

கண்ணகித் தாயின் வாழ்வில் பல துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டன. அவளின் வாழ்வில் இருள் கௌவ்வியது. அவளது அவதார நோக்கம் நிறைவேறியதும் தெய்வமானவள். எனவே கதவு திறத்தல் மூலம் அவளின் வாழ்வில் ஒளி பிறக்கின்றது எனும் நம்பிக்கை ஏற்படுகின்றது அவளை வழிபடுவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது அதன் மூலம் அவள் மகிழ்வடைகின்றாள். எமக்கு அருள் மழை பொழிகின்றாள். எனவே கதவு திறத்தல் என்பது கண்ணகித்தாய்க்கும், எமக்கும் மகிழ்ச்சியளிக்கும் நிகழ்வாகும்.

**(இ) கன்னிக்கால் வெட்டுதல்**

ஆலயத்தில் கன்னிக்கால் வெட்டுவதற்கான திருச்சடங்கு சனிக்கிழமை மாலை குண்டங்குடி மக்களால் சிறப்பாக நடத்தப்படும். ஆலயத்தில் பூசை முடிவுற்ற பின்னர் ஆலயத்தில் வடதிசையில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் கன்னிக்கால் (பூவரசு மரத்தை) வெட்டுவதற்காக புறப்படுவார்கள் உரிய இடத்திற்கு சென்று கன்னிக்காலாக வெட்டவுள்ள பூவரச மரத்தடியில் மடை வைக்கப்படும். பறை, உடுக்கு ஓசையுடன் வழக்குரை காவியம் பாடப்படும் பூசை இடம்பெறும் பின்னர் பூசகரால் கன்னிக்கால் மூன்றுமுறை வெட்டப்படும் அதன்பின்னர் குண்டங்குடி தலைவரினால் கன்னிக்கால் வெட்டி வீழ்த்தப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பெண்களினால் குரவை, அரோஹரா போடப்படும் பட்டாசுகள் கொளுத்தப்படும், வீழ்த்தப்பட்ட கன்னிக்காலினை கோப்பிகுல மக்கள் தாங்குவார்கள் அதை பக்குவப்படுத்துவர் (பிரித்தெடுக்கப்படுகின்ற பட்டைகளை எடுப்பதற்கு அடியவர்கள் முண்டியடிப்பார்கள் அவற்றை வீட்டில் சுவாமியறையில் வைத்து தீராத நோய்கள் வரும்போது தாயத்துக்களாக அணிவார்கள் நோய்கள் தீர்ந்துவருகின்றன.)

கல்யாணக்கால் வெட்டிய பின்னர் மீண்டும் மடைவைத்து பூசை இடம்பெறும். திருநீறு, சந்தனம், மஞ்சள் பூசப்படும் வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு தங்கு

தையல் ஊசியினால் தைக்கப்படும். கோப்பிகுல மக்களால் தோளில் சுமக்கப்பட்டு பவனிவரும் வீதியின் இருமருங்கிலும் நிறைகுடம் வைத்து அம்மனை வரவேற்பர் வழிபடுவர். ஆடவர்கள் ஆடிப்பாடி வருவார்கள் ஊர் மக்கள் ஒன்று கூடிவருவர். பாரம்பரியமாகவுள்ள கல்யாண வாயிலான மேற்கு வாயிலினூடாக அவர்களினால் அமைக்கப்பட்ட கண்ணகியின் திருமணக்காட்சி வடிவமைக்கப்பட்ட வாயிலினூடாக வந்து ஆலயத்தை வலம் வந்து கல்யாண மண்டபத்திற்கு கொண்டு செல்வர். அங்கு நவதானியங்கள் இடப்பட்டு மண்டபத்தின் மத்தியில் நடப்படும் நான்கு பக்கமும் மேலும் நான்கு கால்கள் நாட்டப்படும் நடுவிலுள்ள கால் கண்ணகியாகவும், ஏனைய நான்கு கால்களும் அவருடைய தோழிகளாகவும் கருதப்படுகின்றன. அடியவர்களினால் வழங்கப்படுகின்ற அழகிய சருகைசாறிகளால் கால்களும் ஆலயத்தின் மேற்குப்புற வாயிற்பக்கம் கல்யாண மண்டபமும் அலங்கரிக்கப்படும். இது கோப்பிகுல மக்களுடன் ஏனைய குடி மக்களும், ஆலய நிருவாக சபையினரும் இணைந்து கொண்டு அலங்கரிப்புப் பணியில் ஈடுபடுவது சிறப்பம்சமாகும்.

கண்ணகிக்கு சேலை உடுத்தப்படும். பழ வகைகள், பலகாரங்கள், இளநீர் கொண்டு அலங்கரிக்கப்படும். திருமணச் சடங்கிற்கு தயார்படுத்துவர். அதிகாலை கண்ணகியம்மனுக்கு கன்னிக் கழிப்பு எனும் சடங்கு இடம்பெறுவது மரபாகும்.

கண்ணகி மானிடப் பெண்ணாக அவரித்தபோது திருமண வயதையடைந்ததும் திருமணம் செய்து கொடுப்பதற்கு பெண் பார்த்தல், நிச்சயார்த்தம் என்பன இடம்பெற்றன. அதேபோல் தமது அடியவர்களும் நடாத்தி கண்ணகித்தாயை மகிழ்ச்சியடையச் செய்வதற்காகவே இந்நிகழ்வை நடத்துகின்றனர். அவருடைய மனதைக் குளிர வைத்து அருளினை பெறுவதே நோக்கமாகும். கன்னிக்காலாக பூவரசமரம் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. பூவரசு என்பதை பூ + அரசு என பிரிக்கப்படுகின்றது. பூ என்பது அழகானது, மென்மையானது என பொருள் கொள்ளலாம். எனவே அழகான மரம் என பொருள் கொள்ளலாம். பெண்களை பூவுக்கும், அழகுக்கும் ஒப்பிடுவார்கள் எனவே தான் பூவரசமரத்தை கன்னிக்காலாக பயன்படுத்துகின்றார்கள். அத்தோடு பூவரசு மரத்தின் பட்டையை உரித்ததும் அழகிய பெண்ணின் உடம்பில் மஞ்சள் பூசியதும் எவ்வாறு காணப்படுகின்றதோ அவ்வாறே பூவரச மரத்தை உரித்ததும் காணப்படுகின்றது. எனவே இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**(ஈ) திருக்கல்யாணச் சடங்கு**

திருக்கல்யாணத்திற்கு கண்ணகியும் தோழிகளும் அலங்கரிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது போல் கட்டாடியாரும் சேலை உடுத்தி தன்னை அழகாக அழகுபடுத்துவார். கோவலனாக தன்னை கருதுவார். அதேபோல் கோயிலுக்கு வரும் அடியவர்களும் திருமண வீட்டிற்கு செல்லும் உணர்வோடு பட்டுச்சேலைகள் உடுத்தும் ஆபரணங்கள் அணிந்தும் செல்வர். ஆண்கள் அழகிய பட்டு வேட்டிகள் அணிவர். சிறுவர்களும் தங்களை அழகுபடுத்திக் கொள்வர்.

வழமையான பூசையுடன் திருக்கல்யாண பூசையும் இடம்பெறும். ஓமம் வளர்க்கப்பட்டு கண்ணகித்தாய்க்கு கோவலனால் (கட்டாடியாரால்) தாலி எடுத்துக் கொடுக்க வண்ணக்கரினால் மூன்று முடிச்சு போடப்படும். இச்சந்தர்ப்பத்தில் நிருவாக சபையினர் புடைசூழ்ந்து காணப்படுவர். குரவை, அரோகரா ஓசையுடனும் மேளதாள வாத்தியங்களுடனும் இந்நிகழ்வு இடம்பெறும். பின்னர் கல்யாணப்படிப்பு பாடப்படும். கோப்பிக்குடித் தலைவரால் பன்னீர் தெளிக்கப்படும். சிறுமிகளால் சிலம்பு, அம்மனக்காய் குலுக்குதல் பிள்ளை விற்று வாங்குதல் நிகழ்வும் இடம்பெறும். பின்னர் பிரசாதமாக பஞ்சாமிர்தம், பலகாரங்கள், வாழைப்பழம், தாம்பூலம் என்பன வழங்கப்படும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். இறுதியாக கோப்பிகுடி மக்களால் தங்களுக்கு மச்சான், மச்சாள் முறையுள்ளவர்களுடன் மஞ்சள் குளிப்பு நடைபெறும்.

இல்லறம் என்பது திருமணத்திலே ஆரம்பிக்கின்றது. கண்ணகிக்கு பன்னிரண்டு வயதிலும் கோவலனுக்கு பதினாறு வயதிலும் திருமணம் நடக்கின்றது. கடல் வாணிபத்தில் ஈடுபடுகின்ற பெருஞ்செல்வந்தர்களின் திருமணம், முதிய அந்தணர் ஒருவரால் ஓமம் வளர்க்கப்பட்டு வைதீக முறைப்படி நடந்தது. அதேபோல் சிறப்பாக திருமணமொன்றை நடத்துவதாக பாவனை பண்ணுவதே திருக்கல்யாணச் சடங்காகும். இதனால் அம்மனின் மனதைக் குளிரச் செய்து இறையருள் பெறுவதே நோக்கமாகும்.

“உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏதுவர்” என சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது. அதாவது பொது மக்கள் மத்தியில் கண்ணகி பத்தினித் (கற்புடைய) தெய்வம் என போற்றப்படுகின்றாள். இல்லறத்துக்குரிய கொள்கைகளிலிருந்து வழுவாது நடப்பவள் பத்தினி, கண்ணகி அப்படியே நடந்தவள். உதாரணமாக, கோவலன் மாதவியுடன் குடும்பம் நடத்திய போது அவளுக்குரிய பொருட்களை அனுப்பியவள், கோவலனைத் தேடிச் செல்லாதவள். மீண்டும் கோவலன் வந்த

போது மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே, நாமும் இல்லறத்தை நல்லறமாக நடாத்த வேண்டும் எனும் உணர்வை போதிப்பதே இந்நிகழ்வாகும்.

**(உ) வட்டுக்குத்துச் சடங்கு :**

வட்டுக்குத்துச் சடங்கு திங்கட்கிழமை மாலை வேளையில் இடம்பெறும். இச்சடங்கினை காலிங்காகுடிமக்களும், மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சி அடிப்படையில் வருடாவருடம் மாறிமாறிச் செய்வர். வட்டுக்குத்து இடம்பெறும் இடம் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மடிப்பிச்சை மூலம் பெறப்படும் நெல் மணிகள் காய வைக்கப்படும்.

அந்த நெல் பெட்டியிலிடப்பட்டு ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் அம்மனுக்கு பூசை முடிந்ததும் அப்பெட்டிகளை வட்டுக்குத்து இடம்பெறும் இடத்திற்கு கொண்டு வருவர். கட்டாடியார் அம்மனைப் போல் பெண் வேடம் பூண்டிருப்பார். நெல் குற்றும் இடத்தில் மடை வைக்கப்பட்டு பூசை இடம்பெறும். பின்னர் உரல், உலக்கைக்குப் பூசை செய்வார். இதன்போது வழக்குரைக் காவியம் பாடப்படும். நெல் உரலில் இடப்பட்டு உலக்கையால் கட்டாடியார் மூன்று தடவை குத்துவார் பின்னர் பூசை உபயகாரர்கள் குத்துவார்கள். அதைத் தொடர்ந்து அடியவர்களால் குத்தப்பட்டு விநாயகர் பானைக்கு இடக்கூடிய அரிசியாக மாற்றப்படும்.

**(ஊ) திருக்குளிர்த்தி சடங்கு**

திருக்குளிர்த்திச் சடங்கு திங்கட்கிழமை அதிகாலை (செவ்வாய்க்கிழமை) இடம்பெறும். இச்சடங்கினை கலிங்ககுல மக்களும், மண்முனை பெத்தான்குடி மக்களும் சுழற்சி முறையில் செய்வார்கள்.

**(எ) விநாயகர் பானை எழுந்தருளல்**

கோயில் மண்டபத்தில் விநாயகர் பானை பொங்கலுக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறும். புதிய மண்பானைகள் மூன்று வாங்கப்படும் அதில் ஒரு பானை அம்மனுக்குரியது. மற்றைய இரு பானைகளும் சிறியதாக காணப்படும். அவை மழுவரசனுக்கும் பிள்ளையாருக்கும் உரியதாகும். மூன்று பானைகளும் மூலஸ்தானத்திலிருந்து அதிகாலை இரண்டு மணிக்கு முன் மண்டபத்திற்கு கொண்டு வரப்படும் இளநீரால் மூட்டப்பட்ட அடுப்பில் வைக்கப்படும் அம்மனுக்குரிய பானை

நடுவிலும் பிள்ளையாருக்குரிய பானை கிழக்கு திசையிலும் மழுவரசனுக்குரிய பானை மேற்குப் பக்கமும் வைக்கப்பட்டு தீ மூட்டப்படும். பூசகரால் பால் ஊற்றப்படும் பொங்கிவரும் வேளையில் பச்சையரிசி இடப்படும். அம்மனுக்குரிய பானை பூசகராலும், ஏனைய இரு பானைகளும் பூசை உபயகாரர்களால் பொங்கப்படும். பொங்கல் முடியும் வரை வழக்குரைக்காவியம் பாடப்படும்.

**(ஏ) திருக்குளிர்த்திப் பாடுதல்**

(சூரிய உதயத்திற்கு முன்) பின்னிரவு பட்ஷிகள் பூமியில் விழுவதற்கு முன் குளிர்த்தி பாடுவதற்குரிய வேலைகள் இடம்பெறும் திருக்குளிர்த்தி பாடுதல் நிகழ்வு வெளிமண்டபத்தில் இடம்பெறும் உரல் வைக்கப்படும். அதற்குள் நெல் இடப்படும் மூலஸ்தானத்திலிருந்து தீர்த்தசட்டி கொண்டுவரப்பட்டு உரல் மேல் வைப்பர் வெள்ளைத் துணியினால் மூடிவிடுவர் அதன்மேல் ஏடு வைக்கப்படும் பின் ஏட்டினை கட்டாடியார் தலைவரிடம் கொடுப்பார். தலைவர் குளிர்த்திப்பாடல் பாடுபவர்களிடம் கொடுப்பார். பூசகர் குறிப்பால் கூறியதும் இருவர் மாறி மாறிப் பாடுவார்கள்.

பூசகர் ஊர்காவல் அம்மன் சிலையை பாளை வேப்பிலையுடன் மார்பில் அணைத்தவாறு தீர்த்தத்தை வேப்பிலையால் அம்மனுக்கும் பக்தர்களுக்கும் தெளிப்பார். இவ்வேளையில் பெண்கள் கற்பூரச்சட்டி எடுப்பார்கள். குரவை போடுவார்கள் குளித்திப் பாடல்கள் விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பமாகிக் கோவலன் கொலையுண்ட நிகழ்வு அம்மனின் பெருமை என்பவற்றைக் குறிப்பதாகவும் மதுரையை எரித்த கண்ணகியைக் குளிரச் செய்வதாகவும் அமைந்து இறுதியில் வாழிபாடுவதாக அமைந்துள்ளது. குளித்திப் பாடும்போது ஆலயத்தை மூன்று தடவை வலம் வருவர் இறுதியாக பூசகரால் வண்ணக்கர், தலைவர், மணியகாரர், செயலாளர் பின்பு ஆலய நிருவாகிகளுக்கு வெற்றிலை மூலம் தீர்த்தம் கொடுக்கப்படும் பின்னர் பூசை உபயகாரர்களால் அடியவர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

பின்னர் வேண்டுதல் இடம்பெறும் அதாவது இவ்வருட பூசையினை தங்களின் கருணையினால் தடையின்றி முடித்துவிட்டோம் எம்மக்களையும் கிராமத்தையும் எந்தவித கஸ்டமுமில்லாமல் காப்பாற்றிக்கொள்ளம்மா என பூசகர் வேண்டிக் கொள்வார். அத்தோடு நிருவாக சபையினரும் அடியவர்களும் மண்டியிட்டு வணங்குவர். பின் கருவறையிலுள்ள மடை பிரிக்கப்பட்டு பறைமேளம் அடிக்கப்பட்டு கதவு அடைக்கப்படும்.

பாண்டிய மன்னனையும், மதுரையையும் அழித்த கண்ணகி கோபக்கனலுடன் இடைச்சேரி செல்கின்றாள். இடையர்கள் வெப்பம் போக்க குடை பிடிக்கின்றனர். சாமரம் வீசுகின்றனர். குளிர்ச்சி பொருந்திய வாசனைத் திரவியங்களை பூசுகின்றனர். பந்தலிட்டு முக்கனிவர்க்கம், வெற்றிலை பாக்கு, பூ கொண்டு வந்து பரப்பி கும்பம் வைத்து வழிபடுகின்றனர். கொம்புமுறி நடனம் புரிகின்றனர். தாயே குளிர்ந்தருள்வாய் என வேண்டினர். கண்ணகித்தாய் குளிர்ச்சியடைந்தாள். என்ன வரம் வேண்டும் என கேட்டாள். மதுரை நகர் எரிந்து கொண்டிருக்கின்றது. அக்கினியை தணிக்க அருள்மழை பொழிக என வேண்டினர். கண்ணகித்தாய் சப்தமேகங்களை நினைத்ததும் மழை பொழிந்தது அக்கினி தணிந்தது. எல்லோலும் மகிழ்ந்தனர். நான் வைகாசித் திங்கள் வருவேன் எனக்கூறி வானுலகம் செல்கின்றாள். வைகாசித் திங்கள் வருவேனென்று வரிசைக்கியைந்து விடைகொடுத்தாரே என குளிர்த்திப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

வைகாசித் திங்கள் என்பதில் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று வைகாசிப் பூரணையைக் குறிக்கும். மற்றையது வைகாசிப் பூரணையை சார்ந்து வருகின்ற திங்களைக் குறிக்கின்றது. இவை திருக்குளிர்த்திச் சடங்கை குறிக்கின்றது.

எனவே நாம் தெரிந்தும், தெரியாமலும் செய்த குற்றங்களையும், குறைகளையும் பொறுத்தருள்வாய் தாயே குளிர்ந்தருள்வாய் என பிரார்த்திக்கும்போது எம்மீது இரக்கப்பட்டு அருள்மழை பொழிவாள் என்ற நம்பிக்கையில் திருக்குளிர்த்திச் சடங்கினை நடத்துகின்றோம்.

**தெளி சடங்கு**

திருக்கதவு அடைக்கப்பட்டு எட்டாம் நாள் இடம்பெறும் சடங்கை தெளி சடங்கு என அழைப்பர். தெளிசடங்கினை ஆலய நிருவாக சபையினரால் வழங்கப்படும் பொருட்களின் உதவியுடன் பூசகரின் செலவில் இடம்பெறுவது சிறப்பம்சமாகும். திருச்சடங்கு காலத்தில் வழிபட முடியாதவர்களும், பொங்கல் பொங்குவதற்கு வாய்ப்பு கிடையாதவர்களும் தெளிசடங்கை பயன்படுத்துவர். அன்று பொங்கல், ரொட்டி நைவேத்தியமாக்கப்படும். மீண்டும் திருக்கதவு திறக்கப்படும். பேழையிலுள்ள அம்மன் சிலை பீடத்தில் வைக்கப்படும். அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும். நைவேத்தியம் படைக்கப்படும். அத்தோடு பரிவாரத் தெய்வங்களுக்கும் நைவேத்தியம் படைக்கப்படும். திருச்சடங்கு இடம்பெறும் பின்னர் அம்மனை வேண்டுதல் நிகழ்வு இடம்பெறும். பூசகர் "உமது விருப்பப்படி இவ்வாண்டுச் சடங்கை நாங்கள் சந்தோஷமாக நடத்தி முடித்து

விட்டோம். எதிர்வரும் காலங்களில் இவ்வூருக்கும், இவ்வூர் மக்களுக்கும் எந்தவித தீங்கும் வராமல் காத்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டு பூப்போடுவார். அதைத் தொடர்ந்து எல்லோரும் பூப்போட்டு வணங்குவார்கள் பின் பீடத்திலுள்ள மடைகள் பிரிக்கப்படும். அம்மன் சிலையை பேழையில் வைத்து அடைக்கப்படும். கதவு மூடப்படும்.

தெளிசடங்கு வைரவர் பூசை என கொள்ளப்படுகின்றது. இதனால்தான் பொங்கல், ரொட்டி படைக்கப்படுகின்றது. திருச்சடங்கு முடிவுற்றதும் ஆலய எல்லையை காவல் செய்வதை வைரவரிடம் ஒப்படைக்கப்படும் நிகழ்வாகவே கருதப்படுகின்றது. அடுத்த வருட உற்சவம்வரை வைரவரே பாதுகாத்துக் கொள்வார்.

**(ஒ) சித்திரை வருடப்பிறப்பு பூசை**

சித்திரை வருடப்பிறப்பன்று கருவறை திறக்கப்படுகின்றது. பேழையிலுள்ள அம்மனை பீடத்தில் வைப்பர். அம்மனுக்கு மருத்துநீர் வைக்கப்படும். அபிஷேகம் செய்யப்படும். மடை வைக்கப்பட்டு பூசை இடம்பெறும் ஆலய மணியகாரரால் கட்டாடியார், தலைவர், வண்ணக்கர், செயலாளருக்கு கைவிசேடம் வழங்கப்படும். பின் அடியவர்களுக்கு கைவிசேடம் கொடுக்கப்படும். மீண்டும் அம்மனை பேழையில் வைத்து கதவு சாத்தப்படும்.

நாம் சித்திரைப் பிறப்பன்று மருத்துநீர் வைத்து நீராடி, புதிய ஆடையணிந்து கைவிசேடம் பெற்று விருந்து உண்கின்றோம். அதுபோல மானிடப் பெண்ணாக பிறந்த காவிய நாயகிக்கும் மருத்துநீர் வைத்து அபிஷேகம் செய்து விரும்பிய பொருட்கள் படைத்து பூசைசெய்து கற்புடையாளை மகிழ்விக்கின்றோம். பத்தினித் தெய்வத்தின் கருணை மழை கிடைக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

**(ஓ) சித்திராப் பௌர்ணமி விரதம்**

ஆலயத்தின் வெளி மண்டபத்தில் கோப்பிகுடி மக்களின் சின்னவப்போடி உடையாரின் வம்சத்தினரால் சித்திரா பௌர்ணமியன்று சித்திர புத்திரநாயனார் விரதப் பூசை இடம்பெறுகின்றது. பூசைக்குரிய பொருட்களாக பூசை உபயகாரர்களின் வீட்டிலிருந்து நெல் அளக்கும் மரைக்காலில் நெல்லுடன் பாக்கு, வெற்றிலை, எழுத்தாணி கொண்டுவரப்படும் இதை நிறைதாளி எனவும், நிறை மரைக்கால் எனவும் கூறுவர். அரிசி புடைக்கின்ற சுளகில் கொத்தோடு மாங்காய், குலையோடு தேங்காய், இலையோடு

பலாக்காய் மற்றும் ஏழு மரக்கறியும் கொண்டு வரப்படும்

நைவேத்தியமாக சித்திரக்கஞ்சி, பொங்கல், உப்பில்லாத ஏழு மரக்கறி என்பன படைக்கப்படும் சித்திரபுத்திரநாயனார் கதை படிக்கப்படும் அடியவர்கள் அமைதியாக இருந்து கதை கேட்பார்கள். அக்கதையில் நாம் செய்கின்ற வினைக்கேற்ப பிறப்பெடுக்கின்றோம் என்கின்ற வாழ்க்கை தத்துவத்தை எடுத்துக் கூறுகிறது. அடியவர்கள் இறந்த தாயின் ஆத்மசாந்திக்காக விரதம் அனுட்டிப்பர்.

சித்திரை மாதமும் சித்திரை நட்சத்திரமும், பௌர்ணமி திதியும் கூடும் இவ்விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் 365 நாட்களும் பூசை செய்த பலன் கிட்டும் எனக் கூறப்படுகின்றது இந்திரன் சிவனை நோக்கி விரதமிருந்து தீவினை நீங்கப் பெற்றான் என திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. நாம் விரதமிருந்தால் பாவ காரியங்கள் நீங்கி புண்ணிய சீலர்களாக வாழ்வோம் எனக் கூறப்படுகின்றது.

# எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்களில்...

01. எமது ஆலயத்தில் பல வருடங்களாக கட்டாடியராக (பூசகராக) பணிபுரிந்தவர் அமரர் கறுவல்தம்பி அவர்கள் பத்தினி தெய்வத்தின் மீது அதிக நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவர். அவர் எருவில் ஈஸ்ரன் சிஸ்டம் குறுப் தோட்டத்தில் தேங்காய்களை எண்ணைக்காக நெருப்பிலே வாட்டியெடுக்கும் பகுதியில் வேலை செய்தார். அப்போது ஒரு நாள் கொப்பறாத் தேங்காய்களை வாட்டுகின்ற நெருப்பினிலே கால் இடறி விழுந்துவிட்டார். கொழுந்து விட்டெறியும் கொப்பறாதீயின் மத்தியிலே மஞ்சள் நிறத்துணியணிந்த பெண்ணொருத்தி ஓடிவந்து அவரைத் தூக்கி தீயிலிருந்து காப்பாற்றினார். உடனே அப்பெண் மாயமாக மறைந்துவிட்டார். தன்னைக் காப்பாற்றியது கண்ணகித்தாய் என்பதை உணர்ந்து கொண்டார். கண்ணகித் தாயை உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு அருள் வழங்குபவள் என்பது புலனாகின்றது. இச் சம்பவம் 1965ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றது.

# கண்ணகியம்மன் உற்சவ காலத்தின்போது பின்பற்றப்படும் மரபுகள்

செல்வி. தே. தக்ஷனா
தரம் – 2E
மட்/ பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்

கண்ணகியம்மன் ஆலய திருச்சடங்கு முறையானது மரபு ரீதியாக பின்பற்றப்படுகின்ற பூசை முறையாகும். அக்காலத்தில் பண்டு தொடக்கம் இற்றை வரை பல மரபினைப் பின்பற்றி வருகின்றது.

வைகாசி மாத திங்கட்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி வைகாசிப் பௌர்ணமியை அண்மித்த திங்கட்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தியுடன் நிறைவு பெறும்.

திருச்சடங்கிற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஊர் மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் பொதுக்கூட்ட அழைப்பு விடுவிக்கப்படும். பொதுக் கூட்டத்தில் திருச்சடங்கிற்கான திகதி குறிக்கப்படும்.

திருச்சடங்குக் காலத்திற்கு முன்னர் வீதிகளும், வீடுகளும் சுத்தம் செய்யப்படும். வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் வீடுகளுக்கு வருவார்கள். வெளி இடங்களில் வசிப்பவர்கள் உறவினர்கள் வீடுகளுக்கு வந்துவிடுவார்கள்.

உற்சவ காலத்தின் போது மா, மஞ்சள், மிளகாய் இடித்தல் உணவு பதார்த்தங்கள் பொரித்தல், துவைத்தல், வறுத்தல், ஊசி நூல் கொண்டு தைத்தல், தூர பயணம் செல்லல் தவிர்க்கப்படும். கோயிலுக்கு அண்மையில் துடக்கானவர்கள் இருப்பதை தவிப்பர். தூர இடத்திலுள்ள உறவினர்களின் வீடுகளில் தங்குவர்.

திடீர் மரணச் சம்பவங்கள் இடம்பெறும் போது திருச்சடங்கிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எளிமையான முறையில் மரணச் சடங்கு இடம்பெறும். வீடுகளில் மங்களகரமான நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தவிர்த்துக்கொள்வர்.

மக்கள் தனது பகைகளை மறந்து குடி ரீதியாக ஒன்றுபடுவர்.

**குறிப்பு : கட்டுரைப் போட்டியில் 1ம் பிரிவில் முதலிடம் பிடித்தது.**

# இலங்கைப் பதியில் பத்தினித் தெய்வ வழிபாடு

மாணவி **பு. விதுஸ்க்கா** 10K

சேரன் செங்குட்டுவனின் அழைப்பை ஏற்று அனுராதபுரத்தை ஆட்சி செய்த கஜபாகு மன்னன் கண்ணகிக்கு எடுத்த விழாவிற்கு செல்கின்றான். அங்கு பத்தினி தெய்வம் செய்த அற்புதங்களைக் கேள்வியுறுகிறான். தானும் வழிபட விரும்புகின்றான். சேரன் செங்குட்டுவனிடம் கூறுகின்றான். செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும், ஒரு காற்சிலம்பையும் சந்தன மரப் பேழையில் வைத்து கஜபாகுவிடம் பரிசாக கையளிக்கின்றான். கஜபாகு மன்னன் கண்ணகி விக்கிரகத்துடன் இலங்கைக்குத் திரும்பும் போது தன்னுடன் பன்னிரெண்டாயிரத்துக்கு மேற்பட்ட பல்குடி மக்களையும் அழைத்து "சம்புகோளா" எனப்படும் சம்புத்துறைமுகம் வழியாக வந்தான். இத்துறைமுகம் யாழ்ப்பாணத்திலுள்ளது. அதற்கருகிலுள்ள "அங்கணாமைக்கடவை" எனும் இடத்தில் முதலாவது கண்ணகி கோயிலைக் கட்டினான் எனக் கூறப்படுகின்றது.

அங்கணாமைக்கடவையிலிருந்து அநுராதபுரத்திற்கு பூநகரி வழியாக செல்லும் பாதைகளில் உள்ள ஊர்களில் எல்லாம் கஜபாகு மன்னன் கண்ணகிக்கு ஆலயம் அமைத்தான் என முதலியார் செ. இராசநாயகம் குறிப்பிடுகின்றார். நாடெங்கும் கண்ணகிக்கு கோயிலமைத்து வழிபட வேண்டுமென கஜபாகு மன்னன் கட்டளையைத் தொடர்ந்து வரோதைய சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாண பகுதியில் கண்ணகியம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.

வட இலங்கையில் தோற்றம்பெற்ற முக்கிய கண்ணகியம்மன் ஆலயங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அங்கணாக்கடவை கண்ணகியம்மன் ஆலயம்
2. வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம்
3. காரைநகர் கண்ணகியம்மன் ஆலயம்
4. மண்டைத்தீவு கண்ணகியம்மன் ஆலயம்
5. ஏழாலை கண்ணகியம்மன் ஆலயம்
6. பருத்தித்துறை கண்ணகியம்மன் ஆலயம்
7. கைதடி கண்ணகியம்மன் ஆலயம்
8. கோயில்குளம் கண்ணகியம்மன் ஆலயம்
9. பூநகரி கண்ணகியம்மன் ஆலயம்
10. நாகர்கோயில் கண்ணகியம்மன் ஆலயம்

வட இலங்கையிலுள்ள முக்கிய ஆலயங்களை நோக்கும் போது காரைநகர் கண்ணகியம்மன் கோயில் 1925 இல் ஸ்தாபிக்கப்பட்ட கோயிலாகும். இங்கு சந்தன மரத்திலான கண்ணகியம்மனும் வைரவரும் உண்டு. வருடாவருடம் சித்திரை வருடப் பிறப்பை அடுத்து வரும் முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்து ஒன்பது நாட்களுக்குத்திருவிழா நடைபெறுகின்றது. இதேபோல் அங்கணாமைக்கடவை கோயிலை எடுத்துக்கொண்டால் இங்கு கண்ணகியம்மன் சிலம்போடு இணைந்தவாறு அமைக்கப்பட்டுள்ளன. இங்கு கஜபாகு கொண்டுவந்த பாதச் சிலம்புகளும், கண்ணகியம்மனின் மிதிவடிக்கட்டையும் இருந்தன. தற்போது அவற்றில் ஒரு சோடிச் சிலம்பு மட்டுமே காணப்படுகின்றது. இங்கு பூசாரிகளே பூசைகளை மேற்கொண்டனர். ஆனால் இப்பொழுது பிராமணார்களால் பூசை நிகழ்த்தப்படுகின்றது.

வட இலங்கையில் கண்ணகி வழிபாடு தொடர்பாக தோற்றம்பெற்ற இலக்கியங்களை நோக்கும் போது கோவலனார் கதை, மந்திகைக் கண்ணகியம்மன் அந்தாதி, மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் ஊஞ்சல், வற்றாப்பளையில் சிலம்பு கூறல், வற்றாப்பளை கண்ணகியம்மன் வசந்தன் பாடல், மழைக்காவியம், பனிச்சை பாடிய பாடற்சிந்து மற்றும் அம்மானைப் பாடல்களும் முக்கியம் வாய்ந்தவையாகும்.

யாழ்குடா நாட்டிலுள்ள ஆலயங்களில் கோவலன் கதை படிக்கப்படும். வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் சிலம்பு கூறல் கதை படிக்கப்படும். கிழக்கிலங்கையிலுள்ள ஆலயங்களில் கண்ணகி வழக்குரை படிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகியம்மன் ஆலயங்கள் ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயங்களாகவும், மாரியம்மன் கோயில்களாகவும் மாற்றமடைந்தன. கண்ணகியம்மன் தொடர்பான நாவலரின் கண்டனங்களும், கந்தபுராணத்தின் செல்வாக்கும், பிராமணர்களின் பிரச்சாரங்களுமே இதற்குக் காரணம்.

ஆனால் வன்னியிலுள்ள வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலும் அப்பகுதியிலுள்ள ஏனைய கண்ணகியம்மன் கோயில்களும் சிறப்புற்றுச் செல்வதைக் காண்கின்றோம்.

முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து 3Km தூரத்திலுள்ள நந்திக்கடல் அருகே அமைந்துள்ள ஆலயம் வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயமாகும். இவ்வாலயம் பிரசித்திபெற்ற கண்ணகியம்மன் ஆலயமாகும். கஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட

பத்தாவது ஆலயம் என ஒரு சாரார் கருதுகின்றனர். கண்ணகி மதுரையை எரித்த பின்னர் ஈழத்தின் பல இடங்களுக்கும் சென்று பத்தாவது தலமாக வற்றாப்பளையை அடைந்தாள் என இன்னுமொரு சாரார் கருதுகின்றனர். பத்தாம்பளை (பளை - தங்குமிடம்) என்பது மருவி பேச்சுவழக்கில் வற்றாப்பளை என பெயர் பெற்றது எனக் கூறப்படுகின்றது. இவ்வாலயம் அற்புதம் நிறைந்திருந்ததாகும். வைகாசிப் பொங்கல் அன்று கடல் நீரில் அம்மனுக்கு பயபக்தியோடு விளக்கேற்றி வழிபடும் மரபு இன்றும் காணப்படுகின்றது. மேலும் போர்த்துக்கேய அதிகாரி இவ்வாலயத்தை பரிகாசம் செய்ய குதிரையில் இவ்வாலயத்தைத் தாண்டிச் செல்லும் போது தலவிருட்சமான அனிச்சமரம் பயங்கரமாகக் குரைத்ததுடன் அனிச்சம் காய்கள் பயங்கர காற்றுடன் அந்த அதிகாரி மேலே வீசி எறியப்பட்டனவாம். இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தரையில் விழுந்தாராம். இதற்குப் பிறகு அந்த அனிச்சமரம் இன்றுவரையும் பூப்பதில்லை, காய்ப்பதில்லை. இதுவும் அம்மனின் அற்புதமாகும்.

### பௌத்த மதத்துடனான தொடர்பு

கஜபாகு மன்னன் அனுராதபுரத்தில் (கி.பி 171 - 186) பத்தினி தெய்வத்திற்கு கோயில் அமைத்தான். அத்தெய்வத்திற்கு ஆடி மாதம் தோறும் விழா எடுத்தான். அக்காலப்பகுதியில் ஆடிமாதப்பூரணை தோறும் "பெரஹரா" என ஊர்வலமாக பத்தினி தெய்வம் "நாத தெய்யோ" (சிவன்), "விட்டுணு தெய்யோ" (விஷ்ணு), "கதிர்காமத் தெய்யோ" (முருகன்) ஆகிய தெய்வங்களின் சிலைகளை வைத்து ஊர்வலம் நடத்தினான். இப் பெரஹரா நிகழ்வு பல தலைநகரங்களிலும் இடம்பெற்றன. இவ்வாறே கண்டியில் "எசல பெரஹரா" வில் இத்தெய்வங்களின் சிலைகள் இடம்பெற்றன. காலப்போக்கில் புத்தரின் புனித தந்த பேழைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்றும் கண்டி தலதாமாளிகைக்கு அருகில் பத்தினிக் கோயில் காணப்படுகின்றது. அனுராதபுரத்திலே பத்தினித் தெய்வ வழிபாடு இடம்பெற்றது என்பதை 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "ராஜவலிய" என்ற சிங்கள இலக்கியம் குறிப்பிடுகின்றது. சிங்களப் பகுதியை ஆட்சிசெய்த குறுநில மன்னர்களும் தத்தம் இடங்களில் பத்தினி வழிபாட்டை பின்பற்றியதாகக் கூறப்படுகின்றது. தென்னிந்திய பத்தினி தெய்வ வழிபாடு பௌத்த சமயத்தோடு தொடர்புபட்டிருந்தது. தென்னிந்திய பௌத்த சமயத் தொடர்பின் விளைவாக இலங்கையிலும் அவ்வழிபாடு பரவியது.

இலங்கையின் சிங்களப் பிரதேசங்களில் பௌத்த சமய மரபிலும் தமிழர் வாழும் பிரதேசங்களில் இந்து மரபிலும் கண்ணகி வழிபாடு சங்கமமாகிவிட்டது.

அனுராதபுரத்தில் பத்தினி வழிபாடு ஆரம்பித்த பின்னர் சிங்கள குறுநில மன்னர்களும் தத்தம் இடங்களில் அவ்வழிபாட்டை மேற்கொண்டனர். ஆடி (எசலா) மாதப் பூரணை நாளில் சிங்கள மக்கள் பத்தினி தெய்வத்திற்கு விழா எடுத்தனர். அத்தோடு அங்கெலிய என்ற கொம்பு முறித்தலும் போர்த் தேங்காய் அடிக்கின்ற பழக்கமும் பத்தினி வழிபாட்டில் இடம்பெற்றன. இதனை ராஜவலிய, கஜபாகுகதா, இராஜரத்தினாகர் போன்ற சிங்கள இலக்கியங்கள் பத்தினி பற்றிய பல வர்ணனைகளை கூறுகின்றன.

மேலும் பௌத்த மக்கள் நாற்றிசை காவல் தெய்வங்களாக இந்துக்களின் தெய்வங்களாகிய விஷ்னு, பத்தினி, இந்திரன், கதிர்காம கந்தன் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். குருநாகல் பிரதேசத்தில் வில்வாவ கிராமத்தில் ஒரு குன்றின் மேல் பத்தினிக் கோயில் கஜபாகு மன்னனால் கட்டப்பட்டதும் மேலும் இரத்தினபுரியில் அம்மடுவ பத்தினி தேவாலயம், நுவரெலியாவிலுள்ள ஹங்குறான்கெட்ட பத்தினி தேவாலயம், தெவிநுவர கொடகெதற பத்தினி தேவாலயம், நறுகல பத்தினி தேவாலயம், கல்மடுவ பத்தினி கோவில், கல்மங்கொட பத்தினி கோவில், இரத்தினபுரி சமன் தேவாலயம், கடுவல புராண ரண்கடு பத்தினி மகாதேவாலயம், மடுவ பத்தினி தேவாலயம் மற்றும் கொழும்பு அவிசாவளையில் களனி கங்கைக்கு அண்மையில் அமைந்த நவகமுவ பத்தினி தெய்வம் புகழ்பெற்றதாகும். போர்த்துக்கேய தளபதி இவ்வாலயத்தையும் இடிக்குமாறு கட்டளை பிறப்பித்ததாகவும், மக்கள் பத்தினி தெய்வத்திடம் இரந்து வழிபட்டதாகவும், கோட்டை மன்னனின் கனவில் அம்மாள் தோன்றி கோயிலை இடிக்காமல் காப்பாற்றுமாறு கூறியதாகவும், அதன்பிரகாரம் கோட்டை மன்னனின் வேண்டுகோளை ஏற்று இவ்வாலயம் இடிக்கப்படாது இன்றும் காணப்படுகின்றது. பத்தினி வழிபாடு சிங்கள மக்களுக்கே அதிகம் உரியது என பேராசிரியர் கணநாதர் ஒபயசேர மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு பத்தினி ஒரு சிங்கள பௌத்த தெய்வம், சடங்கு இங்குதான் நடக்க வேண்டும் ஏனெனில் பௌத்தம் இந்தியாவில் செத்துவிட்டது என சிங்கள கப்புறாளை பேட்டியில் குறிப்பிட்டதாக பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேலும் சிங்கள, பௌத்த மக்கள் பத்தினித் தெய்வத்தை சிறப்பாக வழிபட்டனர். கண்ணகி வழிபாடு தொடர்பாக பல சிங்கள இலக்கியங்கள் தோற்றம்பெற்றன. அவற்றுள் தபஸ்கமன, குயில்விடு தூது, பத்தினி கோல்முரா, சிலம்புக்கதரி, பத்தினி படிமா, மந்தாரம்புவ புவக்த, பத்தினி அதகில்ல, ராஜாவலிய போன்ற சிங்கள இலக்கியங்கள் க்ண்ணகி தொடர்பான கதைகளைக் குறிப்பிடுகின்றன. இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலை

மாற்றங்களின் காரணமாக பௌத்த சமயம் தமிழரிடையே வழக்கொழிந்த காலத்திலே பத்தினி வழிபாடு தொடர்ந்து நிலைபெற்றதோடு காலப்போக்கில் சைவசமயத்தோடு சங்கமமாகிவிட்டது. தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வாறு பத்தினி வழிபாடு கண்ணகி வழிபாடாக மாறியது என்பதை நோக்கும்போது அனுராதபுரத்திலிருந்து முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளைக்கும் அங்கிருந்து கடல் வழியாக மட்டக்களப்புப் பகுதிக்கும் கொண்டு சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

### கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு

கண்டியில் பத்தினி வழிபாடு இடம்பெற்றபோது அவ்வழிபாடே மட்டக்களப்பிற்கு கண்ணகி வழிபாடாக வந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. கண்டி நாட்டாரும் மட்டக்களப்பாரும் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். மட்டக்களப்பிலிருந்து கண்டிக்குச் செல்வதற்கு காட்டு வழிப்பாதை இருந்ததாகவும் அது காரைதீவிலிருந்தும் சம்மாந்துறையிலிருந்தும் வீரமுனையூடாகச் சென்றது. மண்டூரிலிருந்தும் பழுகாமத்திலிருந்தும் வந்த கண்டிக்குச் செல்லும் காட்டுவழி இரண்டம் ஊவா மாகாண எல்லையைச் சார்ந்துள்ள "கண்டியக்கட்டு" எனும் இடத்தில் வீரமுனை வழியோடு ஒன்றுபடுகின்றன. எனவே, கண்டியிலிருந்து வீரமுனை வழியாக காரைதீவு, தம்பிலுவில் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்கு வழிபாடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் 50 இற்கு மேற்பட்ட கண்ணகியம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. ஆனால் சுற்றுக்காவியத்தில் பட்டிநகர், தம்பிலுவில், காரைநகர், வீரமுனை, கல்முனை, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, சித்தாண்டி, மண்முனை போன்ற இடங்களில் ஆலயம் உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

"பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவிசு பெறு கல்முனை கல்லாறு மகிழூர் எருவில்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு செல்வ
முதலைக்குடா கொக்கட்டிச்சோலை
அட்டதிக்கும் புகழ் வந்தாறுமூலை
அன்பான சித்தாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை

மனதினில் நினைக்க வினை மாறியோடிடுமே.”

(ஊர் சுற்றுக் காவியம் - 71 பாடல்)

இப்பாடலில் குறிப்பிடப்படாத மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான், தாண்டவன்வெளி, களுவாஞ்சிக்குடி, துறைநீலாவணை, அக்கரைப்பற்று, பொத்துவில், பாண்டிருப்பு, அமிர்தகழி, கோயில் போரைதீவு, கன்னங்குடா, மகிழடித்தீவு, ஈச்சந்தீவு, பழுகாமம், நாவற்கேணி, 13ம் கொலனி போன்ற இடங்களிலும் அம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

கண்ணகியம்மன் ஆலயங்களில் நடக்கும் பூசையினை “திருச்சடங்கு” என அழைப்பர். இச்சடங்கானது வருடந்தோறும் வைகாசிச் சடங்கு பௌர்ணமியை திருக்குளிர்த்திச் சடங்காகவும், அதன் முன்னுள்ள மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் திருச்சடங்கு இடம்பெறும். சில ஆலயங்களில் வைகாசி பௌர்ணமியை அண்மித்த திங்கட்கிழமை திருக்குளிர்த்தி நாளாகக் கொண்டு அதன் முன்னுள்ள 3 அல்லது 5 அல்லது 7 நாட்கள் திருச்சடங்கு இடம்பெறும்.

வைகாசித் திங்கட்கிழமையை திருக்குளிர்த்தியாகக் கொண்ட கோயில்களில் காரைதீவு, எருவில், கல்முனை, கல்முனை கடற்கரைக் கண்ணகை, துறைநீலாவணை, செட்டிபாளையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வைகாசி பௌர்ணமியில் திருக்குளிர்த்தி நடைபெறும் ஆலயங்களில் வீரமுனை, கோட்டைக்கல்லாறு, களுவாஞ்சிக்குடி மகிழூர், தம்பிலுவில், கோளாவில், திருக்கோயில், கோயில் போரதீவு போன்ற கோயில்களைக் குறிப்பிடலாம்.

வைகாசி மாதத்தில் கண்ணகியின் திருச்சடங்கு நடைபெறுவதற்கும் காரணமுண்டு. கோவலன் கொலையுண்ட 14ம் நாள் தேவர்களுடன் கோவலன் விண்ணகத்திலிருந்து வானவூர்தியில் வந்து தேவர்கள் பூச்சொரிய கண்ணகி புஸ்ப விமானத்தில் ஏறும்போது அன்னையே இப்பதியை விட்டு தாங்கள் சென்றால் நாங்களும் உங்களுடன் வருவோம் என சீத்தலைசாத்தனாரும், சில அடியவர்களும் கூற “வைகாசித் திங்கள் வருவேன்” என கூறினாள். ஆதனால் வைகாசித் திங்களில் திருச்சடங்கு செய்யுமாறு சாத்தனார் கூறியதற்கு இணங்க வைகாசித் திங்களில் திருச்சடங்கு இடம்பெறுகின்றது.

**குறிப்பு : கட்டுரைப் போட்டியில் பிரிவு 5ல் முதலாமிடம் கிடைத்த கட்டுரை.**

# வழிபாட்டு முறைகள்

மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள், நோய்கள் ஏற்படும்போது பொற்புடையாளிடம் வேண்டுதல் செய்வர். வேண்டுதல் பூர்த்தி செய்யப்பட்டதும் அல்லது வேண்டுதல் நிறைவேறாத வேளையிலும் வேண்டுதலை நிறைவேற்றித் தரும்படியும் வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். அவ்வழிபாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். மடைப்பெட்டி எடுத்தல், அடையாளப் பொருட்கள் கொடுத்தல், தீச்சட்டி ஏந்துதல், காவடி எடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், அங்கப்பிரதட்சனை செய்தல், அள்ளுகாணிக்கை வழங்குதல், வாயலகு எடுத்தல், பிள்ளைவிற்று வாங்கல், அம்மனக்காய், சிலம்பு, கிலுக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் முக்கியமானவற்றை பார்ப்போம்.

**(அ) மடைப்பெட்டி எடுத்தல் :**

சிலம்பின் செல்விக்கு பதினைந்து திருச்சடங்கினை நடாத்துகின்ற பதினைந்து குடியினரும் மடைப்பெட்டி எடுக்கும் நிகழ்வை சிறப்பாக நிகழ்த்துவதைக் காண்கின்றோம். அம்மன் பூசைக்குரிய மங்கலகரமான பொருட்களான பழவகைகள் அபிஷேகப் பொருட்கள் அடங்கிய பெட்டி மடைப்பெட்டி என அழைக்கப்படுகின்றன. தங்களின் சாகித்ய மக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வளமான வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக அம்மனை பிரார்த்திப்பதற்காக மடைப்பெட்டி கொண்டு செல்கின்றனர்.

அம்மனுக்கு பகல் பூசை செய்பவர்கள் அதன் முதல் நாள் இரவிலும், இரவுப் பூசை செய்பவர்கள் அன்றைய பகல் வேளையிலும் மடைப்பெட்டி எடுப்பார்கள். ஒவ்வொரு குடியினரும் ஒவ்வொரு ஒன்றியங்களை அமைத்துள்ளனர். அதற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் என நிருவாக சபையுண்டு. அவர்களே பூசைக்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பர்.

மக்கள் தங்களின் உட்பகைகளை மறந்து "குடி" என்ற ரீதியில் ஒன்றுபடுகின்றனர். சுழற்சிமுறையில் தங்கள் குடியின் வகுத்துவார் (குடும்பம்) என்ற ரீதியில் மடைப்பெட்டி எடுக்கும் முறையைப் பின்பற்றுவர். பூசைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும். குடிமக்கள் எல்லோரும் இணைந்து ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் சாப்பிடக் கூடியவாறு

அறுசுவை உணவு தயார்படுத்துவார்கள். குடிமக்களுக்கு உறவு ரீதியான ஏனைய குடியினரும், நிருவாக சபையினருக்கும் ஆலயத்தில் தொண்டூழியம் புரிபவர்களுக்கும் உணவு வழங்கப்படும். எல்லோரும் மகிழ்வுடன் உண்பார்கள்.

பூசைப்பொருட்கள் ஓலைப்பெட்டிகளில் வைக்கப்படும். அவை வெள்ளைச் சீலைகளால் கட்டப்படும். குடியிலுள்ள அனைவரையும் உள்ளடக்கியவாறு பெட்டிகள் பொறுப்பளிக்கப்படும். வெள்ளைச்சீலை மேல் தட்டியாக விரிக்கப்பட்டு அதற்குள் நிறைகுடம், குத்துவிளக்கு, மடைப்பெட்டிகள், வாழைக்குலைகள், காவு போன்றவை ஒழுங்குபடுத்தப்பட்டு ஆலயம் நோக்கிச் செல்வர். பெண்கள் குரவை, ஆரோஹரா ஓசை எழுப்புவார்கள். பட்டாசுகள் கொளுத்தப்படும், மேளதாளங்கள் பறை ஓசை இசைக்கப்படும். ஒலிபெருக்கியினால் அம்மன் பாடல்களை ஒலிபரப்புவார்கள். இளைஞர்கள், சிறுவர்கள் ஆடிப்பாடிச் செல்வார்கள். ஆலயத்தை சென்றடைந்ததும் ஆலயத்தை வலம் வருவர். ஆலய பரிபாலன சபையினரும் தொண்டூழியர்களும் ஆலய முகப்பில் வரவேற்பார்கள் அவர்களிடம் மடைப்பெட்டி ஒப்படைக்கப்படும். அடியவர்களுக்கு விபூதி, சந்தனம், தீர்த்தம், பிரசாதம் வழங்கப்படும்.

பின் பூசையில் பங்கேற்பவர்கள் தங்களின் குறைகளையும் மனச்சுமைகளையும் அம்மனிடம் வேண்டுவார்கள். அம்மன் அவர்களின் வாழ்வை மேம்படுத்துவார். மடைப்பெட்டி எடுக்கும் நிகழ்வு நாங்கள், எமது எனும் உணர்வை ஏற்படுத்துகின்றது. சமூக ஒற்றுமையையும் கூட்டுப் பொறுப்பினையும், சமூக ஒத்திசைவையும் ஏற்படுத்துகின்றது.

**(ஆ) அடையாளப் பொருட்கள் கொடுத்தல் :**

தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களிலிருந்தும் நோய்களிலிருந்தும் காப்பாற்றிய காவிய நாயகிக்குரிய பூசைப்பொருட்களும், ஏனைய பொருட்களும் அடையாளப் பொருட்களாகக் கொடுக்கப்படுகின்றது. உதாரணமாக, வெள்ளி, தங்கத்தினால் செய்யப்பட்ட கண், பாதம், சிலம்பு, அம்மனக்காய், மாலை போன்றவைகளும் சாறி, தென்னம்பிள்ளை, கோழி, ஆடு, மாடு போன்றவைகளையும் குறிப்பிடலாம். மக்கள் உரிமையோடு கொடுக்கல் வாங்கல் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். எங்களுக்கு சுகத்தையும்

இன்பத்தையும் தந்தால் நாம் உனக்குரியவற்றை தருகின்றோம் என வழிபடுவதைக் காண்கின்றோம்.

**(இ) காவடி எடுத்தல் :**

ஆண்கள் கண்ணகிக்காக திங்கட்கிழமை மாலைப்பொழுதில் காவடி எடுக்கின்றார்கள். சிறுவர்கள் பாற்காவடியும் பெரியவர்கள் முள்ளுக்காவடியும் பறவைக் காவடியும் எடுப்பார்கள். வாயலகு போடுவார்கள். எருவில் சிவனார்மடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலும், எருவில் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்தும்,அரசடி பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் கோடைமேடு உச்சிட்டப் பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் காவடி எடுப்பதற்கான உருவேற்றும் நிகழ்வும் இடம்பெறும். காவடி எடுப்பவர்களும் வாயலகு எடுப்பவர்களும் அதற்கு முதல் நள்ளிரவு, கோயிலுக்குச் சென்று உபவாசமிருப்பார்கள். உருவேற்றப்படும். மத்தள இசைக்கேற்ப ஆடிப்பாடுவார்கள். நூற்றுக்கு மேற்பட்ட காவடிகள் பவனிவரும்.

ஒவ்வொரு ஆலயங்களாகச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவார்கள். இறுதியாக கண்ணகியம்மன் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தை வலம் வந்து ஆலயத்தின் பின்புற வீதியில் உடம்பில் பாய்ச்சிய முட்கள் கழற்றப்படும். அம்மனின் விபூதியை முள் ஏற்றிய இடத்தில் பூசுவார்கள். காவடி எடுத்தல் நிகழ்வு மெய்சிலிக்க வைக்கும் நிகழ்வாகும்.

காவடி எடுத்தலின் ஆரம்பத்தை நோக்கும்போது, சூரனின் குருவான இடும்பன் அகத்தியரின் ஆணைப்படி திருக்கைலையிலிருந்து சிவமலை, சக்திமலை எனும் இரு மலைகளைத்தன் தோள்களில் சுமந்து இறைவனை வழிபட்டதிலிருந்து ஆரம்பமானது. இது பக்தியின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. எனது உடல், உயிர் அனைத்தையுமே உன்னிடம் ஒப்படைக்கின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றது.

**(ஈ) கற்பூரச்சட்டி எடுத்தல் :**

கற்பூரச்சட்டி எடுத்தல் அல்லது தீச்சட்டி ஏந்தல் வழிபாடு கண்ணகியம்மன்

வழிபாட்டோடு தொடர்பானது. பெண்கள் உபவாசமிருந்து இந்நிகழ்வில் பங்கேற்பர். திங்கட்கிழமை மாலை வட்டுக்குத்து பூசை இடம்பெறும் போதும் திருக்குளிர்த்தி பாடுதல் நிகழ்வு இடம்பெறும் போதும் தீச்சட்டி எடுப்பார்கள். தலையிலே வேப்பிலை வைத்து புதிய சட்டியினை அதன்மேல் வைத்து அவருக்கு உதவியாக வருபவர் சட்டியினுள் கற்பூரத்தையிட்டு தீயிடுவார்கள். ஆலய உள்வீதியை வலம் வருவார்கள்.

கண்ணகித்தாய் தீயினால் தீயவற்றையழித்து நல்லவற்றைக் காத்தவள். எனவே, எமது தீமைகளை இல்லாமல் செய்து நன்மைகளை தந்தருள்வாய் என தாயை வேண்டியே தீச்சட்டி எடுக்கின்றோம். அத்தோடு நாம் தீமைகளை செய்ய மாட்டோம் நன்மைகளைச் செய்வோம் என திடசங்கற்பம் எடுப்பதாகவும் தீச்சட்டி ஏந்தல் நிகழ்வு இடம்பெறும்.

**(உ) அங்கப்பிரதட்சணம் செய்தல் :**

ஆண்கள் உபவாசமிருந்து காவியுடைதரித்து நீராடி திருநீறு தரித்து உருத்திராக்க மாலை கழுத்தில் அணிந்து கொண்டு கைகளில் முடித்தேங்காய் பிடித்தவாறு உடலின் எல்லா அங்கங்களும் நிலத்தில் படுமாறு உள்வீதியில் உருண்டு செல்வதே அங்கப்பிரதட்சணம் என்கின்றோம். இந்நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையிலும் திங்கட்கிழமை அதிகாலைப் பொழுதிலும் இடம்பெறும்.

ஆலயங்கள் பெரிய மகான்கள், முனிவர்கள், தேவர்கள் வழிபட்ட தலமாகும். பல முனிவர்கள் வழிபட்டு அவர்களின் பாவ விமோசனம் பெற்ற இடமாகும். எனவே, அவர்களின் பாதம் பட்ட புனிதத் தன்மையாலும், இறைவனின் தெய்வீக அருள் நிறைந்த இடத்தில் எமது உடல்படுகின்றபோது எம்பாவங்கள் அகலும் நற்பயன் கிடைக்கும் என்பதற்காகவே அங்கப்பிரதட்சணை செய்கின்றோம்.

**(ஊ) மடிப்பிச்சை எடுத்தல் :**

திருமணமான, திருமணமாகாத பெண்கள் உபவாசமிருந்து திங்கட்கிழமை காலையில் தங்களால் விரும்பப்படுகின்ற ஏழு வீடுகளுக்குச் சென்று “கண்ணகியம்மன் பேரால் மடிப்பிச்சை தாருங்கள்” என கேட்பார்கள். வீட்டுக்காரர்கள் பாத்திரமொன்றில்

நெல் கொடுப்பார்கள்.- அதனை தங்களுடைய சேலைத் தலைப்பாகிய மடியில் இடுவார்கள். வீட்டுக்காரர்களுக்கு விபூதி, சந்தனம், வேப்பம்பத்திரம் என்பன கொடுப்பார்கள். இவ்வாறு ஏழு வீட்டுக்குச் சென்ற பின்னர் நெல்லை மடியில் ஏந்தியவாறு ஆலயத்தை வலம் வந்து நெல்லை காய வைக்கின்ற இடத்தில் இடுவார்கள்.

**(எ) பாளை விற்பனை செய்தல் :**

ஆலயத்தின் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, திருக்குளிர்த்தி பாடும் வரையுள்ள காலப்பகுதியில் பூசை ஆரம்பிப்பதற்கு முன்னரும், பூசை முடிந்த பின்னரும் பாளை விற்பனை நிகழ்ச்சி இடம்பெறும். பாளை விற்பனை நிலையத்தில் பதிவாளர்களும் அறிவிப்பாளர்களும் இருப்பார்கள். அங்கு ஆலய நிருவாகத்தால் ஒப்படைக்கப்பட்ட வட்டாமடை காணப்படும். இதில் கமுகம்பாளை, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, பூ என்பன பட்டுத்துணியினால் மூடிக்காணப்படும். அன்றைய பூசையினை நடாத்தும் குடியின் தலைவர் பாளை விற்பனையை ஆரம்பித்து வைப்பார். அதன்பின் அடியவர்கள் பணம் செலுத்துவார்கள். இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், தனது குடும்பத்தினருக்காகவும் உற்றார், உறவினர்களுக்காகவும் கண்ணகியின் அருள் வேண்டி பாளைக்கு மக்கள் போட்டி போட்டுக் கொண்டு பணம் செலுத்துவார்கள். இறுதியில் அம்மனுக்கு சாத்துகின்ற பாளைக்கு உரிமை கொண்டாடுவதில் கடும் போட்டி நிகழும் நிருவாகத்தினரால் இரகசியமாக நேரம் கணிப்பீடு செய்யப்பட்டு அலாரம் ஒலிக்கும் போது யாருடைய பெயர் ஒலிபெருக்கியில் கூறப்படுகின்றதோ அவரே பாளைக்கு உரிமையாளராக கருதப்படுவர். அவரிடம் பாளை ஒப்படைக்கப்பட்டு பறைமேளத்துடன் ஆலயம் வலம் வந்து அம்மனுக்கு பாளை சாற்றப்படுவது சிறம்பம்சமாகும். இப்பாளை விற்பனை மூலம் பல இலட்சம் பணம் அன்பளிப்பாக கிடைக்கின்றது.

**(ஏ) கலை கலாசாரம் :**

கண்ணகித்தாயின் திருச்சடங்கு காலத்தில் தமிழர்களின் கலை கலாசாரம் பேணப்படுவதைக் காண்கின்றோம். ஆண்கள் வேட்டியும் சால்வையும் அணிந்து கொண்டு தினமும் ஆலய தரிசனத்தில் ஈடுபடுவதையும், திருமணமானவர்களும், கன்னிப் பெண்களும், பட்டுச்சாறிகளும், சருகைச் சாறிகளும் அணிந்து தலையில் பூ வைத்து ஆபரணங்கள் அணிந்து கொண்டு ஆலய தரிசனத்தில் ஈடுபடுவதையும் சிறுமிகள்

பாவாடை சட்டையுடன் ஆலயம் செல்வதும் சிறப்பம்சமாகும். ஆலயங்களின் வாயில்களிலும் வீதிகளிலும் தோரணங்களும் சோடினைகளும் காணப்படும்.

நகரின் நான்கு திசைகளிலும் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருக்கும், கண்ணகி காவியங்கள் கண்ணகி வழக்குரை காவியம், காவடிச் சிந்து, அம்மன் பாடல்கள், கூட்டு வழிபாடுகள், சமய சொற்பொழிவுகள், கும்மி, கோலாட்டப் பாடல்கள் ஒலிபரப்பப்படும். அவை பக்தியினை ஏற்படுத்தும் உடுக்கு, மணி, பறைமேளம், மேள தாளங்கள், நாதஸ்வரங்கள் போன்ற இசைக்கருவிகளின் ஓசைகள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும். இவையெல்லாம் ஒன்றிணைந்து பக்திச் சூழலை உருவாக்குகின்றது.

கண்ணகியம்மன் திருச்சடங்கு காலத்தில் உள்ளூர், வெளியூர் கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் ஆலயத்தின் வெளி வீதியில் அமைந்துள்ள பூம்புகார் அரங்கில் மேடையேற்றப்படுகின்றன. அதில் புராண இதிகாச நாடகங்கள் நாட்டுக் கூத்துக்கள், கரகங்கள், கும்மிகள், கோலாட்டங்கள், வசந்தன் கூத்து என பல கிராமிய கலைப் படைப்புக்கள் இடம்பெறும். அத்தோடு நகைச்சுவை நாடகங்கள் இசை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறுகின்றன.

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்களில்...

02. கடந்த 1993ம் ஆண்டு கண்ணகியம்மன் ஆலயத்தில் குடமுழுக்கு இடம்பெற்றது. அக்கிரியைகளை அகோரதேசிகர் இரா.கோபாலசிங்கம் குருக்கள் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அப்பொழுது கண்ணகியம்மன் சிலை ஒன்று மூன்றாவது மண்டபத்தில் நெற்குவியலுக்கு மேல் வைக்கப்பட்டது. கிரியைகளுக்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றன கண்ணகியம்மன் சிலையை அவதானித்ததும் அச்சிலை அங்கில்லை. எல்லோரும் அதிர்ச்சியுற்றனர். ஆலய பூசகர் அவ்விடத்திற்கு வந்தார் விடயம் கூறப்பட்டது. கட்டாடியாருக்கு உரு ஏறியது. நெற்குவியல் பெருகுவதை அவதானித்தார். கட்டாடியார் நெற்குவியலை பிரித்தார் உள்ளிருந்து கண்ணகியம்மன் சிலையை எடுத்தார். கண்ணகித்தாயின் அற்புதம் எம்மை மெய் மறக்க செய்கிறது.

# கண்ணகி கோவலன் முற்பிறப்புக்கதை

திருமதி. ரேணுகாந்தன் கோபிகா

இந்துமதம் ஒருவர் தான் செய்த வினைக்கேற்ப மீண்டும் மீண்டும் பிறப்போம் எனவும் அப்பிறப்பு ஏழு பிறப்பு எனக் கூறப்படுகின்றது இதற்கு ஏற்ப கண்ணகி கோவலன் மாதவி முற்பிறப்பில் செய்த வினை என்ன? அவர்கள் இப்பிறப்பில் ஏன் அனுபதித்தார்கள் என்பதை கண்ணகி வரலாற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்களில் ஊடாக ஆராய்வோம்

## சிலப்பதிகாரம்

கலிங்க நாட்டிலே வேற்படை கொண்ட வசு என்பவன் சிங்கபுரத்தையும்,குமரன் என்பவன் மூங்கில் காடுகள் நிறைந்த கபில புரத்தையும் அரசாட்சி புரிந்தனர் இரு மன்னர்களுக்கும் பகைமை காணப்பட்டது. அச்சமயம் பொருளீட்டும் நோக்குடன் பெரும் பொருளைச் சுமந்து கொண்டு எவரும் அறியாத வகையில் சங்கமன் என்பவன் தன் மனைவியோடு கபில புரத்தை விட்டு சிங்கபுரத்தின் கடைவீதியில் உள்ள கடையில் நகை விற்றுக் கொண்டு வந்தான். இவன் பகை நாட்டு ஒற்றன் என பரதன் என்பவன் குற்றம் சுமத்துகின்றான். சங்கமன் அரச தண்டனை பெறுகின்றான் சங்கமனது மனைவி நீலி என்பவள். பெருஞ்சினம் கொண்டு கதறியழுது ஊரைக் கூட்டி இச்செயல்முறை தகுமோ என கேட்கிறாள். 14 நாட்கள் திரிந்தலைந்து ஒரு மலை உச்சியை அடைந்து உயிர் துறந்தாள். தான் அடைந்த துயரத்தை தனக்கு துயர் விளைவித்தவனும் அடைய வேண்டுமென சாபமிட்டாள் அப்பிறப்பிலே பரதனே இப்பிறப்பில் கோவலன் எனவும், சங்கமன் பொற்கொல்லன் எனவும், வசு பாண்டியன் எனவும் கூறப்படுகின்றது. இப் பெண்ணின் சாபமே கோவலன் கொல்லப்படுவதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

#### பெரிய எழுத்துக் கோவலன் கதை

மதுரையில் வாழ்ந்த மலையரசன் எனும் வணிகனுக்கு நான்கு மைந்தர்கள் அதில் மூவர் முதல் தாரத்திற்கும், மற்றையவன் இரண்டாம் தாரத்திற்கும் பிறந்தவன் மலையரசன் தன் சொத்தை இரண்டாக பிரித்தான். ஒரு பகுதியை முதல் தார பிள்ளைகளுக்கும், அடுத்த பகுதியை இரண்டாம் தார மகனுக்கும் கொடுத்தான்.

இளைய தாரத்தின் மகன் எண்ணை விற்கின்றான் பாண்டிய நாட்டு மன்னனுக்கு பிள்ளைபேறில்லை இதனால் அங்குள்ள காளி கோயிலை பூட்டி விடுகின்றான். இக் கோயிலை திறந்து விளக்கேற்றுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என கட்டளை பிறப்பிக்கின்றான் வணிகன் தனது எண்ணெய் முழுவதும் விற்றான். கோயிலுக்கு விளக்கேற்றுவதாக நேர்கடன் வைக்கின்றான் எண்ணெய் முழுவதும் விற்கப்படுகின்றது தனது நேர்கடனை செலுத்துகின்றான். இதனை கேள்வியுற்ற மன்னன் காளியின் முன் வணிகன் தலையை துண்டிகின்றான்.

அவனது தலை காளியின் மடி மீது வீழ்ந்து நியாயம் கேட்கின்றது அதற்காக மன்னனை பழிவாங்குவதாகக் கூறி காளி உயிர் துறக்கின்றான். வணிகனின் மனைவியான (ஊர்வசி) அவன் மீது வீழ்ந்து உயிர் துறக்கின்றாள். மூவருடைய உயிர்களையும் சொர்க்க நாதர் சிமிழில் வைத்து அடைகின்றார் காவிரிப்பூம் பட்டினத்தில் முத்துச்செட்டி எனும் வணிகனின் மனைவியான வர்ணமாலை பிள்ளை வரம் கேட்டு தவம் இருந்த போது வணிகனின் (ஐயந்தனின்) உயிரை அவளது கருவில் உருவாக்கச் செய்தார் அவ்வாறு பிறந்தவரே கோவலன் எனவும் பாண்டியமாதேவி பிள்ளை வரம் வேண்டி தவம் இருந்த போது காளியின் உயிரை எழுமிச்சங்கனியாக்கி அவனுக்கு சொர்க்க நாதர் கொடுக்க அதனையுண்டு கர்ப்பம் தரித்து பெண்பிள்ளை பெற்றாள் அக்குழந்தையே கண்ணகி எனவும் கடையூரில் வசிக்கும் தேவதாசியான வசந்தமாலை பிள்ளை வரம் கேட்டு தவம் இருந்த போது முன்பு வணிகனுடன் உயிர் துறந்த வணிகனின் மனைவியின் உயிரை சொர்க்கநாதர் எலுமிச்சங்கனியாக்கிக் கொடுக்க அதனையுண்ணும் வசந்தமாலைக்கும் பெண் குழந்தை பிறக்கின்றது அக் குழந்தையே மாதவி எனவும் கூறப்படுகின்றது. ஊழ் வினைப்பயனே இவ்வாறு நிகழ்ந்தது எனக் கூறுகின்றது.

**சிலம்பு கூறல்**

குழந்தைப் பேறில்லாத பாண்டிய மன்னன் சிவனைக் குறித்து தமமிருகின்றான் தவத்தை மெச்சிய சிவபெருமான் உமையோடு காட்சியளித்து பாண்டியன் கோரிக்கைக்குப் பெண் குழந்தை கொடுப்பதாக கூறினார். மன்னன் சிவனின் பாதத்தில் வீழ்ந்து வணங்குகின்றான் பின் உமையின் கால்களிலும் வீழ்ந்து வணங்கி விட்டு எழுகின்ற வேளையில் காற்றடித்தால் மேற்சேலை விலக அம்பிகையின் மார்பு அவன் கண்ணில்பட்டது மன்னன் சிந்தை தடுமாறுகின்றான். அன்னை வெகுண்டாள் பாண்டியனுக்கு மகளாக பிறந்து அவனை தண்டிக்க வேண்டும் என தீர்மானித்தாள்

அம்மையின் கோபக்கனல் இரண்டு பொறியாக மாமரத்தில் இரண்டு பூவாக விழுகின்ற பூ கனியாக மாறுகின்றது நன்றாக பழுத்த கனியை இறைவனுக்கு நைவேத்தியமாக படைத்தான் செங்கனியாக இருந்ததை குடமொன்றில் வைத்து மூடிவிட்டான் பின்னர் குடத்தை பார்த்த போது அழகிய பெண் குழந்தையொன்று காலில் நாகமணிச் சிலம்புடன் இருக்க கண்டு மகிழ்ந்தான். தூக்கி அரசியிடம் கொடுத்தான் அரசி பிள்ளைக்கு முத்தமிட்ட போது அவனது ஸ்தனத்தில் இருந்து பால் பீறப்பிட்டுப் பாய்கின்றது. காகங்கள் கூட்டமாகக் கூடிக் கரைகின்றன வைத்திருந்த கும்பமொன்று வெடித்து விடுகின்றது. ஆகாயத்தில் இடியும் மின்னலும் தோன்றுகின்றன. இக் குழந்தையின் காரணமாகவே இவை நடைபெறுகின்றது என அரசி கூறினாள் மன்னனும் தனக்கு நிகழ்ந்ததைக் கூறினான். இதெல்லாம் அன்னையின் செயல் என அரசி கூறி பல தானங்களை வழங்குகின்றாள் பிள்ளையை தொட்டிலில் இட்டாள்

அன்றிரவு இருவரும் தீய கனவு காண்கின்றனர் அக் குழந்தையால் தீங்குவரும் என்று பலர் கூற அரசன் சோதிடர்களை அழைத்தான். நாட்டுக்கும் அரசனுக்கும் கூடாது எனக் கூறினார் அவர்களின் ஆலோசனையின்படி அழகிய பேழையிலே வைத்து குழந்தையைக் கடலில் விடுவதாகக் கூறப்படுகின்றது இவ்வாறு முற்பிறப்பு கதை கூறுகின்றது.

**உசாத்துணை நூல்**

எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள் (திரு.ச.ரகுபதி)

## விரதம் அனுட்டிக்காதவர்கள்

சிறுவர்கள் வளரும் பருவத்தில் இருப்பதால் அவர்கள் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்பதற்காகவும், வயோதிபர்கள் பலஹீனர்களாக இருப்பதால் அவர்களின் உடல் நலம் கெட்டு விடக்கூடாது என்பதற்காகவும், விரதம் அனுஷ்டிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். கர்ப்பிணித்தாயினதும் அவளின் வயிற்றில் வளரும் குழந்தையினதும் போசாக்குக் கருதியே கர்ப்பிணிகள் விரதமிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. மாதவிடாய்க் காலங்களில் இரத்தம் மற்றும் கர்ப்பாசயக் கழிவுகள் வெளியேறுவதால் பெண்கள் உடல் உளரீதியாகக் களைப்புற்றிருப்பர். எனவே தான் மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் விரதமிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. இது முழுக்க முழுக்க உடல் நலத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும்.

# கண்ணகி வரலாற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்கள்

**கணபதிப்பிள்ளை கயல்வேந்தன் (அ.இ.ச.நீ)**
புள்ளி விபர உத்தியோகத்தர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானோரும் மண்ணோரும் ஏத்தும் தெய்வப்பெண் கண்ணகி. இக்கண்ணகி வரலாற்றுக் கதையினை பல இலக்கியங்களில் காண்கின்றோம். இவற்றில் பாரதத்தின் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும். ஈழத்தின் வழக்குரை காவியம், சிலம்புகூறல், கோவலன் கதை என்பனவும் முதன்மை பெறுகின்றன.

**சிலப்பதிகாரம் :**

காலத்தால் முந்தியதும் ஏனைய கண்ணகி இலக்கியங்கள் சனனிக்க காரணமாக அமைந்ததும் சிலப்பதிகாரமாகும். ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையான இலக்கியம் இது. சேர மன்னனான செங்குட்டுவனின் தம்பியென நம்பப்படும் இளங்கோவடிகளால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சிருஷ்டிக்கப்பட்டது.

புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று காண்டங்களைக் கொண்டு அவற்றிலுள்ள முப்பது காதைகளினூடாக இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் ததும்ப பழங்கால தமிழர் பண்பாட்டை சிறப்பாக கூறுகின்றார் ஆசிரியர். கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூன்று பாத்திரங்களை முன்னிலைப்படுத்தி பாத்திரப்படைப்புக்களினூடாக காவியத்தைக் கொண்டு செல்கின்றார்.

புகார்க் காண்டத்தில் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும், மானாய்கன் மகள் கண்ணகிக்கும் திருமணம் இடம்பெறும்போது பலரும் வாழ்த்துத் தெரிவிக்கும் காட்சியுடன் கதையைத் தொடங்கி தெய்வ வாகனமேறிய கண்ணகி தெய்வமாகி வரமளிப்பது வரை காவியம் படைத்துள்ளார். இதனூடாக

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும்

சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம்"

இலக்கியத்தின் நோக்கத்தையும், மூன்று உண்மைகளையும் நிலைநாட்டுகின்றார்.

சோழ நாட்டில் பூம்புகாரில் இருந்த கண்ணகி, இலக்குமியின் அழகினை ஒத்தவள். தீங்கேதுமில்லாத வடமீனாகிய அருந்ததி நட்சத்திரத்தின் பண்புடையவள். பெண்களாலேயே போற்றப்படுபவள் என்று கூறி, கணவன் வழிநடப்பவளென்பதை நிறுவுகின்றார். இதனை,

"போதில் ஆர் திருவினாள் புகழ் உடை வடிவு என்றும்
தீதுஇலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்
மாதரார்தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ" என்னும் பாடலில் காணலாம்.

மேலும் மாதவியிடமிருந்து மீண்டுவரும் கோவலனை பொறுமையுடன் ஏற்றுக்கொள்பவளாக கற்புடையவளாக காட்டப்படுகின்றாள் அவள்.

சூழ்வினைச் சிலம்பு காரணமாக மதுரைக்கு வருகின்றாள் கண்ணகி. இங்கு மதுரைக் காண்டத்திலே பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் தவறான தீர்ப்பினால் கோவலன் கொலை செய்யப்படுகின்றான். இதனால் வேதனைக்குள்ளான கண்ணகி பாண்டியனிடம் நீதிகேட்கச் செல்கின்றாள். அவள் வருகையைக் கூறும் வாயிற்காவலன்,

"வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரம் கிளித்தபெண்ணும் அல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்" என வியம்புகின்றாள்.

அதாவது கொற்றவை அல்லள், பிடாரி அல்லள். காளி அல்லள். துர்க்கை அல்லள். அனைவரும் ஒன்று சேர்ந்த பெண் என கண்ணகியின் தோற்றம் மாறுகின்றது.

பாண்டியன் மற்றும் கோப்பெருந்தேவி ஆகியோர் இறந்த பின்பும் சினம் தணியாகக் கண்ணகி "தீவினை செய்தவர்க்கு தீவினையே விளையும்", "ஓட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்", "கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான்" எனக் கூறி மதுரையை எரிப்பதைக் காண்கின்றோம். இங்கு சீற்றம் கொண்ட கண்ணகியின் கற்பு சீறிய கற்பாகக் காண்பிக்கப்படுகிறது.

மதுரைக் காண்டத்தின் இறுதியில் வேங்கை மரத்தின்கீழ் வந்துநின்ற கண்ணகியை தெய்வ விமானத்தில் வந்த கோவலனும் தேவர்களும் அழைத்துச் செல்வதையும், இதனைக் கண்ட வேடுவர்கள் "சிறுகுடியீரே சிறுகுடியீரே" என பந்தலமைத்து வழிபட்டதாகக் கூறுகின்றார்.

தொடர்ந்து வஞ்சிக் காண்டத்தில் சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து கங்கையில் நீராட்டி கண்ணகி சிலையினைச் செதுக்கி ஆலயமைத்துப் பிரதிஷ்டை செய்து விழா எடுத்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கின்றது.

ஆக சாதாரண மானிடப் பெண் தன் கற்பின் வலிமையால் தெய்வமான கதையை இங்கு காணமுடிகின்றது.

**வழக்குரை காவியம் :**

அடுத்து வழக்குரை காவியத்தை நோக்கின், இது இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு கண்ணகி கோயில்களில் நீண்ட காலமாகப் பாடப்படும் காவியமாகும். இது கி.பி 14ம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் வாழ்ந்த சகவீரர் என்பவரால் பாடப்பட்டது. இவர் தமிழ்நாட்டிலிருந்து வந்து மட்டக்களப்பில் வாழ்ந்தவரென கருதப்படுகின்றது. 1968 இல் பண்டிதர் வி.சி. கந்தையா இதனை முழுமையாகப் பதிப்பித்தார். இதுவே மட்டக்களப்பின் இலக்கியச் செல்வமாகும்.

வழக்குரை காவியம் வரம்பெறுகாதை தொடங்கி குளிர்ச்சிக் காதை வரை பதினொரு காதைகளில் சுமார் 2226 பாடல்களினூடாக கண்ணகி கதையைக் கூறுகின்றது.

"கானிரங்கு தொடைமார்பன் காவிரிசூழ் வளநாட்டில்
வானிரங்கு புகழ்கொண்ட மாசாத்தர் கோவலற்காய்த்
தேனிரங்கு மொழிமடவார் சேயிலையார் மாதவியார்

தானிரங்கு கதைபாடத் தரணியுள்ளோர் கேளுமெல்லாம்" எனத் தொடங்கி கண்ணகி கதையைக் கூறுகின்றார்.

பராசர முனிவரின் மகளின் அழகையும், குணத்தையும் கண்ட சிவபெருமான் "நீ பூலோகத்தில் தெய்வமாகப் போற்றப்படும் தகுதியுடையவள், ஆதலால் கற்புக்கரசியாக விளங்கவும் மானிடர்கள் உன்னைத் தெய்வமாக வணங்கவும் வரம் தந்தோம்" எனக்கூற அங்கிருந்த உமை, பாண்டிய மன்னன் தவப்பேற்றால் பெற்ற மூன்றாவது கண்ணினால் அகந்தை கொண்டிருந்தான். அதனைப் போக்க வேண்டும் என வேண்ட .கண்ணகிக்கு பாண்டிய நாடு பிறப்பிடமாகியது.

பாண்டிய நாட்டில் மகத்துவமான மாங்கனியொன்று காணப்பட்டது. அதனைப் பறிக்க நெருங்கும்போது மறைந்துவிடும். இதனைக் கேள்வியுற்ற பாண்டியன் அம்பெய்து அக்கனியை வீழ்த்தியபோது அது அந்தரத்தில் தொங்கியது. மன்னன் கையை நீட்டவே அது தீக்குழம்பாகி கையில் விழ அச்சமுற்ற மன்னன் நிலத்தில் விட்டெறிகின்றான். அதன் வெம்மையால் நெற்றியில் ஏற்பட்ட வியர்வையை அதனைத் தொட்ட கையால் துடைக்கின்றான் அவன் நெற்றிக்கண் நீங்கியது. நிலத்தில் வீழ்ந்த கனியை எடுத்து மனைவியிடம் கொடுக்கின்றான். அக்கனி தெய்வத்தன்மை பொருந்தியதென்பதை உணர்ந்த பாண்டிமாதேவி பொற்குடத்தில் இட்டுவைத்து மூன்றாம் நாள் அரச சபைக்குக் கொண்டு வந்து பார்த்தபோது அது ஒரு அழகிய பெண் குழந்தையாக மாறியிருந்தமையைக் கண்ட அரண்மனைச் சோதிடர்கள் "பீடுறும் மதுரை அரசோடழியக் காரணமாகும்" என உரைக்க அக்குழந்தையை அழகிய பேழையில் வைத்து மன்னன் ஆற்றில் விடுகின்றான். அது சோழ நாட்டைச் சென்றடைகின்றது. மாநாய்கன் மகிழ்வுடன் எடுத்து வளர்க்கின்றான். இவ்விடமிருந்து அடிப்படைக் கதை சிலப்பதிகாரத்தை ஒத்தாகக் கொண்டு செல்லப்படுகின்றது. இங்கு தெய்வப் பெண்ணான கண்ணகி மனித பெண்ணாகி மீண்டும் தெய்வமான போக்கினைக் காண்கின்றோம்.

**சிலம்பு கூறல் :**

இலங்கையின் வட பகுதியோடு தொடர்புடையது. குறிப்பாக வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தில் பாடப்படுகிறது. யாழ்ப்பாணத்தை செகராசசேகரன் ஆண்ட காலத்தில் காங்கேயப்புலவரால் இயற்றப்பட்டது. இது சிதைவுற வெற்றவேல் புலவரால் புதுப்பிக்கப்பட்டது. கோவலன், கண்ணகி பிறப்பு, திருமணம், கோவலன் மாதவியிடம் சென்றமை, மன்னனையும் மதுரையையும் பழிதீர்த்தமை, வற்றாப்பளைக்கு வந்து

அற்புதம் புரிந்தமை போன்ற விடயங்கள் உள்ளடக்கியுள்ளன

**கோவலன் கதை :**

இதனை வெற்றிவேலூர் சட்டம்பியர் இயற்றினார். தென்புலோலியூர் ம.செ.செல்லத்துரை 1962 இல் அச்சிட்டார். யாழ்ப்பாண கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாடப்படுகின்றது.

மேலும் வசந்தன் கவித்திரட்டு, குளிர்த்திப்பாடல், உடுகுச்சிந்து, கூவாய் குயில் ஆகிய தமிழ் நூல்களும், இராஜவராளி, இராஜ இரத்தினாக்கார, பத்தினிக்கத்தாவ போன்ற சிங்கள நூல்களும் கண்ணகி வரலாறியம்பும் இலக்கியங்களாகும்.

**உசாத்துணை :**

1) சிலப்பதிகாரம்
2) சிலப்பதிகாரத்தின் பண்பாட்டுக் கோலங்கள்
(இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்) - க.ரகுவன்
3) எருவில் கண்ணகி அம்மன் ஆலய திருச்சடங்கு முறைகள் (எஸ். ரகுபதி)

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்களில்

03. எமது கண்ணகியம்மன் ஆலயத்தின் பிரதான முகப்பில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரமாக கட்டப்பட்ட வாயிற் தோரணத்துக்குரிய வேலைகளை இந்தியாவிலிருந்து வருகை தந்த சிற்பி கண்ணகியம்மன், காவல் தெய்வங்களை செதுக்கியபோது கண்ணகித்தாயின் கையில் வைப்பதற்கு சிலம்பு தேவை என கூறினார்கள். கோயிலில் உற்சவகாலமாக இல்லாத காரணத்தினால் கோயிலிருந்து சிலம்பு எடுக்க முடியாது என ஆலய நிர்வாக சபையினர் கவலையடைந்தனர். ஏற்கனவே துப்பரவு செய்யப்பட்டு சிற்பிகளுக்கு வழங்கப்பட்ட இடத்தை நாளாந்தம் வேலைகள் செய்யும் போது துப்பரவு செய்து ஒதுக்கிய குவியலில் இருந்து வெட்டும் கம்பியைத் தேடும் போது அற்புதமான அழகிய புதிய சிலம்பை கண்டெடுத்தனர். எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர். அம்மனின் அருளை நினைத்து வியந்தனர். அம்மனை வணங்கி அச்சிலம்பை கண்ணகியின் கையில் வைத்துப் பொருத்தினார்கள். கிரியைகள் இடம்பெற்றன இதனூடாக அம்மன் எம் குறைகளை நிறைவாக்குபவள், மனநிறைவைத் தருபவள் என்பது தெளிவாகின்றது.

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகக் கிரியையினை (2019.04.22ந் திகதி) மிக சிறப்பாக நடாத்திய குருமார்களின் சேவையினை கௌரவித்து பாராட்டிய போது வாசித்து வழங்கப்பட்ட வாழ்த்துப்பா

விக்னேஸ்வரனே சிவாகம பிரதிஸ்டா பூசணம் வித்தகர் சிவஶ்ரீ கிரியாஜோதி
மக்கள் புகழ் சிவகிரி மேலோங்கு அகோர சிவாச்சாரியார்
மிக்க புகழ் கண்ணகிக்கு மான்பு இரா கோபாலசிங்கம் ஐயா
பக்க துணை குருவோடு கும்பாபிஷேகமிட்டார் பத்தினியே புகழ் பாட பணிந்து

கல்லல்ல கருவறையில் கடற்பேழை அம்மனென்று
காரணம் காட்டி வைத்து கால நேரம் குறித்த குரு
நல்ல நேரம் குறித்தெடுத்தீர் நம்மன்னை சடங்கிற்காய்
நாட்டின் பலபாகம் நன்முறையில் கற்றறிந்தோர்
வல்லவர்கள் குருமார்கள் வாய்ப்பிற்காய் அழைத்து வந்தீர்
வணங்குகிறோம் குருவே வாழ்த்துரைகள் கூறுகின்றோம்
அல்லல் தீரும் ஆலயத்தின் பொலிவு கண்டு
ஆசிகள் குவியும் அன்னையருள் பெருக்கெடுக்கும்.

ஆதி சைவ வழித்தோன்றல் உருப்பிராய் தேவஸ்தான
அன்னை நாக பூசனியின் ஆலய சிவப் பிரமஶ்ரீ
வேதிய கிரியாரெத்தினம் வேண்டுபுகழ் சாதக சிம்மம்
வணங்குபுகழ் சர்வசாதகாசிரியர் வள்ளல் தற்புருஷ சிவாசாரியார்
ஓதியருள் இராஜ கந்தசன் ஓங்குபுகழ் நிமலேஸ்வரக்குருக்கள்
உபசாதகர் சிவஶ்ரீ பே. கிருஸ்ணமூர்த்தி சர்மா
சோதிட மாமணி காயத்திரியுடன் சிவசுப்பிரமணியர் குரு
செப்புதல் கேட்டு நன்றாய் சேர்ந்தொன்றாய் வாழ்த்துகிறோம்.

நவகுண்ட பட்ஷயாக நல்சோதிட கலாமணி
நல்லுரை சிவாகம நலமோங்கு சிரோன்மணி
சிவஸ்ரீ கிரியா கலாபமணி சிவாச்சாரியார் வாமதேவ
சு.கு. விநாயகமூர்த்தி சுந்தரர் திருப்பமுகாமமுடன்
தவத்திரு கிரியா பூஷணம் திகழொளி ஈசான சிவாச்சாரியார்
தர்ம நித்திய மங்கள் ஜோதி தலமோங்கு கோவில்குளம்
சிவஸ்ரீ செ.கு. சிவத்திரு உதயகுமார் குருக்கள்
சிவதொண்டர் வாழி சென்நெறியோர் வாழியவே.

மட்டக்களப்பு வீரகத்தி மாண்புறுபிள்ளையார் கிரியாஜோதி
மகத்தான தேசமான்ய மகிமைபெறு ஈசான சிவாச்சாரியார்
அட்டபுகழ் சிவஸ்ரீ அருள்திரு நவரெத்தின
ஆஸ்தான முரசொலிமாறன் அதியுயர் குருக்களுடன்
திட்டமிடு ஜாதகர் தெய்வீக கிரியாமணி
துறைநீலாவணை மாரி துலங்கு சத்தியோஜாத சிவாச்சாரியார்
மட்டுபுகழ் சிவஸ்ரீ கு. நல்லராசாக் குருக்களையும்
கிரியா புகழ் கண்டு கீர்த்தியோங்க வாழ்த்துகிறோம்.

கதிர்காம பத்திரகாளி காளிபூஜா துரந்தரர்.
கன்னல் மொழி சிவஸ்ரீ இரா.கு.தங்கவேல் குருக்களோடு
விதிகூறும் ஜாதக திலகம் வேத சிவாகம குருமணி
வள்ளல் அகோரசிவாச்சாரியார் வாஞ்சியூர் சிவஸ்ரீ
மதியொளி ச. மயூரவதன மாண்புறு குருக்களோடு
மாங்காடு செட்டிபாளைய மாணிக்க விநாயகர் குரு
அதியுயர் கிரியாதிலகம் ஆருட வாமதேவ சிவாச்சாரியார்
அன்னல் சிவஸ்ரீ நா. அன்புக் குணகேந்திர குருக்களும் வாழியவே

கொழும்பு தெமட்டக்கொட குருசெந்தில் குமரன்கோயில்
கோடி புகழ் கிரியாபூஷணம் கோமகன் சோதிடதிலகம்

தொழுதேற்றும் சாத்வசம்ரட்சன் தற்புருஷ சிவாச்சாரியார்
தில்லைபுகழ் சிவஸ்ரீ திரு. பாலரமணக் குருக்களுடன்
ஏழுபுகழ் கிரியாவாணர் ஏற்றமிகு சாதக சுர பாரதி
எருவிலூர் சிவஸ்ரீ ஏற்புகழ் தற்புருஷ சிவாச்சாரியார்
தொழு வள்ளல் கோபால சிங்கமையா, துரையிவர் கிரிதரக்குருக்களையர்
தொண்டரே வாழி தூயவர்கள் வாழியவே!

பரம்பரை பரம்பரையாய் பத்தினிக்கு தொண்டாற்றும்
பார் போற்றும் கோபால் பத்தினியன் குருக்களையா
கரம் கூப்பி தொழுகின்றோம் கண்ணகித்தாய் என்றும்மை
காவலரே வாழி! கட்டாடியாரே வாழியவே!
சிரம் தாழ்த்தி வணங்கவல்ல சிற்பிகளே குருமாரே
சேயிழையாள் கண்ணகிக்கு சேர்ந்தொன்றாய் நவகுண்டம்
வரமருள செய்கின்றோம் வாழ்த்துக்கள் வரம் பெறுவோம்
வந்தோர் உதவிதந்தோர் வழிதந்தோர் எல்லோரும்
வாழிய! வாழிய! வாழியவே!

வாழ்த்துவோர்

ஆக்கம் :- **எருவில் ரெத்தினம்** — எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை.

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்களில்..

04. எமது ஆலயத்தில் ஒரு நள்ளிரவு களவெடுப்பதற்காக ஒருவர் ஆலயத்துக்குள் சென்றார். உடனே அவருடைய கண்பார்வை இல்லாமல் போய்விட்டது. அவரால் களவெடுக்கவும் முடியவில்லை, வெளியில் செல்லவும் முடியவில்லை, அடுத்த நாள் அடியவர்களால் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

ஒன்பது மாதத்திற்குள் கண்ணகியம்மன் ஆலய மீள் கட்டுமான பணிகளை சிறப்பாக செய்து முடித்த ஆலய பரிபாலன சபையினரின் சேவை நலனை பாராட்டி மகா கும்பாபிஷேக நிகழ்வின் போது (2019.04.22) வாசித்து வழங்கப்பட்ட வாழ்த்துப்பா

# தாயாரின் தாள்வணங்கித் தலைவர்களை வாழ்த்திடுவோம்!

பண்டைத் தமிழர் பண்பாடு விளங்கு நகர்
அண்டியே முற்குலத்தோர் ஆளும் எருவில் நகர்
மண்டலத்து மக்களெலாம் மகிழ்ந்தேற்றும் கண்ணகித்தாய்
கொண்டிட்டாள் பெருங்கோயில் குலமக்கள் மத்தியிலே
விண்டலத்துத் தேவர்களும் விதந்தேற்றும் மாதரசி வைகாசித்
திங்களிலே வந்தமர்ந்து திருவருள் மழை பொழியக்
கண்டவர்கள் கோடி, கோடி களிகூர்ந்தோம் நாமொன்றாய்க்
கரம் கூப்பித் தாள்பணிந்து கண்ணகியின் அருள் பெறுவோம்!

ஆற்றல்மிகு கலிங்கர் குல முன்னாள் தலைவரான
அண்ணன் மயில் வாகனத்தின் அருமைத் தம்பியிவர்
மாற்றமில்லாக் கொள்கையினால் அவர்மனக் கருவதனை
எண்ணத்தில் கொண்டு ஏற்றிவிட்டார் கலைக்கோயில்
தோற்றமுற்ற நாள்முதலாய் தொடர்கனவாய் எமக்கிருந்த
மாற்றத்தை எமக்களித்த மாணிக்கப்போடி சுந்தரலிங்கம் மாண்புயர
வாழ்த்துகிறோம்.

பன்னெடுங்காலமாகக் கதிரமலை அமிர்தலிங்கம்
பண்போடு பணிசெய்தே பத்தினித்தாய் ஆலயத்தை
எண்ண இனிக்கும் இனிய கலைக் கோயிலாக
வண்ணமுற வடிவமைத்து வழங்கிவிட்டார் பெரும்பணியை
இன்னுமென்ன எமக்கிங்கே எல்லாமே நிறைவாச்சி
அமிர்தலிங்கம் செயற்பெருமை அவனியிலே மிளிர்ந்தொளிரும்

சமூக சேவையாளர் சந்திரப்பிள்ளை மகன் அம்மன்
ஆலயக் கதவுகளை அருள் வீசத் திறந்து வைக்கும்
விமோசன வண்ணக்கர் ரகுராமமூர்த்தி என்பார்
மதிப்புக்குரிய நல்ல மருந்தக வியலாளர்
சமாதானப் புறாவாகச் சாற்றி நின்றார் சேவை பல
அமையட்டும் இவர் வாழ்வு அனைவரதும் நல் ஆசியுடன்

அலங்கார அம்மன் கோயில் ஆலய மாணியகாரர்
அந்நாளில் அம்பாளின் வழங்குரைக் காவியத்தை
கோலமுறப் பாடிவந்த பூசகர் சோமசுந்தரத்தின்
புண்ணிய புத்திரன் தினகரன் பிள்ளையாவார்
ஞாலம் வியக்க நாம் கண்டோம் கலைக்கோயில்
பாலகணக் காளரிவர் பல்லாண்டு வாழியவே!

சிவலிங்கம் பலவடிவம் அதில் சேர்ந்தசுந் தரலிங்கம்
தார்மீகத் தலைவராகத் தாய் அடியில் பணிபுரிய
நவமான செயலாளர் நாயகமாய் அமிர்தலிங்கம்
நிதமுமே செயலாற்ற நீடுபுகழ் வண்ணக்கர்
தவமாம் ரகுராமமூர்த்தி தக்க துணைவழங்க
தினகரன் பிள்ளை திகழ்மணிய காரனாவார்.

எருவில் பணிக்கனார் குடித்தலைவர் பவளசிங்கம்
இன்புறு எருவில் பெத்தான் குடித் தலைவர்
கருமவான் பேரின்ப நாயகம் ஜேபியாம்
கரவாகுப் பணிக்கனார் குடித்தலைவர் யோகராசா
குருக்கள் தாமோதரம் பிள்ளை குடித்தலைவர் களுதாவளைப்
பெத்தான் குடிமக்கள் பெருமையுற வாய்த்தனரே.
அச்சமிலா கச்சிலா குடித்தலைவர் கணேச மூர்த்தி
கண்ணியன் சத்தியசீலன் வேளாளர் குடித்தலைவர்

மெச்சவே பத்தினாச்சி குடித்தலைவர் சங்கரப்பிள்ளை
மிகு மருத்துவிச்சி குடித்தலைவர் இராஜேந்திரன் ஆவார்
சஷ்டி குடித்தலைவர் சலனமற்ற கீர்த்தி வர்மன்
குண்டன் குடித்தலைவர் குணவான் ஏரம்பமூர்த்தி.

குலம் போற்றும் கோப்பி குடித்தலைவர் சத்தியநாதன்
பலம் கொண்ட படையாண்ட குடித்தலைவர் துரைச்சாமி
நிலம் ஆண்ட உலகிப்போடி குடித் தலைவர் பரமானந்தம்
தலம் கொண்ட மண்முனைப்பெத்தான் குடித்தலைவர் திருச்செல்வம்
நலம் காக்கும் கலிங்கர்குலத் தலைவர் சின்னத்துரை
சிலம் பொடித்த கண்ணகியின் சீரிய செயற்குழுவே.

பொற்புடைக் கண்ணகியின் பொலிவான ஆலயத்தின்
அற்புத வளர்ச்சிக்காய் அனுதினமும் பணிசெய்த
ஏற்புடைத் தலைவர்மார் ஏற்றமுற வாழ்வினிலே
இனிதே வாழ்த்துகிறோம் எருவில்வாழ் மக்களொன்றாய்
கற்புடைக் கண்ணகியாள் காலடியை நிதம்பணிந்து
காலமெலாம் எருவில் நகர் கவின் பெருக வணங்கிடுவோம்.

வாழ்த்துவோர்
**மலராக்கக் குழு**
அருள்மிகு ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம் எருவில்

ஆக்கம் :
**எருவில் கலிங்கன்**

## எருவில் ஸ்ரீ கண்ணகியம்மனின் அற்புதங்களில்..

05. ஒருநாள் ஒரு நபர் நடுநிசியில் ஆலயத்தின் கருவறையின் கதவினை தீயிட்டு கொழுத்திவிட்டு பெறுமதியான பொருட்களை சூறையாடினார். எந்தவித தடயங்களும் கிடைக்கவில்லை. ஆனால், தாயாரின் அருளினால் கள்வன் பிடிபட்டான்.

எருவிலம்பதி கண்ணகி அம்மன் ஆலயத்தினர், ஆலயத்திருப்பணி வேலையின் போது ஆலய கட்டட நிர்மாணத்தை சிறப்பாக வடிவமைத்த ஸ்தபதி பொ.விஜயகுமார்" அவர்களின் சேவையினை பாராட்டி ஆலய கும்பாபிஷேக விழாவின் போது 2019.04.22ந் திகதி வாசித்து வழங்கப்பட்ட வாழ்த்துப்பா

# சிற்பக்கலை வேந்தன் ஸ்தபதி "பொ.விஜயகுமார்" மலை விளக்காய் ஓங்குகவே!

கடலம்மா சென்னி சூட
கங்கை ஏரி பாதமாட
உடலாக ஊர் செழிக்க
உத்தமர்கள் முகம் பூக்க
இடமாம் வந்தாறுமூலையிலே
இன் பொன்னம்பலம் அரசம்மா
படமாக பெற்றெடுத்த இவன்
விஜயகுமார் வாழிய வாழியவே!

வந்தாறுமூலை மகா வித்தியாலயம்
விருப்பமுடன் வித்தை பெற்று
இந்த வாழ்வில் இனிமை பெற
இல்லறம் கண்டு ஞானேஸ்வரியுடன்
நந்தல் இல் வாஞ்சையுடன்
நெஞ்சு நிறைந்து குளிர
சொந்தமாய் இரு பிள்ளைகண்டு
சுவீகரித்தாய் பேரின்பம் வாழியவே!

அர்த்தமுள்ள வாழ்வு வாழ
ஆலய கட்டிட நிர்மாணம்
சேர்ந்து மனம் நிறைவு பெற
சூதானமாய் வேலை கற்று
தூர்ந்து போகா சிற்ப வேலை
துல்லியமாய் பணி செய்து

சேர்ந்திலங்கும் கலைஞனே
ஸ்தபதி பொ.விஜயகுமார்
வாழிய பல்லாண்டிங்கே!

அராலியூர் அள்ளித் தந்த
அருள்கலைத் திலகம் அவர்
அன்புக்குரு எஸ்.எஸ்.மகேஸ்வரன்
ஆசியுடன் சிற்பம் கற்று
சின்னேரம் இன்றி எந்நேரமும்
சொர்க்கமாய் சிற்பம் செய்து
சிற்பக்கலை வேந்தனாய்
சிற்பக்கலைக் கூடமானாய் வாழ்க வாழ்கவே!

விக்னேஸ்வரா சிற்ப வர்ண கலையகம்
வின் தொட்டும் புகழ்க்கூடம்
திக்கெட்டும் கதை பேசும் வண்ண
தெவிட்டாத சிற்பங்களே
மக்கள் மனதில் என்றும் வாழும்
மகத்தான மதக் கதைகளை
இக்கணமே அமைத்து விட்டாய் சிற்பங்களில்
எப்போதும் வாழிய வாழிய பல்லாண்டிங்கே!

கவிதைடி **ஆழிவேந்தன்**

வாழ்த்துவோர்
எருவில் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்

## தீமையினை அழிப்பவள்

கண்ணகித்தாய் அநீதி வழியில் நடந்த பாண்டியனையும் அவனது செயலுக்கு ஒத்து ஊதியவர்களையும் அழித்தது போல் அநீதி வழியில் நடப்பவர்களைத் தண்டிப்பாள்.

# நவகுண்ட பக்ஷ கும்பாபிஷேக வகையும் முகூர்த்த நிர்ணய விதியும்

சிவஸ்ரீ சண்முக மயூரவதன குருக்கள்
BBA (SPL) Mgt, DO (Finance)
நவகுண்ட சோபித குரு

ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளும், கற்பனை கடந்த சோதியுமாகிய இறைவனை ஆன்மாக்கள் வணங்கி போக மோட்சத்தினை அடைவதற்காக ஆலயத்தினை நிறுவி அதில் இறைவனின் திருவுருவத்தை நிறுவி, கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து குடும்பத்தினால் அபிஷேகம் செய்வதே கும்பாபிஷேகமாகும்.

கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு விழா, குட நன்னீராட்டு விழா என்று அழைப்பார்கள். இதனை பிரதிஷ்டை என்றும் கூறுவதுண்டு. இது நான்கு வகைப்படும் அவையாவன,

1. **ஆவர்த்தம்**
2. **அனாவர்த்தம்**
3. **புனராவர்த்தம்**
4. **அந்தரீதம்**

**ஆவர்த்தன கும்பாபிஷேகம்**

புதிதான ஒரு இடத்தில் சுவாமியை வைத்து பாலப்பிரதிஷ்டை செய்து பூஜை செய்து பின்னர் அந்த இடத்தில் புதிய ஓர் ஆலயத்தை கட்டி, பாலாலய மூர்த்தியினை கும்பத்தில் எழுந்தருளப்பண்ணி பின்னர் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்ட மூர்த்திக்கு கும்பாபிஷேகம் செய்வது ஆவர்த்தன கும்பாபிஷேகமாகும்.

**அனாவர்த்தன கும்பாபிஷேகம்**

ஒரு ஆலயத்தினை வெகு நாட்களுக்கு முன் கட்டி கும்பாபிஷேகம் செய்து பூஜை செய்து வந்து பின்னர் ஏதாவது காரணத்தினால் ஆலயத்தில் பூஜையில்லாமல் அழிய விட்டும், சீர் குலைந்தும் இருந்த ஆலயத்தில் திருத்த வேலைகள் செய்து மீண்டும் கும்பாபிஷேகம் செய்தல் அனாவர்த்தன கும்பாபிஷேகமாகும்.

**புனராவர்த்தன கும்பாபிஷேகம்**

ஒரு ஆலயத்தில் கர்ப்பக்கிரகம், கோபுரம், சுற்றுப் பிரகாரம், விமானம், பலிபீடம், விக்கிரகங்கள் போன்றவற்றில் பழுதுகள் ஏற்பட்டால், ஆலயத்தில் பூசியுள்ள வர்ணம் அழிந்து இருந்தால், ஆலயத்தில் ஏதாவது திருத்த வேலைகள் செய்ய வேண்டி ஏற்பட்டால் சுவாமியை பாலஸ்தாபனம் செய்து பாலாலய கும்பாபிஷேகம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து பின்னர் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தன கும்பாபிஷேகமாகும்.

**அந்தரீத கும்பாபிஷேகம்**

ஆலயத்தில் கள்வர், தீண்டத்தகாதோர் நுழைந்து ஆசுசப் பத்தியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கல் போன்றவற்றில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி காலதாமதிக்காமல் உடனே செய்கின்ற கும்பாபிஷேகம் அந்தரீத கும்பாபிஷேகமாகும்.

**கும்பாபிஷேக நிர்ணயம்**

அயனங்கள் 2 வகைப்படுகின்றது.

1. உத்தராயணம் - தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்கள்
2. தட்ஷணாயணம் - ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்கள்

கும்பாபிஷேகம் செய்வதற்கு உகந்த மாதம் எது?

உத்தராயணத்தில் சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி மாதங்களும் தக்ஷிணாயணத்தில் ஆவணி மாதமும் உத்தமமான பலனைத் தரும்.

தக்ஷிணாயணத்தில் புரட்டாதி, ஐப்பசி மாதங்களும் உத்தராயணத்தில் மாசி மாதமும் மத்திமமான பலனைத் தரும்.

பொதுவாக கார்த்திகை, மார்கழி மாதத்தில் கும்பாபிஷேகம் செய்தல் கூடாது.

என்ன திதியில் என்ன வகையான கும்பாபிஷேகம் செய்ய முடியும்?

ஆவர்த்தன கும்பாபிஷேகத்தை பிரதிமை, த்விதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சப்தமி, தசமி, துவாதசி, எகாதசி, திரியோதசி திதிகள் வரும் நாட்களில் செய்ய முடியும்.

அனாவர்த்தன கும்பாபிஷேகத்தை தசமி, சதுர்த்தசி, திரையோதசி., துவாதசி திதிகள் வருகின்ற நாட்களில் செய்ய முடியும்.

புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை பிரதமை, திருதியை, துதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி திதிகள் வருகின்ற நாட்களில் செய்ய முடியும்.

எந்த வகையான கும்பாபிஷேகத்தை எந்த நட்சத்திரத்தில் செய்ய முடியும்?

ஆவர்த்தன கும்பாபிஷேகத்தை அஸ்வினி, ரோகினி, திருவாதிரை, சித்திரை, புனர்பூசம், அத்தம், மிருகசீரிடம், உத்திரட்டாதி, அனுசம் போன்ற நட்சத்திரங்களில் செய்யலாம்.

அனாவர்த்தன கும்பாபிஷேகத்தை அஸ்வினி, ரோகினி, திருவாதிரை, சித்திரை, புனர்பூசம் போன்ற நட்சத்திரங்களில் செய்யலாம்.

புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை அஸ்வினி, ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, அனுசம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி போன்ற நட்சத்திரங்களில் செய்யலாம்.

கும்பாபிஷேகத்தை எந்த யோகத்தில் செய்ய முடியும்?

1. சித்த யோகம்
2. அமிர்த சித்த யோகம்

கும்பாபிஷேகங்களை எந்த ராசியில் செய்ய வேண்டும்?

ஸ்திர ராசியிலே கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் அதாவது ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் போன்ற ராசிகளில் செய்யலாம்.

பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எந்த ராசியில் செய்ய வேண்டும்?

சர ராசிகளான மேடம், கடகம், துலாம், மகரம் போன்ற ராசிகளிலே பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்தல் வேண்டும்.

எந்த இலக்கினத்தில் கும்பாபிஷேகம் செய்தல் கூடாது?

கும்ப லக்கினம்

எருவில் கண்ணகி அம்மன் ஆலய நவகுண்ட பக்ஷ கும்பாபிஷேகம் 22.04.2019 திங்கட்கிழமை சித்திரை மாதம் 09 திகதி காலை 9.02 - 10.27 மணியுள்ள அனுச நட்சத்திரத்தில் அபர பட்ச கிருதியை திதியில் சித்த யோகம், கடக லக்கினத்தில் இடம் பெற்றுள்ளது.

கும்பாபிஷேக முகூர்த்த ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| சுக்<br>புதன் | சூரி | செவ் | ராகு |
| 8 | அனுசம் | | 1 |
| 7 | | | 2 |
| குரு<br>சனி,<br>கேது | சந் | 4 | 3 |

கும்பாபிஷேகம் செய்த மாதம் - சித்திரை இது உத்தராயண காலம் சூரியன் உச்சமடையும் மாதம். சுப கருமங்கள் செய்யக் கூடிய மாதம். ஆனால் சித்திரை மாதம் அதிக உஷ்ணமான மாதம், மூத்த பிள்ளை ஆண் குழந்தையாக இந்த மாதத்தில் பிறந்தால் அது பிறந்த லக்கினம் கன்னி, மகரம், மீனம் போன்றவற்றில் பிறந்தால் மட்டுமே சூரியனின் பாதிப்பு தகப்பனாரைப் பாதிக்கும். ஏனைய லக்கினங்களில் பிறக்கும் குழந்தைகளால் ஒன்றும் இடம்பெறாது.

கும்பாபிஷேகம் செய்த பட்சம் :- பட்சம் 2 வகைப்படும்.

பூர்வ பட்சம் - வளர்பிறை சுக்கில பட்சம் அமாவாசை தொடக்கம் பௌர்ணமி வரை.

அபர பட்சம் - தேய்பிறை கிருஷ்ண பட்சம் பௌர்ணமி தொடக்கம் அமாவாசை வரை.

சுப காரியங்களை அமாவாசையிலிருந்து தேய்பிறை பஞ்சமி வரை செய்யலாம் அது உத்தமம்.

கும்பாபிஷேகத்தை ஒரு பட்சத்தில் கிரியைகள் செய்ய வேண்டும். இல்லாவிட்டாலும் யாக ஆரம்பம் முதல் கும்பாபிஷேகம் வரை ஒரு பட்சத்தினுள் இருத்தல் வேண்டும்.

கும்பாபிஷேகம் செய்யக்கூடிய கிழமைகள் - புதன், வியாழன், வெள்ளி, ஞாயிறு, திங்கள் கிழமைகள் சுப காரியங்கள் செய்யலாம்.

கும்பாபிஷேகம் செய்த நட்சத்திரம் :
அனுச நட்சத்திரம் இது விருட்சிக ராசியில் முழுமையான பாதங்கள் அமைந்துள்ளது. இந்த நட்சத்திரத்தின்

பார்வை - சமம்
தன்மை - சுபம்
அதிபதி - சனி
தேவதை - இலட்சுமி
பஞ்சபூதம் - அக்கினி
பால் - பெண்
உருவம் - வேல்

செய்யக் கூடிய சுப கருமங்கள் - விவாகம், சோறு ஊட்டுதல், பெயர் சூட்டுதல், வித்தியாரம்பம், முடி சூட்டுதல், விதைத்தல், கதிர் அறுத்தல், தானியம் வாங்குதல், தானியம் களஞ்சியப்படுத்தல், வாகனம் வாங்குதல், ஆயுதப் பயிற்சி, ஆபரணம் அணிதல், கிரக ஆரம்பம், கிரகப் பிரவேசம், கால்நடை வாங்குதல், கும்பாபிஷேகம் செய்தல் போன்றவைகள் செய்யலாம்.

எமது எருவில் கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் செய்ய தினத்தை எடுத்து நோக்கினால் உத்தராயணம், சித்திரை மாதம், திங்கட்கிழமை, சித்த யோகம், கடக லக்கினம், அனுச நட்சத்திரம், அபரபட்ச திருதியை திதி, லக்கினத்திற்கு 7ம் வீடு மகர ராசியில் எந்த ஓர் கிரகமும் இல்லாமல் சுத்த வீடாக இருப்பது மிக உத்தமமான நாளாகும்.

சுப கருமங்கள் செய்யக்கூடாத மாதங்கள் எது?
ஆடி மாதம் - இராமனால் இராவணன் அழிக்கப்பட்ட மாதம் என்பதால் சுப கருமம் செய்வதில்லை.

புரட்டாதி மாதம் - விஷ்ணுவினுடைய நரசிம்ம ரூபத்தால் இரண்யன் சம்ஹாரம் செய்யப்பட்ட மாதம் என்பதால் சுபகருமம் செய்வதில்லை.

மார்கழி மாதம் - மகாபாரதப் போர் இடம்பெற்று பஞ்ச பாண்டவர்களால் கௌரவர்களான

துரியோதனனும் தமது தம்பிமார்களும் அழிக்கப்பட்ட மாதம் என்பதால் சுப கருமங்கள் செய்வதில்லை.

மாசி மாதம் - தேவர்களும், அசுரர்களும், பாற்கடலை மகா மேருமலையை மத்தாகவும் வாசுகி பாம்பினை கயிறாகவும் வைத்து கடையும் போது வலி பொறுக்க முடியாமல் வாசுகி பாம்பானது நஞ்சை கக்க அந்த ஆலகால விசத்தை சிவபெருமான் எடுத்து உலக மக்களின் நன்மைக்காக தானே விழுங்குகின்றார். ஆனால் பார்வதிதேவி கழுத்தை இறுக்கி பிடிக்க நஞ்சு தொண்டையிலே தங்கியது. இதனால் சிவபெருமானுக்கு திருநீல கண்டன் என பெயர் வந்தது. சிவபெருமான் நஞ்சு அருந்தியும் உயிர் பிழைத்ததால் மாசி மாதத்திலும் சுப கருமங்கள் செய்யலாம்.

பங்குனி மாதம் - சிவபெருமான் தியானத்தில் இருக்கும் போது மன்மதன் காம அம்புகளை சிவன் மீது எய்தினான் இதனால் கோபமுற்று நெற்றிக் கண்ணை திறந்து பார்க்க மன்மதன் எரியுண்டான். இதனைக் கண்ட மன்மதனின் மனைவி ரதிதேவி சிவனிடம் வணங்கி தனது கணவனின் தவறை மன்னிக்குமாறும், உயிர் பிச்சை தருமாறும் கேட்க மன்மதன் உயிர் பெறுகின்றான்.

மன்மதன் எரியுண்டு மாண்டு பின்னர் உயிர் பெற்றதால் பங்குனி மாதத்திலும் சுப கருமங்கள் செய்யலாம்.

ஆனி மாதம் - மஹா விஷ்ணுவினுடைய வாமன அவதாரத்தில் மஹாபலிச் சக்கரவர்த்தியிடம் 3 அடி மண் தருமாறு கேட்க அதை எடுத்துக் கொள் என கூற மகாபலி சக்கரவர்த்தியின் தலையில் மூன்றாவது அடியை வைக்க அவன் பூமியின் உள்ளே சென்று விடுகின்றான்.

மகாபலி சக்கரவர்த்தி பூமியில் அடியில் வாமனனின் காலடி பட்டு சென்றதால் ஆனி மாதத்தில் அடியெடுத்து வைக்கக் கூடாது என சாஸ்திரங்கள் கூறுகின்றது. எனினும் பஞ்சாங்களில் வீடு குடி புகுவதற்கான நாள்கள் இடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நவகுண்ட கும்பாபிஷேகம் என்றால் என்ன?


சிவபெருமானுக்கு சொருபம், தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளது. சொருபத்திருமேனி சுயப்பிரகாச திருமேனியாகும். அது உலகத்தை கடந்த வடிவம்.

தடத்த வடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாகும். இந்த உலகமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் எனும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனால் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்க வேண்டும் என சிவகாகமங்கள் கூறுகின்றது.


நிலம் என்பது பிருதுவி
யாக சாலையில் கிழக்கு திசையில் நாற்கோண வடிவில், சதுர வடிவில் குண்டம் அமைக்கப்படும்.




நீர் என்பது அப்பு
யாகசாலையில் தெற்கு திசையில் பாதிச்சந்திரனான பிறை வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



நெருப்பு என்பது தேயு
யாகசாலையில் தென் மேற்கு திசையில் முக்கோண வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



வாயு
யாகசாலையில் வட மேற்கு திசையில் அறுகோண வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



ஆகாயம்
யாகசாலையில் மேற்கு திசையில் வட்ட வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



சூரியன்
யாகசாலையில் வடக்கு திசையில் தாமரைப் பூ வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



சந்திரன்
யாகசாலையில் வட கிழக்கு திசையில் எண்கோண வடிவில் குண்டம் அமைக்கப்படும்.



இயமானன்



யாகசாலையில் தென்கிழக்கு திசையில் அரசிலை வடிவில் குண்டம் அமைக்கப்படும்.

பிரதான குண்டம்

யாகசாலையில் வடகிழக்கு திசையிலுள்ள குண்டத்திற்கும் கிழக்கு திசையில் உள்ள குண்டத்திற்கும் நடுவில் வட்ட வடிவமாகவோ அல்லது பிரதான மூர்த்திக்கு ஏற்ற குண்டம் அமைக்கப்படும். இறைவன் சுயப்பிரகாச மூர்த்தியாக பிரதான குண்டத்தில் அமர்ந்து மேலே எட்டு வடிவங்களும் உலகத்தில் கலந்து இருக்கின்றான் அவரை இந்த 8 வகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படி எனில் நமது அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்வதே நவகுண்ட கும்பாபிஷேகமாகும்.

மேலும் ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் இறுதியாக உடைய பஞ்சப் பிரம மந்திரங்கள் மூலமந்திரம், சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, தன்வயத்தலாகும் தன்மை, பேறறிவுடைமை, பேர் அருளுடைமை, அளவிலாற்றல் உடைமை, தூய உடம்பினனாதல் முதலிய எண் குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும் மேலும் பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொருபமான இறைவனை வைத்து வணங்கும் இடம் நவகுண்ட யாகசாலையாகும். இந்த வகையான கும்பாபிஷேகமே எமது ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

**கண்ணகியம்மனுக்கு காவல் தெய்வங்களில்..**

| | |
|---|---|
| விறும் வைரவர் : | நரசிம்ம அவதாரம், அசைக்க முடியாத பலசாலி அம்மனை காவல் செய்பவர். |
| ஆதி வைரவர் : | சிவனின் மூர்த்தங்களில் ஒன்றாகும். சாந்த வடிவானவர் கோயிலை காவல் செய்பவர். |

# எருவில் எனும் பதி

தொகுப்பு : திரு. சா. பரமானந்தம் (அதிபர்)
திரு. நவ. கனகரெத்தினம் (அதிபர், அறநெறிப்பாடசாலை)
திரு. இ. ஜீவராஜ் (ஆசிரியர்)

"சிவபூமி" என திருமூலரால் அழைக்கப்பட்ட சிறப்பிற்குரிய ஈழத்திருநாட்டின் மட்டக்களப்புக்கு தெற்கே "மண்முனை தென் எருவில்பற்று" பிரதேச செயலகப் பிரிவில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் நற்பதி எருவில் ஆகும். ஊரின் கண் ஆலயங்கள் பல இருந்து அருளாட்சி வழங்குவதும் அறநெறிகள் தழைத்தோங்குவதும் தமிழர் பண்பாட்டு மரபுகள், கிராமியக் கலைகள் சிறப்புற்று விளங்குவதும் எருவில் ஊரின் சிறப்பாகும். வாவிகளும், வாவிகளில் பூத்துக் குலுங்கும் தாமரை, அல்லி மலர்களின் அழகும் குதித்தோடி விளையாடும் மீனினங்களும் வாவிகளைச் சூழ்ந்திருக்கும் குளிர்ச்சிமிகு மருத மரங்களும் வாவிகளால் ஊட்டம் பெறும் வயல் நிலங்களின் நெற்பயிர்களின் பசுமையும் எருவில் கிராமத்தை பசுமை பொருந்திய விவசாய கிராமமாக அடையாளப்படுத்தியது. இதனால் எம் முன்னோர் எருவில் கிராமத்திற்கு இட்ட பெயர் "ஏரூர்" என்பதாகும். புவியியல் ஆய்வு அடிப்படையில் வில் வடிவில் விளங்கியதால் "எருவில்" எனப் பெயர் பெற்றது. (மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய வரலாறு அடிச்சுவடுகள், பக்கம் 150)

**நிருவாகப் பிரிவுகளில் எருவிலின் தனித்துவமும் :**

தற்போதைய எருவில் கிராமமானது வடக்கே பட்டிருப்பு கிராமத்தையும் தெற்கே மகிளூர் கிராமத்தையும் குருமண்வெளி கிராமத்தையும் கிழக்கே மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியினையும் மேற்கு மட்டக்களப்பு வாவியையும் எல்லையாகக் கொண்டது. ஆரம்பத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவாக (115) காணப்பட்டதுடன் எருவில் கிராமத்தைச் சேர்ந்த அமரர்களான சி.அழகிப்போடி, சி.மாணிக்கப்போடி, கு.சாமித்தம்பி (V.H) போன்ற பொலிஸ் தலைமைகளின் கீழ் நிருவகிக்கப்பட்டது. தற்போது எருவில் கிராமம் 3 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி 1834 குடும்பங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. எருவில் வடக்கு 523 குடும்பங்களையும் எருவில் தெற்கு 600 குடும்பங்களையும் எருவில் கிழக்கு 711 குடும்பங்களையும் கொண்டு விளங்குகின்றது. அத்துடன் 04 கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் கொண்டு காணப்படுகின்றது. அவை எருவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், எருவில்

தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், எருவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், கோடைமேடு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பனவாகும். எருவில் கிராம மக்கள் ஒற்றுமையாகவும், பரஸ்பர புரிந்துணர்வுடனும் சமூக, சமய, கலாசார விடயங்களில் தமது பங்களிப்புக்களை வழங்கிவருகின்றமை மனங்கொள்ளத்தக்கதாகும். இதற்கு முன்னோர்களது கட்டுக்கோப்பான வழிகாட்டல்களே காரணம் எனலாம்.

பண்டைய எருவில் கிராமம் முற்றுக வன்னிமை ஆட்சி நடைபெற்ற இடமாக விளங்கியது. மட்டக்களப்பை ஆட்சிசெய்த வன்னியர்கள் அனைத்து சமூகங்களையும் அரவனைத்து தமது ஆட்சி நிருவாகத்தை முன்னெடுத்துச் சென்றனர். பின்னர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆட்சிசெய்த ஒல்லாந்தர் கி.பி 1766 இல் மட்டக்களப்பை இரு பாகமாகப் பிரித்து மட்டக்களப்பின் வடக்கு பாகத்திற்கு அறுமக்குட்டி போடி (காலிங்கா குடி) என்பவரையும் தெற்கு பாகத்திற்கு கந்தப்போடி (பணிக்கனார் குடி) என்பவரையும் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தலைமைப் போடிகளாக நியமித்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது (பக்கம் 75). இவ்வாறு நியமிக்கப்பட்ட அறுமக்குட்டி போடியின் மட்டக்களப்பு வடக்கு பாகத்திற்குரிய நிருவாகப் பிரிவுகளின் மையங்களாக எருவில், போரமுனை (போரதீவு), மண்முனை, கோரளை என்பன விளங்கின. இதில் “எருவில்” நிருவாக மையமாக சிறப்புற்றமையினை காணலாம். இவ்வாறு நியமிக்கப்பட்ட அறுமக்குட்டி போடி கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனை சந்திக்கச்சென்ற போது மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதனையும் குறிப்பிடலாம். மட்டக்களப்பில் தெற்கு பாகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட கந்தப்போடியின் நிருவாக மையங்களாக சம்மாந்துறை, கரவாகு, பாணகை, உன்னரசுகிரி ஆகியவை விளங்கின.

மேலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் எருவில் முக்கிய இடத்தினைப் பெற்றது எனலாம். நிலமை சின்னத்தம்பி போடி எருவில் பகுதியினை நிருவகித்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம், பக்கம் 115) அத்துடன் கி.பி 1833 இல் ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்ட கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின்படி ஏற்படுத்தப்பட்ட மாகாண ரீதியான நிருவாகப் பிரிப்புக்கு அமைய மட்டக்களப்பு 13 உப நிருவாக பிரிவுகளாக (பற்று) பிரிக்கப்பட்டபோது “எருவில்பற்று” என்பதும் அவ் 13 நிருவாகப் பிரிவுகளுள் ஒன்றாக விளங்கியது. இதற்குப் பொறுப்பாக சின்னத்தம்பி போடி வன்னியர் செயற்பட்டார். (மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம், பக்கம் 119). வன்னியனார் மற்றும் உடையார் அமைப்புக்கள் கி.பி 1948 இலங்கை சுதந்திரம் அடையும் வரை செயற்பாட்டில் இருந்துள்ளன. இன்றைய நிலையிலும்

பிரதேச செயலாளர் பிரிவுகள் முன்னைய வன்னிமைப் பிரிவுகளை மையப்படுத்தியே பிரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 1956 இல் இலங்கை முழுவதும் 138 பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டபோது "மண்முனை தென்எருவில் போரதீவுப்பற்று" என நிருவாகப்பிரிவு காணப்பட்டது. பின்னர் 1971 போரதீவுப்பற்று தனியான நிருவாக அலகாக உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் மண்முனை தென் எருவில்பற்று என நிருவாக அலகு விளங்கியது. 1989 இல் பிரதேச செயலாளர் பிரிவுகள் உருவாக்கப்பட்டபோது "மண்முனை தென் எருவில்பற்று" பிரதேச செயலாளர் பிரிவாக பெயரிடப்பட்டு இன்றுவரை நிருவாக அலகாக விளங்குகின்றமையினை காணலாம். எனவே, இதனூடாக நிருவாகப் பிரிவுகளில் எருவில் கிராமத்தின் தனித்துவத்தினை அறிந்துகொள்ளலாம்.

**எருவில் கிராமமும் அரசியல் தலைமைத்துவமும் :**

மட்டக்களப்பின் பண்டைய ஆட்சி முறையில் ஆதிக்கம் மிக்கதாக கருதப்படுவது எருவில் கிராமமாகும். போடி, வன்னியமை, நிலமை, உடையார், பாராளுமன்ற உறுப்பினர்கள் என தொடர்புபட்ட தலைவர்களை வரிசைக் கிரமமாக வழங்கியுள்ளது எனலாம். (மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம், பக்கம் 178). இதனடிப்படையில் வன்னிமையாகவும் நிலமையாகவும் செயற்பட்ட சின்னத்தம்பி போடி எனபவரைக் குறிப்பிடலாம். மேலும் இலங்கைக்கு "பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி" பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் ஜனநாயக ரீதியான அரசியலிலும் எருவில் தமது பங்களிப்பை வழங்கியது எனலாம் (1947 - 1977). 1947 1வது பாராளுமன்றத் தேர்தலில் (குருவி) சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிட்டு பட்டிருப்பு தொகுதியின் முதல் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்றார் சோமசுந்தரம் உடையார் எதிர்மன்னசிங்கம் அவர்கள். 1947 - 1965 வரையான காலப்பகுதியில் ஜனநாயக அரசியலில் தனது பணியினை மேற்கொண்ட இவர் இருமுறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை வகித்தார். படுவான்கரையினையும் எழுவான்கரையினையும் இணைத்து பட்டிருப்பு பாலத்தை அமைத்த பெருமை இவரைச் சாரும். ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலயத்தில் எருவில் கிராமம் சார்பாக நடக்கும் பூசைக்கும் இவரே பங்களிப்பு செய்தார். இதன் பின்னர் 1970 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் பட்டிருப்பு தொகுதி சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றார் சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்களின் தம்பி சோ. உ. தம்பிராசா. இவர் எருவில் ஊரின் 2வது பாராளுமன்ற உறுப்பினர் எனலாம்.

எருவிலில் அமரர் கா. அ. கந்தப்போடி அவர்கள் மண்முனை தென்எருவில் கிராமசபை உறுப்பினராக செயற்பட்டுள்ளார். இதனால் எருவில் கிராமத்தில் இதுவரை அங்கத்தவர் என அழைக்கப்படும் வழக்கம் உண்டு. மேலும் திரு. க. விநாயகமூர்த்தி அவர்கள் மாகாணசபை உறுப்பினராக பதவி வகுத்துள்ளார் (வடகிழக்கு மாகாணம்). மேலும் எருவில் கிராமத்தைச் சேர்ந்த கந்தையா அவர்கள் தவிசாளராக பதவி வகித்துள்ளார் (போரதீவுப்பற்று பிரதேச சபை). மேலும் ம.இரத்தினசிங்கம் அவர்கள் பிரதேச சபை உறுப்பினராக பதவி வகித்துள்ளார் (போரதீவுப்பற்று பிரதேச சபை). அத்துடன் எருவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. தி. சத்தியசீலன் அவர்கள் தவிசாளராக பதவி வகித்துள்ளார் (மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை) மற்றும் அமரர். ஐ. புஸ்பநாதன் அவர்கள் உதவி தவிசாளராக பதவி வகித்துள்ளார் (மண்முனை தென் எருவில்பற்று). மேலும் அமரர். இ. சிவப்பிரகாசம் அவர்கள் பிரதேசசபை உறுப்பினராக எருவில் சார்பில் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டார் (மண்முனை தென் எருவில்பற்று). தற்போது 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எருவில் கிராமத்தைச் சேர்ந்த மூவர் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கான உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். திரு.சீ.காண்டீபன் அவர்கள் (புகையிரத நிலைய அதிபர்) போட்டியிட்டு வெற்றிபெற்றதுடன் பட்டியல் சார்பில் இ. வினோதினி அவர்களும் திரு. தி. தேவரஞ்சன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் பணி ஆற்றி வருகின்றனர்.

மேலும், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகம் சார்பில் “இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் 2013ல் போட்டியிட்டு வெற்றிபெற்று இளைஞர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு எருவில் கிராமத்திற்கு பெருமை சேர்த்தார் திரு. இ. வேணுராஜ். இவர் 2013 - 2015 வரை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**எருவில் கிராமத்தின் கல்வி நிறுவனங்கள் :**

ஒரு கிராமத்தின் இரு கண்கள் எனக் கருதப்படுபவை ஒன்று ஆலயம் மற்றொன்று வித்தியாலயம். எருவில் கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் இரு பாடசாலைகளின் பங்களிப்பு அளப்பரியதாகும். அவை மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம், மட்/பட்/ கோடைமேடு நவசக்தி வித்தியாலயம் என்பனவாகும். மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயமானது எருவில் அரசினர் தமிழ் கலவன் ப்பாடசாலை என்ற பெயரில் 1949.06.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு

உறுதுணையாக இருந்தவர் முன்னாள் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர். அமரர். சோ. உ. எதிர்மன்னசிங்கம் ஆவார். இதற்கான நிலத்தினை வழங்கியவர் அமரர். சத்துருக்கப்போடி ஆவார். அமரர். இ. பவளசிங்கம் முதல் அதிபராக விளங்கினார். 217 மாணவர்களைக் கொண்டு காணப்பட்டது. தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான வகுப்புக்களை உள்ளடக்கிக் காணப்பட்டது. அதன் பின்னர் 567 மாணவர்களைக் கொண்டதாக தரம் 08 வரை காணப்பட்டது. அதன் பின்னர் 1989.06.16 ஆம் திகதி பாடசாலை பொறுப்பை ஏற்றுக்கொண்ட திரு. சா. பரமானந்தம் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அயராத முயற்சியால் தரம் 09 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் தரம் 09 வகுப்பை ஆரம்பிப்பதற்கான அனுமதி கோரப்பட்டபோது மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனை காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டது. இருந்தபோதிலும் திரு. சா. பரமானந்தம் அதிபர் அவர்களின் தொடர்ச்சியான அயராத முயற்சியினால் ஒரே தடவையில் தரம் 09 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்தது. இது கண்ணகித் தாயின் அருட்கடாட்சம் என அவர் நினைவு கூருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் க.பொ.த (சா / த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1995 இல் க.பொ.த(உயர்தர) வகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் தேசியமட்டப் பரீட்சைகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பான வெற்றிகளைப் பெற்றனர். இப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்திற்கும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் சென்றனர். பௌதீக வளங்கள் பல்கிப் பெருகின. மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம் என நாமம் சூட்டப்பட்டது. இவரது காலப்பகுதி (1989 - 2004) பாடசாலைக் கல்வி வரலாற்றின் பொற்காலம் ஆகும். இவரைத் தொடர்ந்து இப்பாடசாலையின் அதிபர்களாக கடமையாற்றிய பொ. செல்வராசா, கோ. கையிலாயப்பிள்ளை போன்றவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தனர். தற்போது எருவில் கிராமத்தில் தேசிய பாடசாலைகளை நோக்கிய கல்வி மீதான ஆர்வம் காரணமாக இப்பாடசாலையில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்தாலும் தற்போதைய அதிபர் திரு. சா. பரமானந்தம் அவர்களின் அயராத முயற்சியினால் பாடசாலையின் கல்வி வளர்ச்சி சிறப்பு பெற்று வருவதனை காணலாம். மேலும் மட்/பட்/ கோடைமேடு நவசக்தி வித்தியாலயம் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான வகுப்புக்களை உள்ளடக்கிய ஆரம்பப்பிரிவு பாடசாலையாக விளங்குகின்றது. இப்பாடசாலை 1961 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையும் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

எருவில் கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளி பாடசாலைகளும் (Pre School) குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன. எருவில் விநாயகர் முன்பள்ளி பாடசாலை (எருவில் வடக்கு), எருவில் பாரதி முன்பள்ளி பாடசாலை (எருவில் கிழக்கு), எருவில் திருவள்ளுவர் முன்பள்ளி பாடசாலை (எருவில் தெற்கு), எருவில் கண்ணகி முன்பள்ளி பாடசாலை (எருவில் தெற்கு), கோடைமேடு திருவள்ளுவர் முன்பள்ளி பாடசாலை (எருவில் தெற்கு) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**எருவில் கிராமமும் பொருளாதாரமும் :**

எருவில் கிராம மக்களின் ஆரம்பகால ஜீவனோபாய தொழிலாக விவசாயம் விளங்கியது. தற்போது விவசாயம் தவிர கைத்தொழில்களும் வளர்ச்சி கண்டுள்ளது எனலாம். குறிப்பாக நெசவுக் கைத்தொழில் பரவலாக வளர்ச்சியடைந்துள்ளமையினைக் காணலாம். அத்துடன் இக்கிராமத்தவர்கள் பலர் களுவாஞ்சிக்குடி நகரில் வர்த்தகர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. தேசிய ரீதியாக வர்த்தகதுறையில் ஈடுபடுகின்றனர். விவசாயத்தில் சேற்று நில விவசாயம் (நெற்பயிர்ச் செய்கை) தவிர மேட்டு நில விவசாயத்திலும் எருவில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்திலும் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தரமான வற்றாளை செய்கை பண்ணப்படும் இடமாக எருவில் கிராமத்தின் கோடைமேடு விளங்குகின்றது. அத்துடன் நச்சுத்தன்மையற்ற விவசாய உற்பத்திக்கான விருதினை கோடைமேடு கிராமம் பெற்றுள்ளமை சிறப்பிற்குரியதாகும். அத்துடன் எருவில் கிழக்குப் பகுதியில் தரமான வெற்றிலைச் செய்கை உட்பட விவசாய உற்பத்திகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் எருவில் கிராமத்தில் சிறிய தரத்திலான ஒருங்கிணைந்த பண்ணைகள் தொழில் முயற்சி (Small Level Integrated Farmimg Activity) என்ற அடிப்படையில் தொழில்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவை தவிர எருவில் கிராமத்தில் உள்ளவர்கள் அரச தொழில்களில் ஈடுபடுகின்றமை மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்புரிகின்றமை போன்றவற்றின் மூலமும் வருமானத்தினைப் பெறக்கூடியதைக் காணலாம். அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளிலும் புலம்பெயர் நாடுகளிலும் தொழில் செய்வதன் மூலம் பெறப்படும் அந்நிய செலாவணியும் எருவில் கிராமத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றது எனலாம்.

**எருவில் கிராமமும் ஆன்மீக வளர்ச்சியும் :**

எருவில் கிராமத்தில் 13 ஆலயங்கள் உள்ளன. இவைகள் இந்துக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் அறம் சார்ந்த வாழ்க்கைக்கும் வழிகாட்டுபனவாக உள்ளன. எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், எருவில் சிவன் ஆலயம், எருவில் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், எருவில் செல்லப்பிள்ளையார் ஆலயம், எருவில் கௌரியம்மன் ஆலயம், எருவில் ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலயம், எருவில் ஸ்ரீ புளியடிப்பிள்யைார் ஆலயம், எருவில் அம்பலத்தடிப்பிள்ளையார் ஆலயம், எருவில் கோடைமேடு ஸ்ரீ உச்சிட்ட பிள்ளையார் ஆலயம், எருவில் கோடைமேடு ஸ்ரீ ஆலையடிப்பிள்ளையார் ஆலயம், எருவில் சிவனார்மடுப்பிள்ளையார் ஆலயம், எருவில் ஐயனார் ஆலயம், எருவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் போன்ற ஆலயங்கள் மக்கள் மத்தியில் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்துவதில் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன எனலாம். இவற்றுள் எருவில் கண்ணகி அம்மன் ஆலயம் எருவில் கிராமத்தின் முகாமைத்துவ ஆலயமாக விளங்கி வருகின்றது.

மேலும் எருவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் சார்பாக அறநெறிப் பாடசாலை இயங்குவதுடன் ஞாயிறு தோறும் இப்பாடசாலைக்கு கல்வி பயில எருவில் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் வருகின்றனர். அறம், ஒழுக்கம், சமய கலாசாரம் சார்ந்த கல்வி வளர்வதற்கு இப்பாடசாலை உறுதுணை புரிகின்றது எனலாம்.

**எருவில் கிராமமும் கிராமியக் கலைகளும் :**

பண்டுதொட்டு எருவில் கிராமமானது கிராமியக் கலைகளில் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது. நாட்டுக்கூத்து, கும்மி, கரகம், கோலாட்டம், வசந்தன், கொம்புமுறி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்கலைகளில் குறிப்பிடத்தக்க படைப்புக்களை பலர் வழங்கியுள்ளனர் எனலாம். கலாபூஷணம் வீர. இராசமாணிக்கம் (அண்ணாவியார்) அவர்கள் 35 இற்கு மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களை இயற்றி, மத்தளம் இசைத்து நெறிப்படுத்தியுள்ளார். எருவில் கலிங்கன் (இ. நாகலிங்கம்) அவர்கள் 10 இற்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துக்கலையும் கும்மி, கரகம், கோலாட்டம் போன்றவற்றையும் நெறிப்படுத்தியுள்ளார். மேலும் இவர் கிராமியப் பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். மேலும் ஊஞ்சல் பாடல்களும் எழுதப்பட்டுள்ளது. தேசகீர்த்தி ஐ. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய எருவில் ஸ்ரீ புளியடிப்பிள்ளையார் ஆலய ஊஞ்சல் பாடல் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அமரர். முருகப்பன் பத்தினியன்

அவர்கள் கும்மிப் பாடலில் தேர்ச்சிபெற்றவராக விளங்கினார். இவரால் சிவனார்மடுப்பிள்ளையார் ஆலயம், ஐயனார் ஆலயம், உச்சிட்டபிள்ளையார் ஆலயம் சார்பாக எழுதப்பட்ட கும்மிப் பாடல்கள் இதற்குச் சான்றாகும். அமரர். சிவஸ்ரீ சோமசுந்தரம் குருக்கள் காவியம் பாடலில் சிறப்பு பெற்றவராக விளங்கினார். இவர் எருவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் காவியம் பாடும் முறையை அடுத்த சந்ததியினருக்கு வளர்த்துச் சென்றவர். இவற்றைவிட திரு. மா. பத்தினியன் (மகாலிங்கம்) அவர்கள் மேளதாள வாத்தியத்தில் சிறப்புப் பெற்று விளங்கினார். அதேபோன்று தருமரெத்தினம், புலேந்திரன் போன்றோர்களையும் குறிப்பிடலாம். இவற்றைவிட எருவில் கிராமத்தில் பலர் கிராமியக் கலைகளில் தேர்ச்சிபெற்ற கலைஞர்களாக விளங்கியமையை குறிப்பிடலாம். குறிப்பாக நாட்டுக்கூத்தில் ஒவ்வொரு பாத்திர படைப்புக்கும் பொருத்தமாக கூத்தாடி அவர்கள் பாத்திரப்படைப்பின் சிறப்புப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டமை சிறப்பிக்கத்தக்க விடயமாகும். மேலும் நாடக துறையில் சிறப்புபெற்றவராக எருவில் கலிங்கன் (இ.நாகலிங்கம்) அவர்களை குறிப்பிடலாம். இவர் பல சமூக சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், அரசியல் நாடகங்கள் போன்ற நூற்றிற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியவர். இவரால் எழுதப்பட்ட "காலத்தை வென்றவன்" எனும் நாடகம் இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது எனலாம். அத்துடன் திரு.சி.காண்டீபன் அவர்கள் கலைக்கமல் கலாமன்றம் சார்பாக பல சமூக சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் போன்றவற்றை தயாரித்து மேடையேற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதும் இக்கலைகள் பிரபல்யம் அடைந்துள்ளது எனலாம். இதற்கு எருவில் கிராமத்தில் சிறப்புற்று விளங்கும் கலைக் கழகங்களின் பங்களிப்பு அளப்பரியது எனலாம். அந்த வகையில் எருவில் உதயநிலா கலைக்கழகம் சமூக சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், அரசியல் நாடகங்கள் போன்றவற்றிற்கும் கிராமிய கலைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் அத்துடன் எருவில் இளைஞர் கழகம், எருவில் உதயநிலா கலைக்கழகம், எருவில் கண்ணகி விளையாட்டுகழகம் ஆகியன ஒன்றிணைந்து Y.U.K என்ற பெயரில் சித்திரை குதுாகலம் எனும் நிகழ்வினை ஆண்டுதோறும் நடாத்தி வருவதுடன் அதில் கலை நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எருவில் கலிங்கன், கலாபூஷணம் கோயிலூர் தணிகாவின் பல நாடகங்களை நடித்துள்ளனர். எருவில் கலைக்கமல் கலாமன்றம் எருவில் கிராமத்தில் சமூக சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், அரசியல் நாடகங்கள் போன்றவற்றை வழங்கி மக்கள் மனதில் இடம்பெற்றுள்ளது. மேலும் எருவில் ஐங்கரா கலைக்கழகம் தற்போது நாட்டுக்கூத்து

போன்றவற்றை போட்டிகளுக்காக மேடையேற்றி அவைகளில் வெற்றிபெற்றுள்ளது. மேலும் சமயம் சார்ந்த இறுவெட்டுக்களையும் வெளியிட்டுள்ளது. இவை தவிர எருவில் சிவனார் கலாமன்றம், எருவில் கௌரி கலாமன்றம், எருவில் சுப்பர் ஸ்ரார் கலாமன்றம் போன்றனவும் சமூக சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், அரசியல் நாடகங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளன.எனினும் தற்போது இக்கலைக்கழகங்கள் செயற்பாட்டில் இல்லை எனலாம். மேலும் கொம்புமுறி விளையாட்டு சிறப்பாக நடைபெற்ற ஊராகவும் எருவில் விளங்குகின்றது. இதற்கு உதாரணமாக "கொம்புச்சந்தி" என்ற இடம் எருவில் ஊரில் உள்ளமையினை குறிப்பிடலாம்.

**எருவில் கிராமமும் இலக்கிய வளர்ச்சியும் :**

எருவில் கிராமமும் இலக்கிய வளர்ச்சிக்கு தமது பங்களிப்புக்களை வழங்கியுள்ளது எனலாம். எருவில் கிராமத்தைச் சேர்ந்த அமரர். எருவில்மூர்த்தி (நாகப்பன் ஏரம்பமூர்த்தி) அவர்கள் பிரபலமான ஈழத்து கவிஞராக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் நூற்றிற்கு மேற்பட்ட கவிதைகளையும் ஐந்நூற்றிற்கு மேற்பட்ட வானொலி மெல்லிசைப் பாடல்களையும் எழுதியுள்ளார். இவர் இலங்கை வானொலி, ரூபவாஹினி கூட்டுத்தாபன தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் பல ஈழத்து பாடகர்களுக்கும் பாடல்கள் இயற்றியுள்ளார். இவரது பாடல்களுக்கு திரைப்படப் புகழ் இசையமைப்பாளர்களான எம். எஸ். செல்வராஜா, ஆர். முத்துசாமி, எம்.கே. ரொக்சன், யாழ் கண்ணன் - நேசன் போன்றோர் இசையமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1956 ஜீன் 06 இல் மட்டக்களப்பில் தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து நடாத்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போது நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் தனது இரு கண்களையும் இழந்தபோதிலும் இறுதிவரை தமிழ் பற்றுடன் இலக்கியப் பணியாற்றியவர். இவரால் இயற்றப்பட்ட மாமாங்கத் திருத்தலம் பற்றிய பாடலை தென்னிந்திய திரைப்படப் பாடகர் S.P. பாலசுப்பிரமணியம் பாடியமை குறிப்பிடத்தக்கது. இவர் கொழும்பு தமிழ்ச் சங்கம் உருவாவதிலும் உறுதுணையாக நின்று செயற்பட்டவராவார். இவரைத் தொடர்ந்து இவரது சகோதரரான எருவில் கலிங்கன் (இ. நாகலிங்கம்) பிரபலமான கவிஞராக விளங்கி வருகின்றார். இவர் பலதரப்பட்ட எண்ணிலடங்காத கவிதைகளை எழுதி அனைவரது மனங்களிலும் இடம்பெற்றவர். மேலும் திரு. ஐ. சுப்பிரமணியம் அவர்களும் திரு.வல்லிபுரம் அவர்களும் அமரர். எ. நடேசமூர்த்தி அவர்களும் கவிதைத் துறையில் தனது திறமைகளை வெளிப்படுத்தியவராவார். தற்போதைய இளைய தலைமுறைக் கவிஞர்களாக கவிஞர். ஆழிவேந்தன் (A.ரமேஸ் ஆசிரியர்), கவிஞர். நவ. கனகரெத்தினம் (அறநெறிப்பாடசாலை

அதிபர்) கவிஞர் எருவில் மாணிக்க.ஜெயந்தன், திரு. மா. புருசோத்மன் (ஆசிரியர்) போன்றோர்களைக் குறிப்பிடலாம்.

மேலும் தொகுப்பு முயற்சிகளும் இடம்பெற்றுள்ளமையினைக் காணலாம். திரு. ச. ரகுபதி (ஆசிரிய ஆலோசகர்) அவர்களின் "எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் திருச்சடங்கு முறைகள்" வெளியிடப்பட்டது. இவற்றைவிட கும்மி, கோலாட்டம், காவடிச்சிந்து மூலம் கண்ணகியின் சிறப்புக்கள் உள்ளடங்கிய இறுவெட்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் எருவிலூர் உதயநிலா கலைக்கழகத்தினால் "காவிய நாயகியின் காவியங்கள்" முதல் முறையாக நூல் வடிவம் பெற்றது. இதன்பின்னர் எருவில் விருட்சம் சமூக மேம்பாட்டு அமைப்பினால் "கண்ணகி காவியங்கள்" என்ற தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. மேலும் இ. சிறிகிருஸ்ணன் (ஆசிரியர்) அவர்களின் "இயலுள் காப்பியம்" என்ற நூல் சிறப்பிக்கத்தக்கதாகும். மேலும் பொ. சிவகுமார் (ஆசிரியர்) அவர்களின் "பிள்ளையார் கதை" (எருவில் ஸ்ரீசிவனார்மடுப்பிள்ளையார் ஆலயம் சார்பாக) தொகுக்கப்பட்டது. அத்துடன் அதுசார்ந்த இறுவெட்டு வெளியிடப்பட்டமையைக் குறிப்பிடலாம். இவற்றை விட ஊடகவியல் துறையில் எருவில் கிராமம் சார்பாக பங்களிப்பினை வழங்கிவருபவராக ஏரூர் தில்லை (இரா. தில்லைநாயகம் ஆசிரியர்) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் இலங்கையின் அரச பத்திரிகைகள் பலவற்றில் எழுதி வருவதுடன் சர்வதேச ஊடகங்களிலும் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சு. துசியந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்கள் ஊடகத்துறையில் தமது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**எருவில் கிராமமும் தமிழர்தம் சித்த வைத்தியமும் :**

எருவில் தமிழர்தம் சித்த வைத்தியத்திலும் சிறப்பிற்குரியதாக பண்டுதொட்டு விளங்கி வந்தமையினைக் காணலாம். அந்தவகையில் அமரர்களான சீனித்தம்பி (கண்ணகி அம்மன் ஆலய முன்னாள் தலைவர்) மயில்வாகனம், வினாசித்தம்பி, வையாளிப்போடி, நோஞ்சிப்போடி, தம்பிப்பிள்ளை, மாரிமுத்து, கணபதிப்பிள்ளை, கிருஸ்ணப்பிள்ளை (ஏ.மு) வீரசிங்கம், நாகம்மா போன்றவர்கள் சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கினர். மா.கார்த்திகேசு, கி. இராசநாயகம் (புதுக்குடியிருப்பு ஆயுர்வேத வைத்தியசாலை), வீ.மகேஸ்வரி, இ.ஜீவராசா போன்றவர்கள் தற்போது வைத்தியர்களாக விளங்குகின்றனர்.

மேற்கூறப்பட்ட பாரம்பரிய சித்த வைத்தியர்களை தவிர தற்போது பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவக் கற்கையினை நிறைவுசெய்து எருவில் கிராமத்திற்கு பெருமை சேர்த்த வைத்தியராக சு.கோபிதா அவர்களை குறிப்பிடலாம்.

மேலும் இவை தவிர எருவில் கிராமத்தில் பிரசவ வைத்திய வசதிகள் இல்லாத காலத்தில் பல்வேறு சுக பிரசவங்களை ஏற்படுத்தி தாய்சேய் நலன் பேணிய இரு பெருமைக்குரிய மருத்துவிச்சிகளாக திருமதி. மா. பார்வதி மற்றும் திருமதி. மா. வெள்ளச்சி போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

**எருவில் கிராமமும் சோதிடக் கலையும் :**

எருவில் கிராமம் சோதிடக் கலையிலும் சிறப்புப் பெற்றது எனலாம். அமரர். பரமக்குட்டி சாஸ்திரியார் மற்றும் அமரர். மார்க்கண்டு சாஸ்திரியார் ஆகியோர் எருவில் கிராமத்தின் புகழ்பெற்ற சோதிடர்களாக விளங்கினர். தற்போது பிரபல்யமான சோதிடராக வீ. இராமக்குட்டி அவர்கள் திகழ்கின்றார். மேலும் எருவில் கிராமத்தைச் சேர்ந்த சாதகர்திலகம் பத்மபூஷணம் சோதிட நன்மணி சிவஸ்ரீ க. வடிவேல் குருக்கள் அவர்களும் சோதிடக் கலையில் சிறப்புப்பெற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**எருவில் கிராமமும் வட்டை விதானை மற்றும் தோம்புதோர் பதவியும் :**

எருவில் கிராமம் விவசாய கிராமமாக விளங்கியமையால் வட்டை விதானை பதவிகளை பலர் வகித்துள்ளனர். அந்தவகையில் அமரர்களான தம்பையா, சீனித்தம்பி, வினாசித்தம்பி, தில்லையம்பலம் கதிரமலை, முருகுப்பிள்ளை, குணரெத்தினம் போன்றோர் வட்டை விதாணை பதவிகளை வகித்துள்ளனர். தற்போது திரு.பாக்கியராசா அவர்கள் வட்டை விதாணையாக பதவி வகிக்கின்றார்.

எருவில் கிராமத்தில் பதவி வகித்த தோம்புதோர்களான அமரர்கள் மாணிக்கப்போடி, பா.தோ. வசந்தராசா, ப.சிவசுப்பிரமணியம் போன்றவர்களை குறிப்பிடலாம்.

**எருவில் கிராமத்திலுள்ள குருமார்கள் :**

எமது கிராமத்திலுள்ள குருமார்கள் ஆலய கிரியைகளை மேற்கொள்வதோடு மாரியம்மன், பேச்சியம்மன் சடங்கு, வைரவர் மடை போன்ற செயற்பாடுகளில்

ஈடுபடுவதோடு மக்களுக்கு நன்மை பயற்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். குறிப்பாக நூல் போடுதல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், பேய் பிசாசுகளை விலக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பரம்பரை பரம்பரையாக பல குடும்பங்களிலிருந்து பல குருமார்கள் உருவாகியுள்ளதைக் குறிப்பிடலாம். ஆரம்ப கால குருமார்களாக குளத்து வேலாப்போடியார், வைகாளிப்போடியார், கதிர்காமப்போடியார், வினாசித்தம்பி, மாரிமுத்து, நோஞ்சிப்போடி, ஆறுமுகம் ஐயர், சாமித்தம்பி, தம்பிப்பிள்ளை, அரசரெத்தினம், சோமசுந்தரம் அவர்களுடன் கார்த்திகேசு, பேரானந்தம் அவர்களுடன் சிவாச்சாரியார்களாக எமது கிராமத்தில் பலர் உள்ளனர். சிவாச்சாரியார் சிவஸ்ரீ இரா. கோபாலசிங்கம், சிவாச்சாரியார் சிவஸ்ரீ இரா. அருளானந்தம், சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. கிருபாகரன் சிவாச்சாரியார் சிவஸ்ரீ கோ.கிரிதரன் சிவாச்சாரியார் சிவஸ்ரீ பாலசிவரமணன், சிவாச்சாரியார் சிவஸ்ரீ தி. வரதீஸ்வரன், சிவாச்சாரியார் சிவஸ்ரீ கருணாகரன், சிவாச்சாரியார் சிவஸ்ரீ ந. புவீஸ்கரன் ஆகியோர் சிவாச்சாரியார் குருபட்டம் பெற்றவர்களாவர்.

மேலும் அர்ச்சகர்களாக பலர் பணிபுரிகின்றனர். கோபால் பத்தினியன், சிவஸ்ரீ சா. தாமோதரம்பிள்ளை, சிவஸ்ரீ சோ. விஜயசுந்தரம், சிவஸ்ரீ க. வடிவேல், சிவஸ்ரீ க. மோகன்ராஜ், சிவஸ்ரீ வீ. தெய்வநாயகம், சிவஸ்ரீ வீத. பஞ்சாட்சரம், சிவஸ்ரீ வி. தட்சணாமூர்த்தி, சிவஸ்ரீ கோபாலசிங்கம் சிவஸ்ரீ இ. தவசீலன், சிவஸ்ரீ இ. ஜெயசீலன், சிவஸ்ரீ இ. குணசீலன், சிவஸ்ரீ இ. ஜயசீலன், சிவஸ்ரீ கு. சேந்தன், சிவஸ்ரீ தா. கிரிஜன், சிவஸ்ரீ க. சிந்துகரன், சிவஸ்ரீ க. சதீஸ்கரன், சிவஸ்ரீ க. டுனேஸ்காந்த் அத்துடன் சி. தியாகராஜா ஐயர் மற்றும் அ. புவிகரன் ஐயர் போன்றவர்களையும் குறிப்பிடலாம்.

**எருவில் கிராமமும் அரச தொழிலும் :**

எருவில் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அரச தொழில்களில் பணியாற்றுகின்றமையைக் காணலாம். க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) கலை, வர்த்தக, கணித விஞ்ஞானப் பிரிவுகளில் சித்தியடைந்தவர்களும் இதனுள்

அடங்குவர். மேலும் பல்கலைக்கழகங்களில் கலை, வர்த்தக, விஞ்ஞான, தொழிநுட்பத் துறைகளில் உயர் கல்வியைப் பெற்று பட்டதாரிகளாக வெளியேறி அரச தொழில் வாய்ப்புக்களைப் பெற்று எருவில் கிராமத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எருவில் கிராமத்தில் அரச உயர் பதவிகளை பலர் அலங்கரித்துள்ளார்கள். பொறியியலாளர்களாகவும், இலங்கை கல்வி நிருவாக சேவையில் சித்தியடைந்து சேவையாற்றியவர்களாகவும் பலர் சட்டத்தரணிகளாகவும் சேவையாற்றுகின்றனர். அத்தோடு இலங்கை அதிபர் சேவையில் சித்தி பெற்று பலர் பாடசாலை அதிபர்களாக பணிபுரிகின்றனர். மேலும் காணி உத்தியோகத்தர்களாக கிராமசேவை உத்தியோகத்தர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக, புகையிரத நிலைய அதிபராக, சமூர்த்தி உத்தியோகத்தர்களாக, சமூர்த்தி முகாமையாளர்களாக, ஆசிரியர்களாக, வங்கி முகாமையாளர்களாக, வங்கி சேவையாளர்களாக என பற்பல அரச உத்தியோகத்தர்களாக உள்ளனர். அத்தோடு அரச சார்பற்ற திணைக்களங்களில், நிறுவனங்களில் உயர் பதவிகளிலும் ஏனைய பதவிகளிலும் கடமை புரிகின்றனர். அத்தோடு சமாதான நீதவான்களாக 25க்கு மேற்பட்டோர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தேச கீர்த்தி க. பேரின்பநாயகம் J. P அவர்கள் முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் தேசகீர்த்தி கி. வேதாரணியம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் சபை பணிப்பாளராக செயற்பட்டு வருகின்றமை சிறப்பிற்குரியதாகும். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய சம்மேளனத்தின் தலைவராக அமரர் மு. இளங்குமார் சேவை புரிந்தார்.

**கலைகள் சார்பாக தேசிய மட்டத்தில் எருவிலின் சாதனைகள் :**

1992 அம் ஆண்டு இளைஞர் பரிசளிப்பு ஜனாதிபதி விருதிற்கான நாடகப் போட்டியில் எருவில் கலிங்கன் எழுதிய "திருந்திய உள்ளங்கள்" எனும் நாடகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை தட்டிச் சென்றது. சிறந்த நடிகர், சிறந்த துணை

நடிகர், சிறந்த தயாரிப்பு, சிறந்த உடையலங்காரம் போன்ற நான்கு விருதுகளையும் ரூபா. 50,000.00 பரிசினையும் வென்றது. இந்நாடகத்தில் திரு. எஸ். மனோகரன், திரு. எஸ். ரகுபதி, திரு. எஸ். சிவம், திரு. வி. சத்தியசீலன் ஆகியோர் நடித்து பெருமை சேர்த்தனர்.

2001 இல் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடாத்திய விருது விழாவில் எருவில் கலிங்கன் அவரின் கைவண்ணத்திலும், கலாபூஷணம் வீர. இராசமாணிக்கம் (அண்ணாவியார்) அவர்களின் நெறியாட்கையிலும் உருவான கர்ணன் வதை எனும் நாட்டுக்கூத்து அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

2003 இல் இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடாத்திய விருது வழங்கல் விழாவில் கலாபூஷணம் வீர. இராசமாணிக்கம் அவர்களின் கைவண்ணத்திலும் நெறியாட்கையிலும் உருவான சிசுபாலன் வதை அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றுச்சென்றது. அத்துடன் விராதன் வதை மற்றும் இந்துதர்ம விழிப்பு போன்ற நாட்டுக்கூத்துகளும் முதலாம் இடத்தை தேசிய ரீதியில் பெற்றது.

மேலும் எருவில் கிராமத்தைச் சேர்ந்த தி. ஜாதவரூபன் அவர்கள் கடந்த 2014 ஆம் ஆண்டு உயர் கல்வி அமைச்சும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடாத்திய பல்கலைக்கழகங்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் சிறந்த அறிவிப்பாளராகவும் சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் வெற்றி பெற்று தேசிய தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் உதவி நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் 2015 - 2017 வரை பணியாற்றினார். இதன்போது 50 இற்கு மேற்பட்ட தொலைக்காட்சி நேரடி நிகழ்ச்சிகளை தொகுப்பாளராக நடாத்தியுள்ளார். வணக்கம் நேத்திரா, உதய தரிசனம், மதிய நேர இசைவிருந்து, பிரவாகம் போன்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம் தற்போதும் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்கள் ஊடாக எருவில் கிராமமானது பண்டுதொட்டு சிறப்புப் பெற்ற கிராமம் என்பதுடன் இக்கிராமமானது அரசியல், சமய, கல்வி, கலாசார பாரம்பரிய ரீதியாக பல தனித்துவமான சிறப்புக்களைக் கொண்ட கிராமமாக விளங்குகின்றது எனலாம்.

**குறிப்பு**

நாம் தேடி அறிந்தவரையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இத்தொகுப்பு வெளியிடப்படுகின்றது. இதற்கான கருத்துரைகளை ஏற்று அடுத்த பதிப்பு "எருவில் ஊர்" என்ற பெயரில் தனிநூலாக வெளிவரும் என்பதை பதிவிடுகின்றோம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 75 F.X.C நடராசா)
2. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் (பக்கம் 115, 119 கவிக்கோ வெல்லவூர் கோபால்)
3. மலையாள நாடும் மட்டக்களப்பும் (பக்கம் 62 கவிக்கோ வெல்லவூர் கோபால்)
4. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு (பக்கம் 95, 102 கலாபூஷணம் ஆய்வாளர் நவநாயகமூர்த்தி)
5. மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் (பக்கம் 150 க. தா. செல்வராசகோபால்)
6. எருவில் ஸ்ரீகண்ணகி அம்மன் திருச்சடங்கு முறைகள் (பக்கம் 53 எஸ். ரகுபதி)
7. ஏர் (மட்/எருவில் கண்ணகி மகா வித்தியாலய பரிசளிப்பு விழா சிறப்பு மலர் 2014)


**நன்றி :** உசாத்துணை நூல்கள் பலவற்றை பெறுவதற்கு உதவிய திரு.ஆ.நீர்மோகன் (ஓய்வுபெற்ற பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், தகவல் தொழில்நுட்ப பிரிவு, கிழக்கு பல்கலைக்கழகம்)

# எருவிலின் சாகித்தியங்களும் மரபுகளும்

இ. ஜீவராஜ் (ஆசிரியர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் புறத்தே மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவில் சிறந்து விளங்கும் கிராமம் எருவில். இயற்கை சூழலுடன் ரம்மியமாக காட்சி தரும் இக் கிராமம் பல்வேறு வாவிகளை உள்ளடக்கிய விவசாய கிராமமாக விளங்கியமையால் எமது முன்னோர்களால் "ஏரூர்" என்ற சிறப்பு நாமத்தையும் பெற்றது. சைவமும் தமிழும் தமிழர் பண்பாட்டுக் கலைகளும் ஒருங்கே வளர்க்கப்பட்ட பண்டைய எருவில் கிராமமானது ஐரோப்பியர் ஆதிக்கத்திலும் தமது சமய, கலாசார தனித்துவத்தினை பேணி நின்றது. மட்டக்களப்பின் பண்டைய ஆட்சி முறையில் ஆதிக்கம் மிக்கதாகவும் எருவில் கிராமம் விளங்கியது. வன்னிமை, நிலமை, உடையார், போடி எனத் தொடர்புபட்ட பல்வேறு தலைமைகளையும் இக்கிராமம் தந்திருக்கின்றமை இக்கிராமத்தின் சிறப்பியல்புகளை எடுத்தியம்பி நிற்கின்றது எனலாம். (மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் பக்கம் 178)

**எருவிலின் குடிமரபுகள்**

பண்டைய மட்டக்களப்பு பிரதேசம் கிழக்குப் பகுதியில் வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே கதிர்காமத்து மாணிக்க கங்கை பிரதேசம் வரை வியாபித்திருந்தது. மட்டக்களப்பில் முதலில் குடியேறி அரசியலாதிக்கம் பெற்ற குலத்தினராக முற்குகர் விளங்கினர். இவர்களது வருகை கி.மு 261 எனக் குறிப்பிடப்படுகின்றது. (மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் பக்கம் 48) மட்டக்களப்பு திருநாட்டின் பல பகுதிகளிலும் வன்னிய அரசர்களாக ஆட்சி செலுத்திய இவர்கள் நிலபுலன்களுக்கெல்லாம் சொந்தக் காரர்களாக விளங்கினர். இவர்கள் பண்டு தொட்டு செலுத்திய அரசியலாதிக்கம் காரணமாக மட்டக்களப்பு தேசம் "முற்குகர் தேசம்" என அழைக்கப்பட்டது. (முற்குகர் வரலாறும் மரபுகளும் பக்கம் 12) இவர்கள் மட்டக்களப்பு தேசத்துக்கென உருவாக்கிக் கொண்ட சட்டமே "முற்குகர் சட்டம்" என அழைக்கப்பட்டது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் நோக்கும்போது எருவில் கிராமமும் முற்குகர் குல வழித்தோன்றல் வாழ்கின்ற கிராமமாக விளங்கியது இக்கிராமத்தில் குடிமரபுகளுக்கும் எருவில் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவ் ஆலயத்தின் பூசை மரபுகள் குடி வழிமுறைகள் சார்ந்ததாகவே விளங்குகின்றது. பொலன்னறுவையினை ஆட்சி செய்த தமிழ் மன்னனான கலிங்க

மாகோன் ஓர் வீர சைவனாக விளங்கினான். இவன் மட்டக்களப்பு சமூகங்களை வரையறை செய்ததோடு அவற்றிற்கான சமூக கடமைகளையும் நிரல்படுத்தினான். ஆலய நடைமுறைகளை முக்கியப்படுத்தி பிரதேச இணைப்பின் ஊடாக சமூகங்கள் தங்கள் பங்களிப்பினை வழங்குதல் மூலம் சமூக ஒற்றுமையை நிலைநாட்டி சைவசமய வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்கினான். இதற்காக பல்வேறு குடி வழிமுறைகளை வகுத்து அரனூழியம் வகுத்தான் என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது.

மாகோன் முற்குகர்களிடையே ஏழு குடிகளை வகுத்ததாக சொல்லப்பட்டாலும் பிற்காலத்தில் அவை மென்மேலும் விரிவுபட்டுள்ளமை தெரிகின்றது. வயிற்றுவாராகவும் ஊர்ப் பிரிவுகளாகவும் இக்குடிகள் கிளைவிட்டுள்ளன. இந்தவகையில் காலிங்காகுடி, உலகநாச்சிகுடி உலகிப்போடிகுடி, படையாண்டகுடி, பணிக்கனார்குடி, பெத்தான்குடி, கோப்பிகுடி, சஸ்டிகுடி, கச்சிலார் குடி, குண்டன் குடி போன்ற முற்குக குடிகளும் வேளாளர்குடி, பத்தினாச்சி குடி, மருத்துவிச்சிக்குடி போன்ற குடிகளும் எருவில் கண்ணகி அம்மன் ஆலய சடங்குடன் தொடர்புபட்ட குடி வழிகளாக எருவிலில் விளங்குகின்றது.

எருவில் கண்ணகி அம்மன் ஆலய சடங்கு பூசை ஒழுங்குமுறைப்படி பின்வரும் குடிகளை குறிப்பிடலாம்.

1) எருவில் பணிக்கனார் குடி
2) எருவில் பெத்தர்ன்குடி
3) கரவாகு பணிக்கனார் குடி
4) களுதாவளை பெத்தான் குடி
5) கச்சிலார் குடி
6) வேளாளர் குடி
7) பத்தினாச்சி குடி
8) மருத்துவிச்சிக் குடி
9) சஸ்டிகுடி
10) குண்டன் குடி
11) கோப்பி குடி
12) படையாண்ட குடி
13) உலகிப்போடி குடி
14) மண்முனை பெத்தான் குடி
15) காலிங்கா குடி

இக்குடிகள் தங்களிடையே ஒன்றுபட்டு செயற்படுகின்றமை எருவில் கண்ணகி அம்மன் ஆலய திருச்சடங்கின் சிறப்பிற்கு காரணம் எனலாம்.

**சீர்வரிசைகள்**

சீர்வரிசைகள் எனும் போது ஒரு குடியினர் தமது வாழ்க்கையில் நிகழும் பிறப்பு, இறப்பு, திருமணம், பூப்பு நீராட்டு, காது குத்துதல் ஆகிய நிகழ்வுகளில் சமூக ரீதியில் பெறும் அல்லது அனுபவிக்கும் மதிப்பு மரியாதை நெறிகளைக் குறிக்கும். இந்த சீர்வரிசைகள் பதினெட்டு வகைப்படும். அவைகள்.

| | |
|---|---|
| 1. கும்பங்கள் | 2. பாவாடை விரிப்பு |
| 3. தென்னம் பாளை | 4. மேற்கட்டி |
| 5. தாரை, தவில், குழல், வீணை | 6. பந்தல் |
| 7. நிறைகுடம் | 8. பஞ்ச கஞ்ச மலர் தூவல் |
| 9. பாவாணர் பாடல் | 10. பல தீப கிரணம் |
| 11. 13 கொய்தகப்பட்டு கூரைமுடி | 12. நவதானியக் கொட்டல் |
| 13. பதினெட்டு வரிசை எழுதுதல் | 14. 18 சிறைகளின் தொண்டு |
| 15. வெண்குடை | 16. புகழ்ந்து பாடல் |
| 17. தக்க கொடை அளித்தல் | 18. முகமன் கூறுதல் |

**நன்மைக்கு தீமைக்கும் கூரை முடி வைத்தல்**

எருவில் கிராமத்தில் காணப்படும் இன்னொரு சம்பிரதாயமாக கூரை முடி வைத்தல் காணப்படுகின்றது. கும்பங்களை வைத்து வீட்டுக் கூரையில் அலங்கரிக்கும் முறையே கூரை முடி வைத்தல் ஆகும். வீட்டின் முன்பாக கூரைக்கு ஓரமாக கம்புகள் நாட்டி குறுக்காக சட்டங்கள் போட்டு இவற்றில் கும்பங்கள் வைக்கப்படும். கூரையின் மேல் மட்டத்தில் வைக்கப்படும் ஒரு கும்பம் சூரியனை குறிப்பதாகவும் மற்றும்அதன் கீழ்வரும் மூன்று கும்பங்களும் பிரம்மா, விஸ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளை குறிப்பதாகவும் இருக்கும். கூரைமுடி கும்பங்கள் மேலிருந்து ஏறுமுக வரிசையாக வைக்கப்படுவது மரபாகும்.

குடிபிரிவுகளை பொறுத்தே கும்பங்களின் எண்ணிக்கை அமையும். சாதி தெய்வக் கல்வெட்டில் “சீர்பெற்றிலங்கு வயல் வாழீநகர் மேவுதென்னவன்....” எனத் தொடங்கும் பாடல் கும்பவரிசை பற்றி சிறப்பாக குறிப்பிடுகின்றதெனலாம். இதில் குறிப்பிடப்படும்


பல நடைமுறைகள் இல்லாது ஒழிந்து போனாலும் கூரைமுடி வைக்கும் செயற்பாடு எருவில் கிராமத்தில் நடைமுறையில் உள்ளது. இங்கு குடிப்பிரிவுகளை பொறுத்தே கும்பங்களின் எண்ணிக்கையும் அமையும். காலிங்கா குடியினருக்கு *13* கூரைமுடியும் உலகிப்போடி குடியினருக்கு *11* கூரை முடியும், படையாண்ட குடிக்கு *9* கூரைமுடியும், பணிக்கனார் குடிக்கு *9* கூரைமுடியும், வேளாளர் குலத்தாருக்கு *7* கூரைமுடியும் ஏனைய குடியினருக்கு மூன்று கூரை முடியும் அமையும். (முற்குகர் வரலாறும் மரபுகளும் பக்கம் *138*), (மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அரிச்சுவடிகள் பக்கம் *113*)


**விவசாயம் சார்ந்த வாழ்க்கையும் குல விருதுகளும் (சுருக்கமாக)**

எருவில் விவசாயம் சார்ந்த கிராமமாகவும் போடிமார்கள் வாழ்ந்த கிராமமாகவும் விளங்கியமையால் விவசாயத்தில் போடிமாரால் பல நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. படிகொடுத்தல், வாடி கட்டுதல், இடாப்பு வைத்தல், நாளுக்கு நெல் கொத்துதல், பயிருக்கு தண்ணீர் கட்டுதல், முடிப்பு கட்டுதல், புதிரெடுத்தல், வேளாண்மை வெட்டுதல், சூடுவைத்தல், அரக்குத்தாக்குதல், களத்தில் பேரேற்றல், பட்டறையில் நெல் கட்டல் போன்றவை சம்பிரதாய முறைப்படி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாக மாடுகள் வளர்க்கப்பட்டன. மாடுகளுக்கு குறிசுடும் போது தம்குல விருதுகளை அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். மாடுகளில் காணப்படும் குறியில் இருந்து ஒரு மாடு எக்குடியாருக்கு சொந்தமானது என்பதை அறிந்து கொண்டனர். இவ்வாறு மாடுகளுக்கு குறிசுடும் போது பயன்படுத்தப்பட்ட குடி விருதுகள் கீழ்வருமாறு,

**குடி விருதுகள் (மாடுகளுக்கு குறிசுடும் போது பாவிக்கப்படும்.)**


காலிங்காகுடி - செங்கோலும் வாளும்
(தற்போது சீனி புள்ளடியும் ம.வும்)





உலகிப்போடிகுடி - எட்டுக்கால்


படையாட்சி குடி - முடி எழுத்தாணி பட்டிச்சங்கு




பணிக்கனார் குடி - மந்து வளையம்




கச்சிலாகுடி - வட்டச் சக்கரம்



கோப்பி குடி - ஆறுகால்



பெத்தான்குடி - சுளிச்சங்கு, முறி எழுத்தாணி (காக்காக்கால்)



**திருமணம் சம்பந்தமான சம்பிரதாயங்கள் (சுருக்கமாக)**

எருவில் கிராமத்தில் திருமண சம்பிரதாயங்களை நோக்கும் போது பெற்றோர் திருமண வயதை அடைந்த தமது பெண் பிள்ளைக்கு (மகள்) பொருத்தமான மாப்பிள்ளையை தமது உறவுக்குள்ளே பார்த்து மணம் முடித்தும் வைப்பது வழக்கமாகும். அவ்வாறல்லாது வெளியில் இருந்து மாப்பிள்ளை எடுக்கும்போது குடிகள் கருத்திற் கொள்ளப்பட்டது. சகோதர குடிகளுக்குள் திருமண உறவுகளை வைத்துக்கொள்வதை தவிர்த்துக்கொண்டனர். இங்கு திருமண சம்பிரதாயங்களாக கலியாணத்தூது அனுப்புதல், மாப்பிள்ளை கேட்டுப் போதல், மோதிரம் மாற்றுதல், திருமண சுபமுகூர்த்தம் நிச்சயித்தல், தாலிக்குப் பொன் உருக்குதல், திருமணத்துக்கு அறிவித்தல், கூறை தாலிப்பெட்டி, கூரை முடி வைத்தல், திருமணம், கலத்தில் போடுதல், கால்மாறிப் போதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

இன்றும் எருவில் கிராமத்தில் மனங்கொள்ளத்தக்க விடயமாக இருப்பது திருமணத்திற்கு அழைப்பு விடுவிக்கின்ற “வட்டா வைத்தல் முறை” தற்போதும்

நடைமுறையில் இருப்பதாகும். வட்டா வைத்தல் என்பது வெண்கல வட்டாவில் வெற்றிலை, பாக்குகளை வைத்து பெண் வீட்டார் சார்பில் பெண் ஒருவரும் மாப்பிள்ளை வீட்டார் சார்பில் பெண் ஒருவரும் சேர்ந்து எடுத்துக்கொண்டு திருமண நாள், முகூர்த்தம் என்பவற்றை அறிவித்து உற்றார் உறவினர்களை திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுப்பதாகும்.

**உசாத்துணை நூல்கள்**


*1) மட்டக்களப்பு மான்மியம் (பக்கம் 2, 78, 98 வித்துவான் F.X.C நடராசா 1998)*

*2) மட்டக்களப்பு வரலாற்று ஓர் அறிமுகம் (பக்கம் 140 - 152, 178, 180 கவிக்கோ வெல்லவூர்க் கோபால் 2005)*

*3) மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் (பக்கம் 12, 55 - 57, 103, 138, 171 ஞா. சிவசண்முகம் J.P 2000)*

*4) மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் (பக்கம் 105, 108, 113 கலாநிதி க.தா.செல்வராசகோபால் 2005)*

*5) தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் (பக்கம் 70 கவிக்கோ வெல்லவூர்க் கோபால் 2003)*

*6) மாகோன் வரலாறு (பக்கம் 94 செல்வி. க. தங்கேஸ்வரி)*

*7) எருவில் ஸ்ரீ கண்ணகியம்மன் திருச்சடங்கு முறைகள் (பக்கம் 99 எஸ். ரகுபதி)*


**கண்ணகியம்மனை காவல் காக்கும் தெய்வங்களில்.....**

*கிங்கிலியர் : இவர் எமனின் தூதுவர் எனக் கூறப்படுகின்றது. அகோர வடிவானவர் அனேகமான ஆலயங்களில் இவருக்கு கோயில் இல்லை.*

*மார்த்தாண்டர் : இவரும் எமனின் தூதுவர் என கூறப்படுகின்றது. அம்மனை காப்பவர்.*

*நாக தம்பிரான் : நாககன்னி அம்மனை காப்பவர்*

# எருவில் கிராம மக்கள் ஏனைய அயற் கிராமங்களிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுடன் உள்ள தொடர்பு

**திரு. ச. பேரின்பநாயகம்** (ச.நீ)

எருவில் கிராமம் வயல் நிலங்களினாலும் குளங்களினாலும் சூழப்பட்ட இலங்கை வளம் மிக்க ஒரு கிராமம். இக் கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தொகுதியிலே அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஒரு கிராமம். இக் கிராமம் வன்னிமை உடையார் பரம்பரை இருந்த ஒரு கிராமம் முதன் முதலில் அரசியல் தடம் பதித்த ஒரு கிராமம். அது மட்டுமல்லாமல் கண்ணகி அம்மன் ஆலயம், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் ஆலயங்கள், ஐயனார் ஆலயம், சிவன் ஆலயம் என்னும் ஆலயங்கள் அமையப்பெற்று இக்கிராம மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருப்பதனால் இறை பக்தி மிக்க ஒரு கிராமமாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இதனால் இக் கிராமமக்கள் ஏனைய அயற் கிராமங்களிலுள்ள விசேடமாக பட்டிருப்பு தொகுதியிலே பிரசித்தி பெற்ற ஆலயங்களான ஸ்ரீ தாந்தா மலை முருகன் கோயில், கொக்கட்டிச்சோலை சிவன் ஆலயம், கோவில்போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோவில், மண்டூர் முருகன் ஆலயம் போன்ற ஆலயங்களோடு தொடர்பு உள்ளவர்களாக உள்ளனர்.

இந்த வகையில் ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலயம் அமரத்துவம் அடைந்த இலங்கை மணித்திரு நாட்டின் பட்டிருப்பு தொகுதியின் முதல் பாராளுமன்ற உறுப்பினரும், எருவில் மண்ணின் மைந்தருமான அமரர். சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு தமிழ் மக்களின் வணக்கத் தலமாக அரசிடம் இருந்து பெற்றெடுத்து மண்முனை பகுதி மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காலம் இருந்து ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டு திருவிழாக்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போது அமரர் எதிர்மன்னசிங்கம் அவர்களுக்கு செய்யும் நன்றிக் கடனாக எருவில் கிராமத்திற்கும் பூசை கொடுக்கப்பட்டது. இந்த திருவிழா வருடாவருடம் நடைபெறுகின்றது.

வருடாந்த திருவிழாவிற்கு முன்னர் திருவிழா செய்யும் கிராமமக்கள் இணைந்து கொண்டு சிரமதான நிகழ்வு இடம்பெறும் அந்நிகழ்வில் எருவில் இளைஞர்கள் உழவு இயந்திரங்களுடன் சென்று துப்பரவு பணிகளில் ஈடுபடுவார்கள். அன்னதான நிகழ்வு இடம்பெறும் திருவிழா உபயகாரர்களுடன் உரையாடுவதும் உறவு கொள்வதும் இடம்பெறுவதால் நட்பும் ஏற்படுகின்றது.

மேலும் எருவில் திருவிழாவன்று அதிகாலை 4.00 மணிக்கு கண்ணகியம்மன் ஆலயத்திலிருந்து 500 க்கு மேற்பட்ட அடியவர்கள் வேல் கையில் ஏந்தியவாறு "அரோகரா" ஓசை எழுப்பியவாறு காவடிச் சிந்தும், கண்ணகி காவியங்களும், முருகனுக்குரிய பாடல்களை பாடியவாறு நடை வழியாக பயணிப்பர். 40ம் கிராம பொது மக்களும், 40ம் கிராம ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினரும் அன்னதான நிகழ்வை செய்வார்கள். உணவருந்திய பின்னர் மீண்டும் நடைபவனி தொடரும். மாலை 3.00 மணிக்கு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தை சென்றடைவார்கள்.

இரவுத் திருவிழா பூசையில் கிராம மக்கள் கூடுதலானவர்கள் பங்கேற்பது சிறப்பம்சமாகும். தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய நிருவாக சபையில் இரு உறுப்பினர்கள் எருவில் கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்களாக இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

இதே போன்று கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் கோவில் போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோவிலும் எருவில் கிராம மக்கள் தொடர்பினை ஏற்படுத்தி இவ் ஆலயங்களிலும் பூசைகளையும் திருவிழாக்களையும் செய்து வருகின்றனர். சிவன் ஆலயத்திலே வருடா வருடம் நடக்கும் உற்சவத்திருவிழாவுக்கு எருவில் கிராமத்திலே உள்ள பெத்தான்குடி மக்கள், அதே போன்று படையாண்டகுடி, உலகிப்போடி குடி, பணிக்கனார் குடி, கச்சிலாகுடி, சஸ்டிகுடி போன்ற மற்றும் குடிமக்கள் தங்களால் தங்கள் குடி சார்ந்த குடித் திருவிழாவுக்கு செல்வதும் இதே போன்று கோவில் போரதீவு சித்திர வேலாயுத கோவிலுக்கும் எருவில் கோப்பி குடியினர் பூசை செய்தனர். இவைகளால் நாங்கள் இந்த குடியை சேர்ந்தவர்கள் என்ற உணர்வும் ஒற்றுமையும் உறவும் வளர ஏதுவாக அமைந்து கொண்டிருப்பதை காணக் கூடியதாகவுள்ளது.

மண்டூர் முருகன் ஆலயத்தில் கோப்பிகுடி மக்களுக்கு பூசையுள்ளது. அரசடித்தீவு கோப்பிகுடி மக்களுடன் இணைந்து எருவில் கோப்பிக்குடி மக்களும் திருவிழா செய்கிறார்கள். எருவிலிலிருந்து மடப்பெட்டி எடுத்துக் செல்லும் நிகழ்வும் இடம்பெறும். இதனூடாக சமூக ஒற்றுமை ஏற்படுகின்றது. உறவும், தொடர்பும் அதிகரிக்கின்றது.

எனவே எருவில் கிராம மக்கள் பண்டைய காலம் தொடக்கம் அயற் கிராமங்களான தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை, கோவிற்போரதீவு, மண்டூர் ஆகிய கிராமங்களுடன் தொடர்பு கொண்டு உரிமையுடன் நடந்து வருகின்றது. இந்த உரிமைகள், தொடர்புகள், தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வேளை மரபுகளும், விழுமியங்களும், கலைகலாசாரங்களும், இன ஒற்றுமையும், குடிகளின் ஒற்றுமையும், உறவுகளும் பேணப்பட வேண்டும் என்பதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

# இந்து சமயத்தில் சாக்த வழிபாடு

**இ. வினோதினி**

இந்து சமயத்தில் பல சமய பிரிவுகள் காணப்பட்டன. அதாவது பல தெய்வ வழிபாடுகள் காணப்பட்டன. அவற்றை சண்மத பிரிவாக மீள ஸ்தாபித்தவர், ஆதிசங்கரராவார். இவர் காணபத்யம், சாக்தம், சைவம், கௌமாரம், சௌரம், வைஷ்ணவம் எனப்படும் ஆறு பிரிவுகளை மீளவும் உருவாக்கினார். அவற்றுள் தாய்மை எனும் உயர்ந்ததும் அதே சமயம் எளியதுமான நிலையைத் தன் மனதில் கொண்டு சாக்தம் எனும் பிரிவினை தன் இஸ்ட மதமாக அனுசரித்துக் காட்டினார்.

சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக அமைகின்றாள். சிவன் உலக தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும் போது சக்தி அதனை இயக்கும் தத்துவமாய் விளங்குகின்றாள். சாக்த தத்துவத்தில் சக்தி முதலிடம் பெறுகின்றாள். சக்தியை பெண்ணாக கொள்வது சாக்த நெறியாகும். சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது எனச் சௌந்தரிலஹரியில் சங்கராச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

இந்து சமயத்தில் கண்ணகி, காளி, மாரியம்மன், பேச்சியம்மன், நீலி, லெட்சுமி, சரஸ்வதி இராஜராஜேஸ்வரியம்மன், வீரபத்திரகாளியம்மன், காமாட்சியம்மன், நாகபூஷணியம்மன் என பல பெயர்களில் சக்தியை வழிபடுகின்றனர். இத் தெய்வங்களில் சில தெய்வங்கள் அகோர வடிவங்களாகவும் காணப்படுகின்றன. காளி, நீலி, மாரியம்மன் போன்ற தெய்வங்கள் அகோர வடிவமுடைய தெய்வங்களாகும்.

## ஆகம வழிபாடும் கிராமிய வழிபாடும்

தாய் தெய்வ வழிபாடு உயரிய மட்டத்தில் ஆகம முறைக்கேற்ப நடைபெறுகின்றது. இவ்வழிபாட்டில் ஸ்ரீசக்கர பூசை முதலிடம் பெறுகின்றது. அம்பிகையை நவசக்திகளாகப் பாவனை பண்ணி நடைபெறும் நவசக்தி அர்ச்சனை சக்தி வழிபாட்டில் மிகவும் சிறப்பான அம்சமாகும். சாக்த ஆகம முறைப்படி அம்பிகையை வழிபடும் அடியவர்கள் அனுசரிக்க வேண்டிய ஆறு கடமைகளாக பின்வருவன கூறப்படுகின்றன.

நாள்தோறும் நீராடல், சந்தியாவந்தனம், ஹோமம், ஜபம், தேவி ஆராதனை சக்தி பூசை என்பனவாகும்.

கிராமிய வழிபாட்டு முறையென்பது ஆகம விதிக்கமைய கோயில்கள் கட்டப்படாமல் மக்களின் வசதிக்கேற்ப ஆலயம் அமைத்து வருடத்திற்கு ஒரு தடவை ஆலயம் திறக்கப்பட்டு பூசகரால் திருச்சடங்கை நடத்துவதாகும். பத்ததிகளை அடிப்படையாகக் கொண்ட பூசைமுறையாகும். இவ்வாறான கிராமிய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட கோயிலாக கண்ணகியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், காளி போன்ற தெய்வங்களுக்குரிய ஆலயத்தைக் குறிப்பிடலாம்.

வட இலங்கையிலிருந்த கண்ணகியம்மன் ஆலயங்களை நாவலர் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையாக மாற்றியதோடு இராஜராஜேஸ்வரியம்மன், முத்துமாரியம்மன் கோயில் என மாற்றமடையச் செய்தார். எனவே கிராமிய வழிபாட்டு முறை மருவிச் செல்வதைக் காணலாம்.

இந்து மக்கள் சக்தி விரதங்களை கடைப்பிடித்து அன்னையவளின் அருளினை பெறுகின்றனர். சக்தி விரதங்களில் நவராத்திரி விரதம், வரலஷ்மி விரதம், சாவித்திரி விரதம், யமுனா விரத பூசை, மகாலட்சுமி விரத பூசை, பராசக்தி விரத பூசை, ஆடிப்பூரம், பங்குனி உத்தரம், பங்குனித் திங்கள், வெள்ளிக்கிழமை விரதம், தை அமாவாசை விரதங்களைக் குறிப்பிடலாம்.

இனி சக்தியினை வழிபட்டு அவளின் தெய்வீக சக்தியினை பெற்ற அடியவர்களை நோக்கும் போது ஆதி சங்கர் முதன்மையானவர். அத்தோடு இராமகிருஷ்ணர், கம்பர், காளிதாசன், காளமேகம், அபிராமிப்பட்டர், தாயுமானவர் போன்றோர்களைக் குறிப்பிடலாம்.

சக்தியின் சிறப்பைக் கூறும் நூல்களில் சௌந்தரிலகரி, அபிராமியந்தாதி, சரஸ்வதி அந்தாதி, சகலகலாவல்லிமாலை போன்றவற்றை குறிப்பிடலாம்.

சக்தி வழிபாடு தொன்மையான வட இந்தியாவில் சிந்துவெளி காலம் தொடக்கம் புராண இதிகாச காலம் வரை வளர்ச்சியுற்றது. அதே போல் தமிழ் நாட்டில் சங்ககாலம்

தொடக்கம் இற்றை வரை சக்தி வழிபாடு சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையில் சக்தி வழிபாடு தொன்மையானது. பூர்வீக குடிமக்களும் சக்தியை வழிபட்டனர். பிராமிக் கல்வெட்டுக்களிலும் துர்க்கை வழிபாடு பற்றி கூறப்பட்டுள்ளது. கஜபாகு மன்னன் பத்தினி தெய்வ வழிபாட்டை அறிமுகம் செய்தான். இலங்கையில் இன்று மிகவும் பிரசித்தி பெற்ற நயினை நாகபூசணியம்மன் கோயில், மாத்தளை முத்து மாரியம்மன் கோயில், கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில், வற்றாபளை கண்ணகியம்மன் கோயில், கொத்துக்குளத்து முத்துமாரியம்மன் கோயில், புன்னச்சோலை காளி கோயில், காரைதீவு கண்ணகியம்மன் கோயில், ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், கேதார கௌரியம்மன் கோயில் அமைந்துள்ளதைக் காணலாம்.

ஆகவே இந்து சமயத்தில் சக்தி வழிபாடானது தொன்மை வாய்ந்ததுடன் பல சிறப்புக்களையும் கொண்டது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

## கண்ணகித்தாயின் சிறப்பு

தெய்வப் பெண்ணாகிய உமை மானிடப் பெண்ணாக கண்ணகியாக பிறக்கின்றாள். மானிடப் பெண்ணாக வாழ்ந்த போதும் அவள் தெய்வீக மாட்சிமையுடையவளாகவே மிளிர்கின்றாள் என்பதற்கு அவளிடம் காணப்பட்ட குணாதிசயங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1) காற்சிலம்புடன் பிறந்தமை
2) பத்தினித்தன்மையுடையவளாக இருத்தல்
3) நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறியும் திறன்.
4) சாபமிட்ட போது பலித்தல்
5) இறந்த கணவனை எழுப்பி நடந்தவற்றைக் கேட்டல்
6) கோவலனைக் கொலை செய்தவர்களை தண்டித்தல்
7) கோவலனுக்கு உதவியவர்களுக்கு தண்டனையிலிருந்து தப்பிவித்தல்
8) தனக்கு உதவியவர்களுக்கு அருள் பாலித்தல்
9) அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டியமை.
10) தான் தெய்வப் பெண் என்பதை நிருபித்தமை.

# அறநெறிக் கல்வியும் ஆலயங்களின் பங்களிப்பும்

இளம் சைவபுலவர் **திருமதி. சசிகலா தியதீஸ்வரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

அறநெறிக் கல்வியின் இலட்சிய நோக்கு என்பது இந்து சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீக தாமரையினை மலரச் செய்து அவர்களின் ஆளுமையும் திறமைகளும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியினை வழங்குவதே. அதன் அடிப்படையில் சிறார்களின் அடி மனதில் நல்ல சிந்தனைகளையும் நல்ல நடவடிக்கைகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் ஊட்டி சமூகத்தில் எல்லோரிடத்தும் நன்மதிப்பு மிக்கவராக ஆக்குவோம் அதற்காக, பெற்றோர் மாத்திரமின்றி சமூகத்தில் உள்ள அறங்காவலர்கள் சமூக அமைப்புக்கள் கல்வி கற்றவர்கள் பதவி நிலைகளில் உள்ளவர்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும். அறநெறி கல்வியின் நோக்கம் ஒருவருக்கு தொழில் வாய்ப்பிற்கான கல்வியினை கற்பிப்பது அல்ல. அவைகளை எந்த கல்வி கூடத்திலாவது பணத்தினைக் கொடுத்து கற்றுக் கொள்ளலாம். ஆனால் அறநெறி கல்வியினை அவ்வாறு பெறமுடியாது.

பல குற்றச் செயல்கள் இடம்பெற காரணமாக இருப்பது ஒழுக்கமின்மையே. ஒழுக்கத்தினை முதுமொழிக் காஞ்சியில்,

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்ததன்று ஒழுக்கமுடைமை"

என்று தெளிவாக கூறப்படுகிறது. ஔவையார் அருளிய பாடல்கள் திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆறுமுகநாவலரது பாடல்கள், விபுலானந்தர், விவேகானந்தர், நாயன்மார்களது பாடல்கள் என எண்ணிலடங்காத சிறந்த நூல்களும், கோலாட்டம், கும்மி, கரகம், கூத்து, தெம்மாங்கு, பள்ளு என்றும் பூமாலை கட்டுதல், கோலம் போடுதல், தேவார திருவாசகங்களை பண்ணோடு இசைத்தல், மற்றோரை மதித்தல், கூடிப் பழகுதல் எமது கலாசாரத்தினை பேணுதல், யோகாசனம், பஜனை என பல விடயங்கள் அறநெறி ஊடாகவே

ஊட்டப்படுகின்றன. இவைகளை தங்கள் பிள்ளைகள் கற்பதற்கு இடமளியுங்கள். சிறார்களின் அறிவுத் திறனுக்கும் வயதிற்கும் ஏற்றவாறு கல்வியினை ஊட்டுங்கள். அதிக வகுப்பு, வகுப்பு என்ற திணிப்புக்களை திணிக்காதீர்கள். சிறார்களை விளையாடுவதற்கும் அவர்கள் சுயமாக செயற்படுவதற்கு விடுங்கள்.

அறநெறிக்கு ஆலயங்களின் பங்களிப்பு எனும் போது தங்களின் செலவீடுகளில் நிருவாகிகள் ஒருதொகையினை ஒதுக்கீடு செய்யுங்கள், ஆலயங்களில் பஜனை வழிபாட்டினை மேம்படுத்துங்கள். அறநெறி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குங்கள். ஆலயங்களில் பூந்தோட்டங்களை அமையுங்கள். ஆலயம் சம்பந்தமான எந்த தேவைக்கும் கலாசாரத்தினை பின்பற்றுங்கள். சமயத்தினையும் சமய அனுட்டானங்களையும் ஒழுக்க விழுமியங்களையும் பின்பற்றுகின்ற மக்களால் மதிக்கப்படுகின்ற குருக்கள்மாரை கோயிலில் அமர்த்துங்கள். ஆலயங்களில் பூசைகளுக்கான அனாவசியமான செலவுகளை மக்களிடம் திணிப்பதனை குறைத்து ஏழைகளுக்கு உதவுங்கள். மக்களின் நோய் தீர்க்கும் இடமாக ஆலயத்தினை மாற்றுங்கள். இதனூடாக எமது மதமும் கலாசாரமும் அறநெறியும் பேணப்படும் என்பதோடு அறநெறி கல்வி வளர்ச்சிக்கு ஆலயத்தின் பங்களிப்பு மிக முக்கியமாக உள்ளது. எனவே அனைவரும் இணைந்து மாணவர்களை அறநெறி பாடசாலைக்கு அனுப்புவதற்கு உதவுங்கள் என எனது கருத்தினை வலியுறுத்துகிறேன்.

## கண்ணகியம்மனின் காவல் தெய்வங்களில் மழுவரசன்

பாண்டிய மன்னனின் கட்டளைப்படி கோவலனை கொலை செய்வதற்கு கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றவன் மழுவரசன். கொலை செய்ய தயங்கினான் அப்பொழுது கோவலன்தன் ஊழ்வினை பயனைக் கூறியதோடு பாண்டியன் அழியப் போகின்றான் தன்னை கொலை செய்யுமாறு கூறுகின்றான். மழுவரசனின் கையிலிருந்த மழு கோவலனின் கழுத்தில் விழுகின்றது. தலை துண்டாடப்படுகின்றது. பூமாலையாக மழுமாறுகின்றது. மழுவரசனில் பிழையில்லை என்பதை உணர்ந்த கண்ணகி மழுவரசன் காவல் தெய்வமாக்கினார்.

# இந்துக்களின் பண்பாட்டு அம்சங்களில் சில..

க. விவேகானந்தராஜா(M.A)

மானிடவியல் என்ற பெரியதோர் தொகுதியினுள் அடங்கும் சிறப்பு அம்சமே பண்பாடாகும். இவை மதத்திற்கு மதம் இடத்திற்கு இடம் வேறுபட்டு காணப்படுகின்றது. அந்தவகையில் உலகில் தோன்றிய சமயங்கள் எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமும் இல்லாத சமயமாகிய எமது இந்து மதத்தினை கடைப்பிடிக்கின்ற மக்களாகிய நாம் இந்து மதத்தின் பண்பாட்டு அம்சங்களை ஆதிதொட்டு கடைப்பிடித்து வருகின்றோம். இருப்பினும் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இந்து மதத்தில் சொல்லப்பட்ட மெய்ஞானங்களை மறந்து மக்களிடையே காணப்படுகின்ற பண்பாட்டு அம்சங்களில் சிலவற்றை பார்ப்போமாயின்,

**கும்பம் வைத்தல் :**

கடவுளை கும்பத்தில் வழிபடும்போது கும்பம் உடம்பின் பாவனையாக கருதப்படுகின்றது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்கு பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்கு மேல் தேங்காயை குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும்பத்திற்கு நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலை முடியாகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.

**கோலம் போடுதல் :**

கோலம் போடுதல் இந்துக்களின் நித்திய கருமங்களில் ஒன்றாகும். இது பல தத்துவங்களை உள்ளடக்கிய பண்பாட்டு கலையாகவும், மங்களச் சின்னமாகவும் திகழ்கின்றது. கோலங்களை மூன்று வகையாக வகைப்படுத்தலாம். அவையாவன புள்ளிக்கோலம், ரங்கோலி கோலம், கோட்டுக்கோலம் என்பனவாகும். இக் கோலங்களை வீட்டிலுள்ள பெண்கள் காலையில் சூரிய உதயத்திற்கு முன்பே வாசலைப் பெருக்கி சாணநீர் தெளித்து மெழுகி கோலமிட்டால் வீடு அழகாக இருப்பதுடன், அந்த வீட்டினுள் லட்சுமி வருகின்றாள் என்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது.

அரிசியை இடித்து சலித்த மாவினால் சூரிய உதயத்திற்கு முன் கோலம் போட வேண்டும். சூரிய உதயத்திற்கு பின் எறும்பு, அணில், காக்கை, குருவி என்பவை வந்து உண்ண வேண்டும் என்ற உயர்ந்த தார்மீக எண்ணமே இதற்கு காரணமாகும். அதுமட்டும் இல்லாமல் கோலமிடுவது நல்ல உடற்பயிற்சியை தருகின்றது. கோலமிடுவதால் கைக்கும், இடுப்பிற்கும், விரல்களுக்கும் பயிற்சி ஏற்படுகின்றது. அதிக புள்ளிகள் வைத்து பெரிய பெரிய கோலங்களை போடும் போது மனம் அதிலே ஒருமைப்படுகின்றது. கோலம் முழுமையாகும் வரை கவனம் வேறு எங்கும் திசை திரும்பாது ஒரே சிந்தனையில் இருப்பதனால் ஒரு வித தியான நிலை ஏற்படுகின்றது. இதனால் மனதில் தென்பும், உற்சாகமும், நிறைவும் ஏற்பட்டு வீட்டு வேலைகளில் மன நிறைவோடு ஈடுபடத் தோன்றுகின்றது.

கோலத்தின் நடுவே வைக்கப்படும் புள்ளியைச் சத்திக்கும் அதை சுற்றி வரும் கோட்டை சிவனுக்கும் ஒப்பிடுவார்கள். ஆணும் பெண்ணும் சமம் என்னும் தத்துவத்தை எளிமையாக உணர்த்தும் இது தற்கால நாகரிகத்தைப் பிரதி பலிக்கின்றது.

**மாவிலைத் தோரணம் :**

மாவிலைத் தோரணம் ஆலயங்கள் மற்றும் விழாக்கள், திருமண வைபவங்களிலும் மங்களப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. கும்பம் வைக்கும் போது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. மூன்று முறையாக மாவிலைத் தோரணம் அமைக்கப்படுகின்றது.

**(i) நற்காரியங்கள்**

ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுப காரியங்கள் நடைபெறும் போதும் மாவிலை தோரணம் இலையின் காம்பு நுனியை முன் புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்கவிடுதல் வேண்டும். இது மாவிலை தலைகுனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தகமையாகும்.

**(ii) கும்பம் வைக்கும் போது**

தேங்காயின் கீழ் மாவிலையை அமைத்தல் வேண்டும். இதில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

(iii) அபரக் கிரியைகளின் போது

இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின் பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக்கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.

பொட்டு வைத்தல் :

இந்துக்களின் பண்பாட்டில் பொட்டு வைத்தல் என்பது ஆதிகாலம் தொடக்கம் தற்காலம் வரை கடைப்பிடிக்கின்ற பண்பாடாகும். இதனை ஆதிகாலத்தில் தினம் தோறும் ஆண் பெண் இருபாலாரும் சந்தனப் பொட்டு, குங்குமப் பொட்டு இடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். ஆனால் தற்காலத்தில் பொட்டு இடும் மரபானது ஆண்கள் மத்தியில் குறைந்தளவாகவே காணப்படுகின்றது. திருமணமான பெண்கள் தன் கணவனின் நீண்ட ஆயுளை வேண்டிய மணிபூரந்தில் பொட்டு அழுத்தி இடுவதனால் தனது உடல் ஆரோக்கியத்தை அதிகரித்துக் கொள்கின்றனர். அதே போன்று சந்தனம் குளிர்ச்சி பொருந்தியதொன்றாக உள்ளதனால் நம் உடல் நலத்திற்கு ஆரோக்கியத்தை தருகின்றது. இந்துக்களிடையே பொட்டு வைத்தல் பல சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. அந்த வகையில் ஆலய திருவிழாக்களிலும், சுப காரியங்களிலும் பொது வைபவங்களிலும் பொட்டு வைத்தல் அம்சம் காணப்படுகின்றது.

வாழை மரம் கட்டுதல் :

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்கு பெரும் பயனை தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி என்பவை உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் பெறக்கூடிய நிலை வர வேண்டும். இதனை அழிக்க முடியாது. இது வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களகரமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தை தெரிவிப்பதன்

பயனாக எடுத்துக் காட்டாக அமைகிறது. வாழை மரம் இலையில் பயன்படுத்தும் முறை கும்பம் வைக்கும் போது தலை நுனிப் பக்கம் எப்பொழுதும் கீழ்த்திசை அல்லது வடக்கு திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இது மட்டுமல்ல சாப்பிடும் போது தலை நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலை நுனி தெற்கு பக்கமாக போடுதல் வேண்டும்.

**தென்னந் தோரணம் கட்டுதல் :**

தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பாகமாக இருக்கும் படியாக சுப காரியங்களுக்கு அமைய வேண்டும்.

அபரக் கிரியைகளுக்கு மேற்பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

மேலும் ஆண்கள் காது குத்தி கடுக்கன் அணிதல், பெண்கள் குரவை இடுதல் இவை போன்ற இன்னும் பல பண்பாட்டு அம்சங்கள் இந்துக்களில் மத்தியில் காணப்படுகின்றன. அவற்றை அழியவிடாது போற்ற வேண்டும். அதுவே நாம் பிற்கால சந்ததியினருக்கு செய்யும் கைங்கரியமாகும்.

## வழக்குரைக் காவியத்தில் எருவில் பதிகஹற்ம் பாடல்

நேரிழையும் ஒருகலையும் நான்கு கலையாகி
நிலவு போலேநின்று நிறைபூசை கொண்டு
பாரிலுள்ளோர்களிட நோய் பிணி தவித்து
பக்தி செறி தம்பிலுவில் ஊர்தனிலிருந்து
ஏர்செறியும் ஐங்கோணா மைக்கடவை
கார் ஏறு நகர்எருவில் ஆனதம்பிலுவில் எழில்வீரமுனை தனிலும்
பேரான காரைநகர் எங்கனுமிருந்து
பெருமை செறி வரமளித்து இனிது காப்பவளே!

# சைவமும் மத மாற்றமும்

**திரு. த. பிரபாகரன்**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்

சமயம் என்றால் மதம், மார்க்கம் எனப் பொருள்படும். மார்க்கம் என்றால் வழி எனப் பொருள்படும். எனவே ஒரு மனிதனை நல்வழிப்படுத்த தோன்றியதே சமயம் ஆகும். சமய உண்மைகளைத் தேர்ந்து தெளிந்து தெளிந்தபடி ஒழுகி வாழ்வதே சமய நெறிப்படி வாழ்வதாகும். உலகில் உள்ள பிற உயிர்களுக்குச் சமயம் ஒன்று கிடையாது. ஆனால் சமயம் இல்லாத மனிதனே இல்லை எனலாம். உய்வினை உறுதியாகத் தரவல்ல தெய்வக் கொள்கைகளை கல்லாது ஏனையவற்றைக் கற்பவர் வாழ்வில் பூரணத்துவம் பெற்றுவிட முடியாது. “அறமல்லாதவற்றைச் செய்வதற்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்குப் பிறந்தவை சமயங்களே தவிர அற்பப் புத்திகளை மனிதனுக்கு ஊட்டி அலைய வைப்பதற்கல்ல” சிலர் சமயம் சமயம் என அடித்துக் கொண்டு மகிழ்ச்சிகரமான அடிப்படை மனித வாழ்வை மறந்து திரிகின்றனர். தமிழர் தொன் நெறியாகிய சைவசமயக் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆசாரம் போன்றவற்றை மக்கள் நன்கு கற்றுத் தெளிந்து தெளிந்த நிலையில் நன்மை பெற வாழ்ந்து ஈற்றில் பெரு நிலையில் அடங்கி வாழும் பேரின்பப் பேற்றிற்கு எம் சமயத்தவரை ஆட்படுத்த வேண்டும். எந்தச் சமயமும் தீயதைச் செய்யச் சொல்லவில்லை. நல்லவனவற்றையே செய்யச் சொல்கின்றது. ஈழத்திலே காணப்படும் முக்கிய மதங்களான புத்தமதம், இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் இவை அனைத்தும் வழிபட மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை. மனிதனை நல்வழிப்படுத்தவும் கற்றுக் கொடுக்கின்றன. ஒவ்வொரு மதத்தினதும் அறக்கருத்தை நோக்கினால், கிறிஸ்தவ மதம் பெரியோரை மதிக்கச் சொல்கின்றது, எல்லோரிடமும் அன்பு செலுத்தச் சொல்கின்றது. இஸ்லாம் மதத்தை நோக்கினால், வேற்று மதத்தவர் மீதும் அன்பு காட்ட வேண்டும், தீய செயல்களை ஒழிக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. பௌத்த மதத்தை எடுத்துக் கொண்டால், உயிரினங்களின் மீது அன்பு செலுத்த வேண்டும், ஆசையை அழிக்க வேண்டும், கொல்லாமையை புகட்ட வேண்டும் எனக் கூறுகிறது. அடுத்து இந்து மதத்தை எடுத்து நோக்கினால், அறம் என்பதற்கு அடிப்படை இலக்கணம் வகுத்த மதம் இந்து மதமே. அதிலும் இல்லறம் எனும் நல்லறத்தில் செய்ய வேண்டிய மேன்மைமிகு அறங்களைப் பட்டியலிட்டுக் காட்டியது இந்து மதம்தான். இவ்வாறு

எச்சமயத்தை எடுத்துக் கொண்டாலும் அச்சமயக் கருத்துக்கள் நல்வழி காட்டக் கூடியனவாகவே உள்ளது.

சைவ சமயத்தின் தொன்மையைப் பற்றி எடுத்து நோக்குவோமானால் இலங்கையில் பௌத்தம், இஸ்லாம், சைவம், கிறிஸ்தவம் என நான்கு சமயங்கள் காணப்பட்டாலும் இவற்றுள் சைவ சமயமே மிகப் பழமையானது. பௌத்த சமயம் 2518 வருடங்களுக்கு முன் கௌதம புத்தராலும் இஸ்லாம் சமயம் 1394 வருடங்களுக்கு முன் முகம்மது நபியினாலும், கிறிஸ்தவ சமயம் 1975 வருடங்களுக்கு முன் இயேசு கிறிஸ்துவினாலும் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு ஒருவராலே தோற்றுவிக்கப்பட்ட சமயத்திற்கு மாத்திரம் தொடக்க காலம் கூறலாம். சைவசமயத்திற்கு தொடக்க காலம் கூறுவதானால் அது யாரோ ஒருவரினால் ஏதோ ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் அது எவராலேனும் எக்காலத்திலேனும் தோற்றுவிக்கப்படாமையால் அதற்குத் தொடக்க காலம் இல்லை. கடவுள் என்றதோர் எண்ணமும் அக்கடவுள் நமக்கு எவ்வகையாலும் நன்மையே செய்வார் என்ற தெளிவும் உண்டான காலமே இப்பூமியில் சைவசமயத்தின் தொடக்க காலம் ஆகும். சைவசமயம் வரலாற்றில் முந்திய சமயம், உலகில் முதல் தோன்றிய சமயம் புராதன காலத்தில் இச்சமயம் உலகின் பல பகுதிகளிலும் விளங்கியுள்ளது எனப் பழம் பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புக்கள், தொல் பொருட்கள், அகழ்வாராய்ச்சிகள் என்பன சான்றாக அமைகின்றன. இவற்றுள் வேதாகமங்கள், புராணங்கள் என்பன சைவ சமயத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. வேதங்களின் காலம் 5000 ஆண்டுகளுக்கு முன் என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். அத்தோடு 3000 ஆண்டுகள் வாழ்ந்த திருமூலரும் அவர் பின் வந்த சமய குரவர்களும் சைவத்தின் தொன்மையை பறைசாற்றுகின்றனர். இவ்வாறான பழமையும் பெருமையும் மிக்க எமது சைவ சமயத்தை விடுத்து ஏனைய மதங்களை சிலர் நாடுகின்றனர். இதற்கான காரணத்தை நோக்குவோமானால், அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தெரியாமை காரணத்தினாலேயே மதம் மாற எத்தணிக்கின்றனர். “இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை” எனும் பெரியோர் வாக்கு ஒரு போதும் பொய்க்காது. மத மாற்றத்தை எத்தணிக்கும் காரணிகளை நோக்குவோமானால் முதலாவதாக மனிதனுக்கு ஏற்படும் பொருளாதாரத் தளம்பல், தேவைகளின் அதிகரிப்பினால் ஏற்படும் கொள்வனவு அதிகரிப்பு, இதன் விளைவாக ஏற்படும் வறுமை, வியாபார நட்டம், தவறான பழக்கவழக்கங்களினால் ஏற்பட்ட தீராத நோய், வேற்று மதத்தினரின் உணவுப் ப்ழக்கவழக்கம், ஆடை கலாசார முறைகள் என்பவற்றின் விளைவாக பிறமதக் கவர்ச்சி,

மிஷனரிகள் மற்றும் ஏனைய காரணிகள் மூலம் கிடைக்கும் கல்வி வாய்ப்பு, கலாசாரத்தின் பால் ஈர்க்கப்படல், தன்சமயம் பற்றி தெளிவானதோர் தோற்றப்பாடு இன்மையால் ஏற்படும் அறியாமை நிலை, மனிதரிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுடன் கூடிய சாதி வேறுபாடு, வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சிறு தொழில் அமைத்துக் கொடுத்தல், மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற உதவிகள் செய்தல் இது போன்ற காரணிகளின் மூலமாகவே மனிதன் மதம்மாற எத்தணிக்கின்றான். இவ்வாறான காரணிகளின் தாக்கத்தினைக் குறைப்போமானால் மனிதனை மதமாற்றத்தில் இருந்து விலக்க முடியும். அதற்காக நாம் எல்லா இடங்களிலும் அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு மாணவருக்கும் பெற்றோருக்கும் விழிப்பூட்டல், பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவித்தல், கோயில்களின் ஊடாக மக்களுக்குச் சமயப் பிரச்சாரம் மூலம் அறிவூட்டல், மனிதரிடையே நிலவும் சாதி வேறுபாடுகளை வேரோடொழித்தல், கல்வி கற்க வசதியற்று இடைவிலகும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி மீண்டும் கல்வி பயில வாய்ப்பளித்தல், வசதியற்றோருக்கு சிறு உதவிகள் வழங்குதல், சிறு தொழிலை மேற்கொள்வதற்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். இவ்வாறான வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக நாம் பிறந்த மதத்தை விடுத்து ஏனைய மதத்திற்கு மாறுவதைத் தடுப்பதோடு போற்றிலே மிகுந்த எமது சமயத்தின் எழுச்சிக்கு சிறப்பானதோர் வழி செய்யலாம்.

## எருவில் கண்ணகியம்மன் ஆலயத்தில் பூசை செய்யப்படும் ஒழுங்குமுறை

சுற்றாலைப் பூசை முதலில் இடம்பெறும் அதில் பிள்ளையாருக்கு இடம்பெறும் பின்னர் அம்மாளுக்கும் அதன் பின்னர் முருகனுக்கும் பின்னர் வெண்கல உருக்குக்கும், திருக்கல்யாண கால நாட்டும் இடத்திற்கும் பின் வழக்குரைக் காவியத்திற்கும் அதைத் தொடர்ந்து வீறும் வைரவருக்கும் பின் ஆதிவைரவருக்கும் நாகதம்பிரானுக்கும், கிங்கிலியருக்கும், மார்த்தாண்டவருக்கும், மாரியம்மனுக்கும், மழுவரசனுக்கும் நடைபெற்ற பின்னர் அம்மனுக்கு அலங்கார பூசை நடைபெறும் பின்னர் அகவல் காவியம் பாடப்படுவதுடன் பூசை நிறைவுபெறும்.

# சமயமும் விஞ்ஞானமும் ஓர் பார்வை

திரு. கி. குமாரசிங்கம்
S.L.T.S 1, B.ed, Tr. Social Science

மனிதன் சிந்தனை வளர்ச்சியும் முதிர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்திராத கால கட்டத்தில் அனைத்து சமயங்களும் ஆசியாவில் தோற்றம் பெற்றுள்ளது. இதே வேளை விஞ்ஞானமானது ஐரோப்பாவில் இருந்தே ஆரம்பமானது. இப்போது உலகில் காணப்படும் பெரும்பாலான ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புக்களும் ஐரோப்பாவிற்கே உரியன. இதன் விளைவாக சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்குமான போராட்டம் ஆரம்பமானது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் பல கண்டுபிடிப்புக்கள் உருவாகி உள்ளன. இன்றைய நவீன யுகத்தில் வைத்தியத்துறை, போக்குவரத்துத்துறை, தொடர்பாடல், விவசாயம், கல்வி போன்ற துறைகளில் விஞ்ஞானம் தாக்கம் செலுத்தியுள்ளது.

இதன் விளைவாக சமய கருத்துக்களும் ஆன்மீக கருத்துக்களும் கொள்கைககளும் மனித விழுமியங்களும் வலுவிழந்து செல்வதனை அவதானிக்க முடிகிறது. சமயம் என்பது மூடநம்பிக்கை என்று தட்டிக்கழிக்கும் நிலை உருவாகும் வேளை, தமது சமயத்தில் முன்னோர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் எவ்வளவு முக்கியத்துவமுடையதாகும் என்பதனை நோக்குவது பயனுடையதாக இருக்கும்.

ஆலயத்தில் கோபுரம் முக்கியமான ஒரு அம்சமாகும். கோபுரத்தில் ஏழு (7) நிறங்கள் உள்ளன. அவை ஏழு நிறங்களும் எமது உடம்பிலுள்ள ஏழு சக்தி சக்கரங்களையும் குறிக்கும். கோபுரத்தில் உச்சியில் தங்கத்தினால் அல்லது வெள்ளியினால் அல்லது ஐம்பொன்னிலால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். அக்கலசங்களும் அதன் அடியில் வைக்கப்படும் தானியங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசத்திற்கு கொடுக்கிறது. இத்தானியங்களும் உலோகங்களும் 12 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றுவது வழமை. ஏனெனில் இவை 12 வருடங்களில் தமது சக்தியை இழந்துவிடுகின்றன. இதனால் தான் 12

வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்து இவை புதுப்பிக்கப்படுகின்றன. எனவே இக்கலசங்கள் மின்னலைத் தாக்கும் சக்தி கொண்டவை. ஆதிகாலத்தில் வீடுகளில் மின்னலைத் தாக்கும் சக்தி இல்லாத காரணத்தினால் இடி மின்னலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் கோயில்களில் தங்குவது வழக்கமாகியது. இதனை மையப்படுத்தியே நம் முன்னோர்கள் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதே போல் கோயில்களில் பூசை நேரங்களில் மணி ஒலிக்கும். இதற்கான காரணம் தமது முன்னோர்கள் பழங்காலத்தில் கோயில் மணியை காட்மியம், ஜிங்க், காரீயம், தாமிரம், குரோமியம் மற்றும் மக்னீசியம் போன்ற உலோகங்களினால் வடிவமைத்தனர். இந்த உலோகங்களுக்கு ஒரு விசேட சக்தியுண்டு. இம்மணிகளின் ஒலி எமது மூளையில் ஏழு (7) நிமிடங்கள் நிலைத்து எமது உடலில் உள்ள ஏழு சக்கரங்களையும் ஒருங்கிணைத்து மூளையின் சிந்தனைகளை ஒருமுகப்படுத்துகின்றது.

இதேபோன்று சூரிய, சந்திர கிரகணம் போன்ற நாட்களில் வெளிப்படும் கதிர்வீச்சு தமது உடலை பாதிப்பதோடு கண்பார்வை குறைபாட்டையும் ஏற்படுத்தலாம். சூரியன் இல்லாத வேளையில் பக்றீரியா, வைரசு போன்ற நோய்க்கிருமிகளின் ஆதிக்கம் அதிகம் என்பதால் இக்காலப்பகுதியில் சாப்பிடவோ, வெளியில் வரவோ கூடாது என மூதாதையர் அறிவுறுத்தினர்.

நமது இந்து மதத்திலே துளசி இலை கடவுளின் புனிதமான ஒரு வழிபாட்டுப் பொருளாகக் காணப்படுகின்றது. அது நிறைய மருத்துவக் குணங்கள் உள்ள செடியாக உள்ளது. அப்படிப்பட்ட துளசி இலையை விழுங்கலாம் ஆனால், மென்று உண்ணக்கூடாது ஏனெனில், இத் துளசி இலைகளில் "மெர்க்குரி" என்ற பொருள் அதிகமாக இருப்பதனால் எமது பற்களை சேதப்படுத்த அதிக வாய்ப்புள்ளது. இந்த உண்மையை அறிந்து தான் நம் முன்னோர்கள் துளசி இலையினை மென்று உண்ணக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளனர்.

அடுத்து எலுமிச்சை மற்றும் மஞ்சள் இரண்டிலும் விற்றமின் C அதிகமாக உள்ள காரணத்தால் விற்றமின் C க்கு நோயை எதிர்த்து செயற்படும் சக்தி

உள்ளமையினால் அவை இரண்டையும் இந்து சமய சடங்குகளில் அதிகமாக பயன்படுத்த வலியுறுத்தினர் நம் முன்னோர்கள்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது விஞ்ஞான தன்மை கொண்ட விடயங்களை எமது சமயம் தன்னகத்தே கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இதனால் சமயத்தை முற்றாக ஒழித்து விடவோ, ஒதுக்கி விடவோ முடியாது. இன்று சமய உண்மைகளைப் பார்க்கிலும் விஞ்ஞான உண்மைகள் ஏற்கக் கூடியதாகவும் நம்பக் கூடியதுமாக இருப்பதனால் சமயம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவது வீண் விரயமானது என சமயத்தை புறக்கணிக்க விஞ்ஞானிகள் முற்படுகின்றனர். விஞ்ஞானத்தில் அனுபவத் தன்மை காணப்பட்டாலும் விஞ்ஞானம் என்பது கருவிகளின் முன்னேற்றம் அன்றி மனித வாழ்வின் முன்னேற்றமாக கருத முடியாது. உலக அமைதி, உலக சமாதானம், மனித நேயம், மனித ஒழுக்கப் பெறுமானம் என்பவற்றை சீர்குலைக்கும் ஒரு சக்தியாக செயற்படுகின்றது என்பது விஞ்ஞானத்திற்கு எதிரான கருத்துக்களாக முன்வைக்கப்படுகின்றது. சமயம் என்பது மனிதனது ஒழுக்கவிழுமியம், நம்பிக்கை, பக்தி என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது எனினும், மனித வாழ்வுக்கு விஞ்ஞானம் எவ்வளவு முக்கியம் வாய்ந்த போதும் சமயத்தை ஒதுக்கி விட முடியாது. விஞ்ஞானத்தை விட மனித நேயத்தை விதைத்து உலக அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்கு சமயம் அதிக பங்காற்றுகின்றது என்றே கூறவேண்டும்.

## திருமந்திரப் பாடல்

யாவர்க்கும் மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கின்னுரை தானே

# கோயில்களும் அறப்பணிகளும்

S. துஷியந்தன் (J.P)
அபிவிருத்தி உத்தியோகத்தர்

இந்து மதம் மனித வாழ்வியலோடு பிறப்பு முதல் இறப்பின் பின் வரையும் கூட பல தத்துவார்த்த சிந்தனைகளை அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றது. ஆலயங்கள் வாயிலாக அறப்பணிகள் ஆற்றி சமூகத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை பயபக்தியுடன் மனித விழுமியங்களை மேற்கொள்வதன் மூலம் இம்மை முதல் மறுமை வரையான பயன்களை அடையத்தக்க வகையில் நெறிப்படுத்தப்படுகின்றது. பிற உயிர்களுக்கும் ஆலயங்கள் ஊடாக அறப்பணி செய்வது மேன்மையானதாகும்.

"அறம் செய்ய விரும்பு"

ஔவையார் ஆத்திசூடியினை ஆரம்பிக்கும் போது அடிப்படையில் ஆரம்பித்தது அறம் செய்ய விரும்பு என்பதாகும். அறம் எனும் போது ஆலயங்களுக்கு வருகின்ற அல்லது ஆலயங்களோடு தொடர்புடைய சமூத்தில் வாழும் மக்களுக்கு அவர்களின் ஜீவிதத்திற்கு வழி காட்டுவதும் உதவி புரிவதுமாக அமையும் எனலாம். அறம் என்பதற்கு "தர்மம்" என்றும் பொருள் கோடல் முடியும். அந்த வகையில், தர்மம் என்பது பயன் கருதியும் வேண்டல் அற்றும் ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வகையில், அன்னதானம் வழங்குவது என்பது இன்றியமையாத செயற்பாடாக காணப்படுகின்றது. ஆலயத்திற்கு வருகின்றவர்களுக்கு அன்னதானம் வழங்கும்போது ஏழை எளியவர்களுக்கு அண்டை அயலவர்களின் பசி போக்குவதன் மூலம் தாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் அகல வேண்டும் என மேற்கொள்வது சிறப்புக்குரியதாகும். இதன் சிறப்புக்களை நாம் மேலும் அறிவதாயின் அறுபத்தி நான்கு (64) நாயன்மார்களில் பலர் அறவழியில் நின்று அதாவது தானம் செய்து முத்தியடைந்த வரலாறுகளை நாம் கற்றுள்ளோம். இயற்பகை நாயனார், இளையான் குடிமாற நாயனார், விறண்மிண்ட நாயனார் போன்றவர்கள் அவற்றுள் சிலர். அறப்பணிகள் ஆற்றி சித்தர்களும் முத்தியடைந்துள்ளனர். அந்த வகையில்,

"எங்காயினும் வரும் ஏற்பவர் கிட்டது"

என்கிறார் அருணகிரிநாதர்.

"வறியவர்களுக்கு வழங்கி அவர்கள் இன்புறுவதைக்
காணுக! ஈந்தவரே வாழ்ந்தவரே! ஈயாதார் மாய்ந்தவரே
யாவார் ஈயாதவரை ஏன் படைத்தாய்
கச்சி ஏகம்பனே" என்கிறார் பட்டினத்தார். இங்கு அறப் பணியின் முக்கியத்துவம் சிறப்புறுகின்றது. அதுமட்டுமன்றி, ஆலயங்களில் பிறவுயிர்களுக்கும் அறப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறன. அந்தவகையில், உணவு பொருட்களை வழங்குதல், கோலம் போடுதல், விலங்குகள் பருகுவதற்கு நீர்த் தொட்டிகள் அமைத்தல் என்பன குறிப்பிடத்தக்கது. "பசுவினுக்கோர் வாயுறை" எனும் திருமூலரின் பாடல் வரிகள் அடிக்கோடிடத்தக்கதாகும்.

ஆலயங்கள் வாயிலாக அறநெறிப் பாடசாலைகளை நடாத்தி அதனூடாக மாணவர்களுக்கு இந்து தர்மம், இந்து மதத்தின் ஆற்றுப்படுத்தல்களை அறியச் செய்வதில் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது. எருவில் அறநெறி பாடசாலையானது பல அறப்பணிகளை கற்பித்து கொடுப்பதும் மாத்திரமன்றி சமூகத்தில் பல தொண்டுகளையும் செய்கின்றது. அதாவது, நூலகம் ஒன்றின் வாயிலாகவும் எழுத்தறிவித்தல் பணிகளை செய்வதனூடாகவும் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள், புத்தகப்பை, பாடசாலையில் அறப்பணி சார்ந்த நிகழ்வுகளுக்கு நிதியுதவிகள் வழங்குதல், போட்டி நிகழ்வுகளை நடாத்தி ஊக்கப்படுத்துதல் உதாரணமாக கோலம் போடுதல் போட்டி, கண்ணகி வழிபாடு தொடர்பான விடயங்களை மாணவர்கள் கற்கத்தூண்டும் வகையில் கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்துதல் என்பனவாகும்.

திருவிழா காலங்களின் போது ஆலயங்களிலும் சமூகத்திலும் அறப்பணி செய்தவர்களை கௌரவித்தல், அறங்காவலர்கள் என போற்றப்படும் நிருவாக சபையினரை தொடர்ச்சியாக பணியாற்றத்தக்க வகையில் பாராட்டுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், திருவிழா மற்றும் சடங்கு நிகழ்வுகளின் போது அறக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து சமயப் பெரியார்கள் வாயிலாக சொற்பொழிவுகள் மேற்கொள்ளப்பட்டு அறத்தத்துவங்கள் மக்களுக்கு விழிப்பூட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

சடங்கு காலங்களில் கலை விழாக்கள் மூலம் மக்களுக்கு எளிய முறையில் சென்றடையத்தக்க வகையில் அறப்பணிகளை ஆற்றிய நாயன்மார்கள், ஆழ்வார்கள்

சமய குரவர்கள் போன்று வேடமிட்டு அவர்கள் செய்த அறப்பணிகளை சமூகத்திற்கு சென்றடையத்தக்க வகையில் அரங்கேற்றுவதும் குறிப்பிடத்தக்கது. சங்ககாலம் முதல் இன்று வரையும் ஆலயங்களில் அறப்பணிகள் எண்ணற்ற வகையில் போதிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. பொற்காலம் என போற்றப்படும் சோழர் காலத்தில் மன்னர்கள் ஆலயங்கள் அமைப்பதையே பெரும் அறப்பணியாக மேற்கொண்டுள்ளனர். ஆலயம் அமைத்து அங்கு சமூகத்திற்கு தேவையான அத்தனை பணிகளையும் புரிந்துள்ளனர். மேலும் வேதம், உபநிடதம், வேதாந்தங்கள் எனப் பலவும் அறக் கருத்துக்களைக் கூற தவறவில்லை. வேதத்தில் இருக்கு வேதம் அறக் கருத்தை ஆணித்தரமாக கூறுகின்றது. அறக்கருத்துக்கள் சார்ந்த அல்லது அறக்கருத்துக்களை மட்டும் கூறுகின்ற நூலாக பல நூல்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் "தர்ம சாஸ்திரம்" எனும் நூல் சிறப்பானது.

எது எவ்வாறாயினும் அது அவ்வாறே நடக்கும். நம்பிக்கை வைப்பவரை, மத விழுமியங்களை பின்பற்றுபவர்களை சமூகம் மதிக்கும். இன்று மத செயற்பாடுகளுக்கு முரணாக பிறழ்வு வாழ்வு நடாத்துபவர்களை யாரும் ஏற்பதில்லை. எனது முன்னோர்கள், ஆழ்வார்கள் மனிதன் ஒரு முறைமைப்படுத்தப்பட்ட வகையில் வாழ்வதற்கு வழி காட்டிய முக்கிய செயற்பாடுகளில் ஆலயங்களில் அறப்பணிகள் இன்றியமையாததாகும்.

## ஊர் சுற்றுக்காவியத்தில் எருவில் பதி கூறும் பாடல்

இடமிகு பொன்னாடரங்கதனில் உயர் சோழன்முன்
எழில்கொள் எணிகோலமும் பூட்டிமாதவி தன்
குடமுலையின் மேல் நிறைந்திடு வடவுலாவுதனம்
குதிகள்செய் நாடகம் கண்டு கோவலரும்
மடமினொடு ஆசை கொண்டரிய தெருவீதியில்
வருவிரக தாகவே என்றுள மகிழ்ந்து
திடமிகுசொல்லால் உயர்ந்திடும் எருவில்நகர் வாழ்
செந்திருவை நாளும் என்சிந்தை மறவேனே

# வாழ்க்கைக்கான கல்விகளில் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்

**திரு. பூ. சண்முகநாதன்** (ஆசிரியர்)

புற உலகைப் பற்றிய பலவிதமான செய்திகளை அறிந்து கொள்ளும் கலையே "கல்வி" என்பதாகும். கல்விக்கு இரு அம்சங்கள் உண்டு. முதலாவது புறவுலகத் தொடர்பான உலகியல் பற்றிய கல்வி. இது வெறும் புத்தகப்படிப்பைத் தவிர வேறன்று. இரண்டாம் அம்சமான உயிரூட்டும் கல்விக்கு உள்ளிருப்பதனை வெளிக்கொண்டு வருதல் என்பதே பொருள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனித மேம்பாடுகள் மறைந்திருக்கின்றன. அவை உள்ளே மறைந்திருப்பதால் மனிதர்களுக்கு அவை பற்றிய உணர்வு இல்லை. மனிதர்களுக்கு மனித மேம்பாடுகளை வெளிப்படுத்த உந்துதல் கொடுக்கக்கூடியவர்களே இன்றைய தேவை. இம்மேம்பாடுகளை நாளாந்த வாழ்வில் இணைப்பதுதான் இணைக்கத்தூண்டுவதுதான் உண்மையான கல்வி. அதுவே அறநெறிக் கல்வியாகும்.

குழந்தைச் செல்வங்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் குழந்தைகளின் நன்னடத்தையை உருவாக்குவதற்குமுரிய பொறுப்பை ஏற்று, மனித ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் இந்துக்களின் செழிப்பான பண்பாடு மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தினை அவர்களுக்கு எடுத்துரைப்பதற்கும், அறநெறிப்படி வாழ்க்கை வாழ்ந்திடுவதற்காக இந்து சமய அறநெறிக் கல்வி தோற்றுவிக்கப்பட்டது. மனித மேம்பாட்டினை நோக்காகக் கொண்ட இக்கல்வி குழந்தைகளுள் மறைந்திருக்கும் சிறப்பியல்புகளையும் முழு ஆளுமைகளையும் வெளிக்கொண்டு வருகிறது. ஆகவேதான் அறநெறிக்கல்வித் திட்டம் "கல்வியின் சிறந்த குறிக்கோள் பண்புடைமையே" என்ற மகுட வாசகத்தை அடிப்படையாகக் கொண்டது. குழந்தைகள் அனைவரும் தெய்வீக ஒளிபெற்று அதில் திளைக்க வைக்கும் திட்டமே அறநெறிக் கல்வியின் திட்டமாகும்.

அறநெறிக் கல்வி ஒரு தலையிலிருந்து இன்னொரு தலைக்கு வெறும் செய்தியை மாற்றுவது அல்ல. அது ஒரு இதயத்திலிருந்து மற்றொரு இதயத்திற்கும் மேம்படுத்தும் பரிமாற்றம். இது பயிற்சி மூலம் நடைபெறுவது. இளம் இந்து சிறார்களின் இதயங்களில்

உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையும் திறமையும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்குதல் இவ் அறநெறிக் கல்வியின் நோக்கமாகும். அதுமட்டுமன்றி முழுமையான ஆளுமைத் தன்மையை வளர்க்கவும் பயிற்சியளித்து வழிகாட்டி ஒழுக்க நெறி சார்ந்த சமூகத்தை உருவாக்குதலே அதன் அடுத்த நோக்கமாகும்.

மேலும் மனிதனைப் பண்புள்ளவனாக மனிதநேயத்தைக் காப்பவனாக வாழ வழி செய்கின்றது. குழந்தையின் கடமை, பக்தி, ஒழுக்கக் கட்டுப்பாடு, விவேகம், மனித உறுதி ஆகியவற்றை வளர்க்கின்றது. அன்பு, அறம், கருணை இவற்றையெல்லாம் தெளிவுபடுத்துகின்றது.

அறநெறிக் கல்வி ஆன்மீக முன்னேற்றத்திற்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் உந்துதலாக அமைவதுடன் இலட்சிய நோக்கினை அடைவதற்கு பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டது.

* இந்து - சைவ வாழ்க்கை முறைகளைக் கற்கவும் அதன்படி வாழ்வதற்கும் சிறுவர்களுக்கு உதவுதல்.
* உள்ளார்ந்த மனித மதிப்புக்களின் நடைமுறைகளுக்கு ஊக்கமளித்தல்.
* கடமை, பக்தி, ஒழுக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இளம் மனதிற் பதியவைத்தல்.
* எல்லாச் சிறார்களுக்கும் அவர்களது எண்ணம், சொல் மற்றும் செயலில் தூய்மையும் ஒற்றுமையும் இருக்க வழிகாட்டல்.
* ஐம்புலன்களை மனக்கட்டுப்பாட்டின் மூலம் அடக்கியாள்வதற்கு ஒழுக்கம் மற்றும் சுய ஒழுக்கத்தினைப் பேணுவதற்குப் பயிற்சியளித்தல்.
* எல்லா நம்பிக்கைகளுக்கும் எல்லா மனித குலங்களுக்கும் இடையிலான ஒற்றுமை குறித்துச் சிறார்கள் நன்கு அறிந்திருக்க உதவுதல்.
* சரியான மற்றும் தவறானவற்றுக்கும் இடையில் வேறுபாட்டைக் காண்பதற்கு எப்போதும் உள்ளிருக்கும் தெய்வீகத்தினைப் பின்பற்றப் பயிற்சியளித்தல்.
* உலகில் ஒரு நேர் விளைவான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்காலத் தலைவர்களாக வாழ்வதற்குத் தேவையான தலைமைத்துவதிறன்களை வளர்க்க உதவுதல்.

இத்தகைய குறிக்கோள்களைக் கொண்ட அறநெறிக் கல்வியானது மனதை ஒருநிலைப்படுத்திக் கடவுள் நம்பிக்கையுடன் பிரார்த்தனை மேற்கொள்ள வழிகாட்டி வாழ்க்கையில் நல்லவற்றையெல்லாம் செய்து நல்லதோர் சமுதாயச் சூழலை ஏற்படுத்த வழி செய்கின்றது.

உலகியல் வெற்றிக்கு ஆன்மீகம் அவசியமானது. உலகியலில் மகிழ்ச்சி, துக்கம், வெற்றி, தோல்வி, பிறப்பு, இறப்பு என்ற நேர்வினையும் எதிர்வினையும் சேர்ந்தே உள்ளன. இவ்வாறான இரட்டை விளைவுகளைச் சமநிலையுடன் எதிர்கொள்வதற்கு மாணவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி தேவை. ஆன்மீகக் கல்வி புகட்டும் போது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒருமிக்கச் செய்யும் செய்முறைப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இதுவே மனிதனின் மெய்யான பண்பாகும். ஆன்மீகப் பயிற்சியோடு சமயம் சார்ந்த அறிவினைப் பெறும் பொருட்டு அறநெறி மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூல்களில் இறைவன், இறை தத்துவங்கள், வழிபாட்டு முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இறைவனைப் பற்றிய கருத்துக்களான இறை உண்மை, சைவ சமயம். அதன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் இறைவன் வீற்றிருக்கும் ஆலயம், வழிபாட்டு முறைகள் ஆலயத்திற்குச் செல்லும் முறைகள், ஆலயத்திலுள்ள இறைவர்களின் தோற்றப் பொலிவுகள் என்பனவும் மிக விளக்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறநெறிக் கல்வியில் நன்மைகளைத் தரும் நன்நெறிமுறைகளும் சேர்க்கப்பட்டுள்ளது. அறநெறி மாணவர்களுக்கு சிறு வயது முதலே அவர்களது நடத்தை தொடர்பில் சரி, பிழை ஆகிய கருத்துக்களை முறைப்படுத்தி பேணி, அவற்றைக் கைக்கொள்ளும்படி செய்யும் நோக்கில் மனிதர்களது நன்னடத்தை தொடர்பாகவும் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் நன்நெறி, நீதி நூல்கள் மூலமாகவும் நன்றெநிக் கதைகள் மூலமாகவும் அறநெறிக் கருத்துக்கள் கூறப்படுகின்றது.

அதுமட்டுமன்றி கலாசாரப் பண்பாட்டை வெளிப்படுத்தும் பாடவிதானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்துப் பண்டிகைகள் மூலம் இந்துப் பாரம்பரிய முறைகள் கலையம்சங்கள் என்பன வெளிக்கொணரப்படுகின்றன. அதுபோல் விரதங்கள் விழாக்களூடாக அறிவியல் சார்ந்த கருத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்களை சமூகமயமாக்கும் ஒரு நிறுவனமாக அறநெறிக் கல்வி முன்னுதாரணமாக விளங்குகிறது. மாணவர்களை சமூகத்தின் அங்கத்துவராக இணைத்துக் கொள்வதற்காக அவர்களால் எடுக்கப்படுகின்ற முயற்சியை ஊக்கப்படுத்தும் நோக்கில் அறநெறிப் பாடசலைகளில் வழங்கப்படுகின்ற குழுச் செயற்பாடுகள், தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற பயிற்சி மூலம் சமூகமயமாக்கல் இடம்பெறுகின்றது. இவ்வாறான முயற்சியும், பயிற்சியும் முறையான விதங்களில் இடம்பெறும் போதுதான் அச்சிறுவர்கள் வளர்ச்சியைக் கொண்டிருக்கிறார்கள். முதியோரை மதித்தல், பிறர் மீது அன்பு செலுத்துதல், கருணை, பிறருக்கு உதவி செய்தல் போன்ற மனித நேயப் பண்புகளை மாணவர்களுக்கு முறையான விதத்தில் வழங்குவதுடன் அத்தகைய சூழலையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இந்துசமய அறநெறிக் கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களாகவும், தெய்வீகம் மற்றும் மனிதப் பண்புளை மதிப்பவர்களாகவும் இருப்பார்கள். நாளாந்த வாழ்க்கையில் மனிதநேயத்தை கடைப்பிடிப்பவர்களாகவும் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் ஒற்றுமையை கடைப்பிடிப்பவர்களாகவும் நாளாந்த தியானம், பிரார்த்தனைகளில் ஈடுபடுபவர்களாகவும் மாணவர்களில் அன்புடையவர்களாகவும் இருப்பதால் அவர்களிடம் கற்கும் மாணவர்கள் சமூகத்தில் சிறந்த ஒழுக்கசீலர்களாக காணப்படுவார்கள் என்பது திண்ணம்.

இவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்ட இந்து சமய அநநெறிக் கல்வியினால் பெறும் இந்து சிறார்களிடமிருந்து பின்வரும் நடத்தை விளைவுகளைக் காண முடியும்.

* இந்து சமய அறநெறிப் பாடசாலைச் சிறுவர்கள் தங்களது நடத்தையில் விரைவான முன்னேற்றத்தை காட்டுகிறார்கள்.
* அவர்கள் அதிகாலையில் எழுந்திருக்கிறார்கள்.
* அவர்கள் தினமும் வழிபாடு மற்றும் பிரார்த்தனை செய்கிறார்கள்.
* அவர்கள் மிகுந்த கடவுள் பக்தியும் கடவுள் நம்பிக்கையும் கொண்டவர்களாக விளங்குகிறார்கள்.

* அவர்கள் பெற்றோர் மற்றும் வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்துகிறார்கள்.

* அவர்கள் நல்ல நடத்தையினை விருத்தி செய்தல், அடக்கம், பண்பாகப் பேசுதல் போன்றவற்றை வெளிக்காட்டுகிறார்கள்.

* அவர்கள் பொருட்களையோ நேரத்தையோ வீணாக்குவதைத் தவிர்க்கிறார்கள்.

* அவர்கள் உடை பாடசாலையில் ஒழுக்கம், சமூக நடத்தை போன்றவற்றில் நல்ல பௌதீக ஒழுங்கினை வெளிக்காட்டுகின்றார்கள்.

* அவர்கள் இயற்கையையும் சமாதானத்தையும் மதிக்கும் மனித பண்புகளையும், சிறந்த தலைமைத்துவத் திறன்களைக்' கொண்டவர்களாகவும் விளங்குவதோடு, நேர் சிந்தனை மற்றும் நேர் மனப்பாங்கைக் கொண்டவர்களாகவும் விளங்குகிறார்கள்.

பெற்றோர்களும் வயதில் மூத்தவர்களும் அறநெறிப் பாடசாலைச் சிறுவர்களிடமிருந்து நல்ல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார்கள். இந்து சமய அநறெநிக் கல்வியைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி அந்த சரியான குறிக்கோளை அடைவதற்கு பெற்றோர்களின் முழுமையான பங்களிப்பு மிக முக்கியமானதாகும். பிள்ளைகளைத் தொலைக்காட்சி பழக்கத்திற்கு அடிமையாக்காது அவர்களை நல்ல பொழுதுபோக்கு அம்சங்களான ஏதாவது ஒரு கலையில் ஈடுபடச் செய்தல் மிகவும் சிறந்ததாகும். இதற்குத் தம் பிள்ளைகளைத் தமக்கு அருகிலுள்ள அறநெறிப் பாடசாலைக்கு அனுப்புதல் பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.

## கோயிலை வலம் வருதல்

வலம் வருதல் என்பது வலது பக்கம் சுற்றிவருதல் என்பதேயாகும். பொதுவாக கோயில் வலம் வருவது வலது பக்கமாகத்தான் இப்படி செய்வதில் நாம் இறைவனுடன் கூடுதல் நெருக்குகின்றோம் என்பதுடன் நம்முன் ஜென்மங்களில் செய்த பாவமும் அழிந்துவிடும் என்ற நம்பிக்கையாகும்.

கோயிலை வலம் வருதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன உடற்பயிற்சியாகும். உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும்.

# தமிழரின் மருவிய பாரம்பரிய விளையாட்டுக்களும் கொண்டாட்ட விழாக்களும்

கவிஞர் மாணிக்கஜெயந்தன்

1) தமிழ் அன்னை வழித்தோன்றல் பாண்பாடு
பண்பாடோடு பண் தமிழர் கொண்டாட்டம்
முந்தையோர் விளையாட்டு முதுமையிலும் சக்தி
நம்மவர் மனதிலே அசையாது இனிக்கும்.

2) கொம்புச் சந்தியிலே கொம்பு முறியாட்டம்
குறிப்பாக இருபாலர் கூடுவார் கூட்டம்
வடசேரி தென்சேரி பாட்டிலே நோட்டம்
வசை பாடி ஆடுவார் வடிவான ஆட்டம்

3) ஏலேலோ ஏலேலோ ஆடுவார் ஊஞ்சல்
இழுகயிறு அறுந்தாலோ இரங்குவார் பார்த்து
தாலேலோ தாலேலோ தாயின் பாட்டு
தத்தக்க தகதக்க குழந்தை விளையாட்டு.

4) நாயும் இறைச்சியும் நண்டு நரியாட்டம்
நலமோடு பாடுவார் கிட்டிப் புள்ளாட்டம்
காயும் நிலா வேளையிலே கண்ணாப் பொத்தியாட்டம்
காளையரும் கன்னியரும் சடுகுடு ஆட்டம்

5) மாம்பருப்பு ஒற்றுவதில் மகிழுவர் சிறுவர்
மரம் தாவும் குரங்காக ஏறுவார் சறுக்கில்
அழகு மிகு கோலத்தில் அலங்காரப் பாஷை
அடித்ததுமே நொறுக்குவார் துடுக்கான இளைஞர்

6) தலையாணை போரிலே சாய்ந்திட அடிப்பார்
தவறாக விழுந்திட்டால் சாய்ந்திடுவர் கீழே
தலை பொருள் வைத்து சமநிலை ஓட்டம்
தக்க நல்ல இளைஞர்கள் கயிறுயிழுத்தாட்டம்

7) பிள்ளைக்கு பெயர் சூட்ட பெயர் நூறு சொல்வர்
பெரும்பாடு பட்டே தான் பெயர் ஒன்றை வைப்பர்
நொல்லை மொழிந்து சில குறை கூறிச் செல்வர்
நொண்டியாய் இருந்தாலும் அழகு பெயர் வைப்பர்

8) பருவம் அடைந்து விட்டால் பட்டாசு வெடிக்கும்
பார்ப்போர்க்கு கேட்போர்க்கும் பகல் இரவாய் தோன்றும்
உருமாறும் காலமென்று உலகோர் புரியும்
உணர்வாலே அவள் உள்ளம் உவகையில் துள்ளும்

9) புதுவருடப் பிறப்பென்றால் புத்தாடை மோகம்
பொங்கல் திருநாளில் இனிப்பான சாதம்
தீபத் திருநாளில் திருவிழாக் கோலம்
தெருவெங்கும் ஏற்றுவர் தீபத்தில் கோலம்

10) ஆலய விழாவென்றால் அதிரடியாட்டம்
ஆடவர் ஆடுவர் அழகு மயிலாட்டம்
கோலமாய் பெண்கள் குரவையில் நாட்டம்
குத்து விளக்கேந்தி கூடி வரும் கூட்டம்

11) அழைப்பது கொடுக்க அழகான காட்டு
எம்மரபழைப்பில் வெற்றிலை பாக்கு
களைப்போடு போவோர்க்கு கனிவான பானம்
களைப்பின்றி போவோர்க்கு கடும் குளிர்களி

12) தாமரை வாழையிலைகளில் வழங்கினர் உணவு
தாளம் போடும் தட்டும் தண்ணீருக்கு ஜொக்கு
தட்டெடுக்க தவிக்கின்றான் கிட்டு
தள்ளிப் போவென்று தவிக்கின்றான் பட்டு

13) வரிசையில் நிற்கையில் வயிற்றுப்பசிபோச்சி
அரிசிச் சோறு காஞ்சியே போச்சி
தொண்டையில் போகையில் அவை எங்கு போச்சி
அண்டையில் பார்த்து அள்ளி வீசிரான் கிட்டு.

14) தமிழரின் திருமண விழாவென்றால் மண்டபபேச்சி
அங்கே மணமகன் மணமகள் திண்டாட்டக் காட்சி
உறவு முறை சொல்லத் தெரியாது வார்த்தையில் - நொண்டி
உறவு சொல்லத் தெரியாத தம்பதியென ஊரெல்லாம் பேச்சி

15) மேலைத்தேச கலாசாரம் கலந்ததன் கோலம்
கீழைத் தேச மக்களின் உறவாடல் போச்சி
ஒரு திருமணத்தில் இன்னுமோர் திருமணம் - பேசியிடும் காட்சி
எல்லாமே மேலைத் தேச கலாசாரத்தால் கெட்டுப் போச்சி

16) செல்போன் மோகத்தால் உடல் கெட்டுப்போச்சி
செல்போன் குறுஞ் செய்தியால் வாழ்நாள் போச்சி
கண்ணிமை பொழுதும் வாழ்க்கை வீணாகப் போச்சி
கணக்கிட்டால் வாழ்ந்ததன் பயனென்ன ஆச்சி

"தமிழர்களாக வாழ்வோம்
பண்பாட்டுக் கோலங்கள் சிதையாமல் காப்போம்"

**நல்வழி**

புண்ணியத்தால் இன்பமுண்டாகும். பாவத்தால் துன்பமுண்டாகும். எனவே பாவத்தை ஒழித்துப் புண்ணியமே செய்ய வேண்டும்.

# இந்து விரதமும் அனுட்டிக்கும் முறையும்

**திரு.வேல்நாயகம் கீர்த்திவர்மன்**
(சிறைச்சாலை உத்தியோகஸ்தர்)

இந்து மதத்தில் ஆழ்ந்த தத்துவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் விரதமும் ஒன்றாகும் சைவ சித்தாந்த செந்நெறி நின்று ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு விரதங்கள் அவசியமாகின்றன இது ஆன்ம சாதகர்களுக்கு மிக இன்றியமையாதது விரதம் என்றால் என்ன?

விரதம் என்றால் சித்தத்தை ஒரு முகப்படுத்தல் என்பது பொருள் இதனை வட மொழியில் **"சித்த ஏ ஹாக்ரதை"** என கூறுகின்றனர் மனதை ஐம்பொறி வழிகளில் செல்லாது தடுத்தற் பொருட்டு இறைவனை நாடி பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து உள்ளன்போடு வழிபடுதல் விரதமாகும் ஆசாரத்துடன் விரதமிருக்க வேண்டும் விரதமானது நோன்பு, கிழமை, தபஸ் என அழைக்கப்படுகின்றது

## விரதம் அனுட்டிப்பதன் நோக்கம்

விரதம் அனுட்டிக்கும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இரு வகைப்படுத்தலாம்
01. காமிக விரதங்கள்
02. நிஷ்காமிக விரதங்கள்

காமிக விரதம் என்றால் ஏதேனும் ஒரு குறிக்கோளை வேண்டி அனுட்டிக்கப்படும் விரதமாகும். அடுத்து நிஷ்காமிக விரதமென்றால் எவ்வித பயனையும் கருதாமல் அனுட்டிக்கப்படும் விரதமாகும் விரதங்கள் குடும்ப நலனைவேண்டியும்,கணவன் பிள்ளைகளின் வாழ்வு சிறக்கவும், நோய்களிலிருந்து விடுபடவும், மாங்கல்யம் நிலைக்கவும், எதிர்காலம் சிறக்கவும்,குழந்தை பேற்றுக்காகவும் வறுமை துன்பம் சாபம் நீங்கவும் விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

விரதத்தை அனுட்டிக்க கூடியவர்களும் முடியாதவர்களும் குழந்தைகள், வளரும் பருவம் நன்றாக சாப்பிட வேண்டும். எனவே அவர்கள் தவிர்க்க வேண்டும் வயோதிபர்கள்

பலவீனமானவர்கள் அவர்களும் தவிர்க்க வேண்டும். இதேபோல் கர்ப்பிணிகளின் வயிற்றில் வளரும் பிள்ளைகளின் போஷாக்கிற்காக உண்ண வேண்டும் எனவே இவர்களும் தவிர்க்க வேண்டும்.

ஏனையவர்கள் விரதம் அனுட்டிக்கலாம் ஆனால் திருமணமாகாத பெண்கள் பெற்றோரிடமும் திருமணம் முடித்த பெண்கள் கணவனின் அனுமதியுடன் விரதம் அனுட்டிக்கலாம்

**விரத காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நற்கருமங்கள் :-**

01. வைகறையில் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடைதரித்து, விபூதி தரித்து, தியானம், செபம், பூசை பாராயணம் முதலிய கருமங்களில் ஈடுபடுத்தல் வேண்டும்

02. கோலம் போடுதல். அழகுக்காகவும் ஜீவராசிகளுக்கு உணவளிப்பதற்காகவும், மனமகிழ்ச்சிகாகவும், உடற்பயிற்சிக்காகவும் கோலம் போடுதல்

03. ஆலய வழிபாட்டில் ஈடுபடுதல் - தோய்த்து உலர்ந்த ஆடையணிந்து ஆலயம் செல்ல வேண்டும் செல்லும் போது பூசைப்பொருட்களை கொண்டு செல்லுதல், விஷேட பூசையில் பங்கு பற்றுதல், ஆலயத்தை வலம் வருதல், கரங்குவித்து வணங்குதல், தோப்புக்கரணம் போடுதல், குட்டி வழிபடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் இதன் மூலம் மனவழுத்தம் குறையும் மன அமைதி ஏற்படும் இறைபக்தி அதிகரிக்கும்

04. ஆன்மீக சிந்தனையை வளர்த்தல் - நாம் மனச்சுத்தியில் ஈடுபட வேண்டும். மனதில் தோன்றும் தீய எண்ணங்களையும் செயல்களையும் தவிர்க்க வேண்டும். விரதம் தொடர்பான புராண இதிகாச நூல்களில் கூறப்பட்ட கதைகளை படித்தல் அல்லது கேட்டல் சிறப்புக்குரியதாகும்.

தான தருமங்களில் ஈடுபடுதல் - இக்காலத்தில் பிறரின் துன்பங்களுக்கு உதவ வேண்டும். உடை, உணவு போன்றவற்றை தானம் செய்தல் வேண்டும்.

**உபவாசம் :-** உபவாசதினத்தன்று விரதத்துக்குரிய தெய்வத்தை குறித்து பூரணமாக விரதத்தை அனுட்டிக்க வேண்டும் விரத தினத்திற்கு அடுத்த நாள் நித்திய கருமத்தை முடித்து செபம், தியானம், பூசை செய்து பாரணை பண்ணுதல் வேண்டும். சூரியன் உதித்து ஆறு நாளி கைக்குள் பாரணை பண்ணதல் வேண்டும் என்பது விதி சூரியன் உதிப்பதற்கு முன் பாரணை செய்வது கூடாது என நூல்கள் கூறுகின்றன பாரணை என்பது உபவாசம் முடித்து உணவை உட்கொள்ளுவதைக் குறிக்கும் சூரியன் உதித்து ஆறு நாளிகைக்குள் (காலை 8.30) பாரணை பண்ணுவதில் தவிர்க்க முடியாத தடைகள் ஏற்பட்டால் பாரணை உணவை சுவாமி அறையில் /கும்பத்தின் முன் / சுவாமி படத்தின் முன் என்பவற்றில் ஒன்றில் குறித்த விரத தெய்வத்திற்கு படைத்து விதிப்படி பாரணை பண்ணும் நேரத்திற்குள் அதனை முகர்தல் வேண்டும் பின்னர் வந்து எப்போதாவது அதனை உண்ணலாம்.

ஒரு விரதம் பாரணை பண்ணும் நாளில் இன்னுமோர் விரதம் ஆரம்பமாகுமாயின் பாரணைக்குரிய நேரத்தில் வாழை இலையில் இரண்டு இலைகளுடன் கூடியதாக துளசிக்கந்துகளை வைத்து சிறிய பாத்திரத்தில் நீரும் வைத்து செபம், தியானம், முதலியவற்றை செய்த பின்னர் அதனை உட்கொண்டு சிறிய நீரும் பருகி அவ்வாழை இலையை பாரணை செய்து முடிப்பது போல் செய்தல் வேண்டும்.

## விரதகாலங்களில் செய்யக் கூடாதவைகள்

01. பஞ்சமா பாதங்களைச் செய்தல்
02. பகல் நித்திரை செய்தல்
03. பிறருடன் சண்டை பிடித்தல், வீண் வார்த்தை பேசுதல்
04. களியாட்ட நிகழ்வுகளில் பங்கு கொள்ளல்
05. புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல்

## விரத வகைகள்

01. நாளை அடிப்படையாகக் கொண்டவை
    - (உ+ம்) ஆடிச்செவ்வாய், ஆவணி ஞாயிறு

02. திதியை அடிப்படையாகக் கொண்டவை
(உ+ம்) சஷ்டி, சதுர்த்தி

03. நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை
(உ+ம்) தைப்பூசம்,மாசிமகம்

04. மாதங்களை அடிப்படையாகக் கொண்டவை
(உ+ம்) ஆடிப்பூசம்

05. கடவுளுக்குரிய விரதங்கள்

1. சிவனுக்குரியவை - சிவராத்திரி, பிரதோஷவிரதம், கேதார கௌரி விரதம்
2. அம்மாளுக்குரியவை - நவராத்திரி, ஆடிப்பூசம்
3. விநாயகருக்குரியவை - விநாயகர் சஷ்டி, சதுர்த்தி விரதம்
4. முருகனுக்குரியவை - கந்த சஷ்டி, திருக்கார்த்திகை விரதம்
5. விஷ்ணுவுக்குரியவை - ஏகாதசி, சொர்க்கவாசல், திருப்பாவை
6. சூரியனுக்குரியவை - தைப்பொங்கல், ஆவணி ஞாயிறு
7. சனிஸ்வரனுக்குரியவை - புரட்டாதிச் சனி
8. வைரவருக்குரியவை - ஐப்பசிப்பரணி, சித்திரைப் பரணி
9. ஐயப்பனுக்குரியவை - ஐயப்ப விரதம்

**பொது விரதங்கள்**

அமாவாசை - தகப்பனில்லாதவர்கள்
பௌர்ணமி - தாயில்லாதவர்கள்

விரத காலங்களில் சத்துவ குணமுடைய இனிய உணவுகளை உண்ண வேண்டும். மதியம் மாத்திரம் சாதம் உண்ண வேண்டும். விரதமிருப்பவர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கையும் இறையருளும் அவருக்கு வேண்டிய பலனை கிடைக்க செய்கின்றன விரதங்கள் சுகாதாரத்தையும் விஞ்ஞானத்தையும் அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றன.

# கண்ணகியம்மன் ஆலய கட்டட வளர்ச்சிக்காக நிதி மற்றும் கட்டடப் பொருட்களை நன்கொடை செய்த பரோபகாரிகள் விபரம்

எமது கண்ணகித்தாய்க்கு திருச்சடங்கு செய்யும் 15 குடி மக்களும் பொதுக் கூட்டத் தீர்மானத்திற்கேற்ப தலா ஒவ்வொரு குடிகளும் ஐந்து இலட்சம் ரூபா வீதம் அன்பளிப்பு செய்துள்ளனர்

கண்ணகி பக்தர்கள் என்ற அடிப்படையில் நற் கருமத்திற்கு உகர்ந்தளித்த உபயங்கள் பின் வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது

| | |
|---|---|
| 01. திரு.இ சோமசுந்தரம் சட்டத்தரணி | 100,000/= |
| 02. திரு.வ. நவரெத்தினம் | 61,000/= |
| 03. திரு. க. தருமலிங்கம் | 50,000/= |
| 04. திருமதி. கஜேந்தினகிருஷ்ணகீதன் | 30,000/= |
| 05. திரு.இ.பரமானந்தம் | 25,000/= |
| 06. திரு.சி. ஜெயலிங்கம் | 25,000/= |
| 07. திரு.க. குசலேந்திரராசா | 20,000/= |
| 08. திரு.ச.ஆதித்தமூர்த்தி | 20,000/= |
| 09. திரு.ஜெயானந்தம் | 20,000/= |
| 10. திரு.தி நிருபணன் | 20,000/= |
| 11. சந்திரசேரம் கார்த்திகா | 20,000/= |
| 12. சிவலிங்கம் யோகம்மா | 20,000/= |
| 13. திரு.சே.நகேந்திரன் | 20,000/= |
| 14. திரு. ராஜ்கிரேன் | 20,000/= |
| 15. ஜெயநேசன் பிரியா | 20,000/= |
| 16. திருமதி ரஞ்சிதமலர் உதயகுமார் | 15,000/= |

| | |
|---|---|
| 17. சிவன் ஸ்ரோர்ஸ் | *15,000/=* |
| 18. திரு அமல்ராஜ் | *11,500/=* |
| 19. திரு. வ. சசி | *11,400/=* |
| 20. திரு. K. கார்த்திக் | *10,000/=* |
| 21. திரு.அசோக்குமார் | *10,000/=* |
| 22. சீரான சிங்கம் இந்துமதி | *10,000/=* |
| 23. பே.கணேஸ்வரி | *10,000/=* |
| 24. திரு. கணேசபிள்ளை - உதயகுமார் | *10,000/=* |
| 25. திரு.க.விவேகானந்தராசா | *10,000/=* |
| 26. திரு.வி.திவாணஜன் | *10,000/=* |
| 27. திரு.ப.சுரவதணன் | *10,000/=* |
| 28. திரு.அ.சசிகுமார் | *10,000/=* |
| 29. திரு.சேகர் | *10,000/=* |
| 30. ம. நர்மலா | *10,000/=* |
| 31. திரு.க.சவியதாஸ் | *10,000/=* |
| 32. திரு.ப.சுமைதன் | *10,000/=* |
| 33. திரு.வ. கிருஷ்ணமூர்த்தி | *10,000/=* |
| 34. திருமதி.செ.நடராஜதுரை | *10,000/=* |
| 35. திரு.த.ரவேந்திரன் | *10,000/=* |
| 36. சத்திய வரதன் தர்சன் | *10,000/=* |
| 37. திருமதி.யுவேனி கோகுலன் | *10,000/=* |
| 38. திரு.ச.சுதாகரன் | *10,000/=* |
| 39. திரு.மா.அருளானந்தம் | *10,000/=* |
| 40. திரு. சண்முகராசா | *10,000/=* |
| 41. திரு.க. பிரபாகர் | *10,000/=* |
| 42. திருமதி சுமதி குணராஜ் | *10,000/=* |

| | |
|---|---|
| 43. திரு.சி.யோகநாதன் | 10,000/= |
| 44. திரு.மா.சிவராசா | 10,000/= |
| 45. திரு. S. சுதேந்தன் | 10,000/= |
| 46. திரு. சத்தியபாமா | 10,000/= |
| 47. மோ. அமலா | 10,000/= |
| 48. சதீஸ்குமார் வதனி | 10,000/= |
| 49. தே. கௌசியா | 5,000/= |
| 50. விஜயகுமார் ரெபேகாறோஸ் | 5,000/= |
| 51. திரு. சி. லிங்கநாதன் | 5,000/= |
| 52. திரு. ஜெ. விஜயகாந் | 5,000/= |
| 53. திரு. S. குணராசா | 5,000/= |
| 54. கோ. சவுந்தலா | 5,000/= |
| 55. பி. பவதாரணி | 5,000/= |
| 56. செந்தூரன் உதயகுமார் | 5,000/= |
| 57. சு. துஸியந்தினி | 5,000/= |
| 58. திரு. தி. சிவலிங்கம் | 5,000/= |
| 59. திரு. க தருமலிங்கம் | 5,000/= |
| 60. திரு. க. மோகன் | 5,000/= |
| 61. திரு. சி. காண்டீபன் | 5,000/= |
| 62. திருமதி. யோகேஸ்வரி | 2,000/= |
| 63. இ. தவமணி | 2,000/= |
| 64. திரு. க. அமிர்தலிங்கம் | 1,100/= |
| 65. கோடைமேடு நவசக்தி வித்தியாலய அதிபர் | 1,000/= |

# கட்டடப்பொருட்கள் அன்பளிப்பு

01. திரு.த. முருகையா - 150 வேக் சீமெந்து

மாபிள்

02. கருவறை - து. திலக்சன்

03. 1ம் மண்டபம் - தருமலிங்கம் குடும்பம்

04. 2ம் மண்டபம் - திரு. வீ. வடிவேல் குடும்பம்

05. 3ம் மண்டபம் - திருமதி. நிவேதனா இளங்குமார்

06. மாரியம்மன் மண்டபம் - திரு. க. சின்னராசா

07. மழுவரன் கோயில் - கோகுல்ராஜ் பமிலா

08. மண்டப சில்வர் கதவு - திரு. யோ. தவராஜா

09. உள்வீதி முன் கதவு - திருமதி. முருகேசு மணியம்மா

10. உள்ளக மின் இணைப்பு - திரு. ந. ரேணுகாந்தன் (பயனியர் சவுண்ட் சேர்விஸ்)

11. நாகதம்பிரான் ஆலய முன் கொட்டில் - சிபிக்ஷன் ஹாட்வெயார்

12. கருவறை கதவு - திரு. வி. மதிவதனன் மரவாலை

13. திரு. அ. குமாரகுலசிங்கம் (பில்லர் 15 வாளி)

14. திரு. சு. வெற்றிவேல் - 54 வேக் சீமெந்து

15. பாலசூரியா மக்கள் குடும்பம் - 25 வேக் சீமெந்து

16. திரு. க. கோகுலநாதன் - 10 வேக் சீமெந்து

17. திரு. சோ. பவளசிங்கம் - 10 வேக் சீமெந்து

18. திரு. சீ. தீசன் - 10 வேக் சீமெந்து

19. திரு. அ. சுந்தரலிங்கம் - 10 வேக் சீமெந்து

20. திரு. சதீஸ் - 10 வேக் சீமெந்து

21. திரு. கோ. நடேசமூர்த்தி - 10 வேக் சீமெந்து

22. ஜெயராசா லுக்சன் - 10 வேக் சீமெந்து

23. கணபதிப்பிள்ளை நடேஸ்வரன் - 10 வேக் சீமெந்து

24. திரு. சி. ராஜன் - 10 வேக் சீமெந்து

25. திரு. சு. சசிகரன் - 7 வேக் சீமெந்து

26. தயாபரன் யுவசங்கரி - 5 வேக் சீமெந்து

27. கார்த்திக் - 5 வேக் சீமெந்து

28. சி. அருட்செல்வி - 5 வேக் சீமெந்து
29. அ. சர்மா - 5 வேக் சீமெந்து
30. கி. பருசன் - 5 வேக் சீமெந்து
31. பே. அற்சுதன் - 5 வேக் சீமெந்து
32. த. விஜயகுமார் - 5 வேக் சீமெந்து
33. த. விஜயகுமார் - 5 வேக் சீமெந்து
34. ச. தினேஸ் - 5 வேக் சீமெந்து
35. ச. பாக்கியராசா - 5 வேக் சீமெந்து
36. சீ. கிருபைராசா - 5 வேக் சீமெந்து
37. பே. யசோதினி - 5 வேக் சீமெந்து
38. கிருஷ்ணரூபன் சிவாஜினி - 5 வேக் சீமெந்து
39. சொர்க்கலிங்கம் - 5 வேக் சீமெந்து
40. பே. சசிசகரன் - 5 வேக் சீமெந்து
41. செல்வராசா - 5 வேக் சீமெந்து
42. வீ. ஞானசெல்வம் - 5 வேக் சீமெந்து
43. ஞானசேகரன் சிந்துஜன் - 5 வேக் சீமெந்து
44. சந்திரசேகரம் கோமளா - 5 வேக் சீமெந்து
45. மாதவன் ஜனஜா - 4 வேக் சீமெந்து
46. தே. நிலக்சன - 2 வேக் சீமெந்து
47. லோஜினி - 2 வேக் சீமெந்து
48. இராஜேந்திரன் புஸ்பராணி - 2 வேக் சீமெந்து
49. ந. சகானா - 2 வேக் சீமெந்து
50. தி. ஜெயநாதன் - 2 வேக் சீமெந்து
51. த. பொன்னம்மா - 2 வேக் சீமெந்து
52. பொ. சவுந்தலா - 2 வேக் சீமெந்து
53. தி. நேறிசா - 1 வேக் சீமெந்து
54. தி. தங்கநாயகி - 1 வேக் சீமெந்து
55. திரு. ப. கிருஸ்ணபிள்ளை - 3/4 கல் சீமெந்து 30 வேக்
56. திரு. சி. மகேந்திரன் - 3 கீப் சக்கைக்கல்
57. பிரசுர அன்பளிப்பு - திரு. திருமதி. ஜீவரெத்தினம் குடும்பம் (டனுஷான் கொம்யூனிகேசன்)











எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு. 065 2222607